தர்மசக்கரம்



ருத்ரோத்காரி ௵ தை மீ   சக்கரம் 33 ஆரம் 1

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை-639 115   திருச்சி ஜில்லா

சந்தாதாரர்களுக்கு அறிவிப்பு

தர்ம சக்கரம் தை மாத இதழ் முதல் அடுத்த மார்கழி மாத இதழ் வரை பன்னிரண்டு இதழ்களும் ஒரு சக்கரமாகக் கணக்கிடப்படுகின்றன.

தர்ம சக்கரத்தில் வரும் விஷயங்கள் செய்தித் தாள்களில் உள்ளவை போன்று தாற்காலிகமானவைகளாக இல்லாமல் நிரந்தரமான தத்துவ ஆராய்ச்சியாக இருக்கின்றன. ஆதலால் ஓர் ஆண்டுக்கான பொருளடக்கத்தை அச்சாக்கி மார்கழி மாத இதழுடன் வைத்து ஒவ்வொரு ஆண்டும் அனுப்புகிறோம். தை முதல் மார்கழி முடிய பன்னிரண்டு மாத தர்மசக்கர இதழ்களையும் அப்பொருளடக்கத்தை வைத்துப் பைண்டு செய்துகொண்டால் ஒரு நல்ல புத்தகமாக அமையும். நாம் படிப்பதற்கும் மற்றவர்களுக்குப் படிக்கத் தருவதற்கும் வசதியாக இருக்கும்.

ஆதலால் தர்ம சக்கரத்தில் புதிய சந்தாதாரர்கள் சேரும்போது தை இதழ் முதலே சந்தாதாரராய்ச் சேர்ந்துகொண்டு பயன்பெறக் கோருகிறோம். அன்பர்கள் முயன்று தை மாத இதழ் முதலே புதிய சந்தாதாரர்களை அறிமுகப்படுத்திப் பலரையும் ஆத்மீக வாழ்க்கையில் ஈடுபடச் செய்யக் கோருகிறோம்.

குறிப்பிட்ட அளவே இதழ்கள் அச்சாக்கப்படுவதால் கூடிய விரைவில் தை மாதம் புதுப்பித்துக்கொள்ள வேண்டிய பழைய சந்தாதாரர்களும் உடன் புதுப்பித்துக்கொண்டு மற்றும் பலரையும் புதிய சந்தாதாரர்களாக அறிமுகம் செய்யக் கோருகிறோம். ஆண்டு சந்தா 1—6—82 முதல் ரூ. 15-00 ஆகவும், சகாய சந்தா ரூ. 10-00ஆகவும் உயர்த்தப்பட்டிருக்கிறது. சந்தாத்தொகையை அனுப்பும்போது மறவாமல் சந்தா எண்ணையும் குறிப்பிடக் கோருகிறோம்.

தர்ம சக்கர இதழ்கள் மாதந்தோறும் சந்தாதாரர்களுக்குத் தவருமல் கிடைப்பதற்கு முறை வகுக்கப்பட்டிருக்கிறது. ஆயினும் இதழ் கிடைக்கவில்லை என்கிற புகார்கள் வருவதற்குக் காரணம் மூன்றுவிதமாக இருக்கலாம். முதலாவது அவர்களுடைய சந்தா சென்ற மாதத்தோடு தீர்ந்திருக்க வேண்டும். இரண்டாவது இங்கு அனுப்பப்பட்டுத் தபாலில் சற்றுத் தாமதமாகக் கிடைக்கலாம். தமிழ் மாதம் 10ஆம் தேதிவரை கிடைக்காவிட்டால் தான் இதழ் தவறி இருக்கக் கூடும் என்று தீர்மானிக்கவேண்டும். அதன் பிறகு இதழ் கிடைக்காத விபரம் எங்களுக்கு எழுதலாம். மூன்ருவது நாங்கள் அனுப்பியும் உங்களுக்குக் கிடைக்காத காரணம் போஸ்ட் ஆனபிறகு தபாலில் தவறுவதே ஆகும். நாங்கள் இதழ் அனுப்பாமல் இருந்துவிடுவதாகச் சில சந்தாதாரர்கள் கருதுவது தவறு. தபாலில் இடையில் தவறுவதற்குத் தபால் இலாக்காவுக்குப் புகார் செய்தும் எங்களுக்கு எழுதியும் பெறுவதைத் தவிர வேறு என்ன செய்யமுடியும்? இந்த விபரங்களைச் சந்தாதாரர்கள் அறிந்துகொள்வார்களாக.

83-2

தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

சக்கரம் 33 | ருத்ரோத்காரி ஹு தை மீ | ஆரம் 1

பொருளடக்கம்

சந்தா விவரம்

டிபாஸிட் சந்தா : ரூ. 150 அனுப்பி இங்கு டிபாஸிட் செய்துவிட்டால் டிபாஸிட் இங்கு இருக்கும் வரையில் மாதந்தோறும் தர்ம சக்கரம் பத்திரிகை தங்களுக்கு வந்து கொண்டிருக்கும். ஆண்டுதோறும் சந்தா செலுத்திப் புதுப்பிக்க வேண்டியதில்லை. பத்திரிகை வேண்டாம் என்று கருதும்பொழுது டிபாஸிட் செய்த ரூபாய் நூற்றைம்பதையும் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். இந்தத் திட்டம் உள்நாட்டுக்கு மட்டும் உரியது.

ஆண்டு சந்தா : ரூ. 15 செலுத்தியது முதல் அல்லது அடுத்த மாதம் முதல் பன்னிரண்டு மாதங்களுக்கு ஒவ்வொரு தமிழ் மாதமும் முதல் தேதியில் கிடைக்கும்படி பத்திரிகை அனுப்பப்படுகிறது.

சகாய சந்தா : மாத வருவாய் ரூ. 200 அல்லது ஆண்டு வருவாய் ரூ. 2400க்கும் குறைவாக உள்ளவர்கள் ஆண்டு சந்தா பதினைந்து செலுத்த இயலாது இருந்தால் ரூபாய் பத்து அனுப்பலாம். பாக்கி ரூபாய் ஐந்தைப் பாண்டிச்சேரி S. விஸ்வநாதன் 'தர்ம சக்கர உதவிநிதி'யினின்று ஈடுசெய்து கொள்கிறோம். தெய்விக விஷயமாதலால் ரூ. 15 செலுத்த இயலுகிறவர்கள் இந்தச் சலுகையைப் பயன்படுத்த வேண்டாம்.

தமிழ் நாட்டிலும் பாண்டிச்சேரியிலும் உள்ள அரசாங்கப் பொது நூலகங்கள் அனைத்துக்கும் தர்ம சக்கரம் அன்பர்களின் உதவியால் தொடர்ந்து அனுப்பப்பெறுகிறது. நூலக நிர்வாகியிடம் கேட்டுப் பெற்றுப் படித்துப் பயனடையக் கோருகிறோம்.

உள்நாடு தனி இதழ் ரூ. 1-50 வெளிநாடு தனி இதழ் ரூ. 3-00

உள் நாடு வருட சந்தா : ரூ. 15-00 வெளிநாடு வருட சந்தா : ரூ. 35-00

அந்தர்யோக விவரங்கள்

பெரியார் ஜில்லா—ஆப்பக்கூடலில் 22-1-84 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண ச்மரச சன்மார்க்க சங்கம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி துருவானந்தர்

இராமநாதபுரம் ஜில்லா—இராஜபாளையத்தில் 29—1—84 ஞாயிறு

இடம்: பழையபாளையம் பாரதி கல்யாண மண்டபம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்
உணவு வசதி: மதிய உணவுக்கு ரூ. 1-50 செலுத்திச் சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

திருநெல்வேலி ஜங்ஷனில் 29—1—84 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ம. தி. தா இந்து உயர்நிலைப்பள்ளி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி பரானந்தர்

வடஆற்காடு ஜில்லா—வேலூரில் 29—1—84 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண ஆஸ்ரமம் (பாலாறு பழைய பாலம் அருகில்)
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 5-00 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி போதானந்தர்
உணவு வசதி: நேரில் பகல் உணவுக்கு ரூ. 1-50 செலுத்திச் சீட்டுப்பெற்றுக் கொள்ளலாம்.

வடஆற்காடு ஜில்லா—மேக்களூரில் 4—2—84 சனிக்கிழமை

இடம்: ஸ்ரீ நவநீத கோபாலகிருஷ்ண ஆலயம்
நேரம்: காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

வடஆற்காடு ஜில்லா—ஆரணியில் 5—2—84 ஞாயிற்றுக்கிழமை

இடம்: குசப்பாளையம்-கில்லா-அருள்மிகு சீனிவாசப் பெருமாள் ஆலயம்
நேரம் : காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

வடஆற்காடு ஜில்லா—வேலூரில் 5—2—84 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண ஆச்ரமம் (பாலாறு பழைய பாலம் அருகில்)
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 5-00 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி குஹானந்தர்
உணவு வசதி: நேரில் பகல் உணவுக்கு ரூ. 1-50 செலுத்திச் சீட்டுப் பெற்றுக் கொள்ளலாம்.

அந்தர்யோக நடைமுறையில் நாமஜபம், தியானம், உபந்யாசம், மௌனம், ஸத்ஸம்பாஷணை முதலியவை அடங்கும். உபந்யாசங்கள் யோகம், பக்தி, ஞானம் முதலியவைகளைப்பற்றி நடைபெறும். ஸத்ஸம்பாஷணையில் அன்பர்கள் தங்கள் சந்தேகங்களை நீக்கிக்கொள்ளலாம். விருப்பமுள்ள அன்பர்களும், தாய்மார்களும் அந்தர்யோகங்களில் கலந்துகொள்ளலாம். ஆனால் கைக்குழந்தைகளுடன் வரும் தாய்மார்களும், பன்னிரண்டு வயதிற்குக் கீழ்ப்பட்ட சிறுவர்களும் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

प्रज्ञानं ब्रह्म

தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம் 33 | ருத்ரோத்காரி ஹூ தை மீ | ஆரம் 1

பிரார்த்தனை

अलं त्रिवर्गकथया योगस्य कथयाप्यलम् ।
अलं विज्ञानकथया विश्रान्तस्य ममात्मनि ॥

— अष्टावक्रसंहिता

அலம் த்ரிவர்ககதயா யோகஸ்ய கதயாப்யலம் ।
அலம் விக்ஞானகதயா விச்ராந்தஸ்ய மமாத்மனி ॥

— அஷ்டாவக்ரஸம்ஹிதா

பரத்தை அடைந்துள்ள எனக்கு வாழ்வின் நோக்கத்தைக் குறித்துப் பேசவோ, சாதனத்தைக் குறித்துப் பேசவோ, ஞானத்தைப் பற்றிப் பேசவோ அவசியமில்லை.

குன்றனைய குற்றம் செயினும் குணங்கொள்ளும்
இன்று முதலாக என்னெஞ்சே!—என்றும்
புறன்உரையே ஆயினும் பொன்ஆழிக் கையான்
திறன்உரையே சிந்தித்(து) இரு.

— திவ்யப்பிரபந்தம்

அருள் விருந்து

நல்லாரிணக்கம் நலன் அனைத்தையும் நல்குகிறது.

ஆற்றல் அனைத்தும் அமைதியில் அடங்கியிருக்கிறது.

ஞானத்துறையில் முயலுதற்கு ஏற்ப மனிதன் மேன்மையுறுகிறான்.

அறவே புலனை வென்றவனுக்குக் கனவிலும் காமம் தலையெடுக்காது.

வெறும் பேச்சினும் சிறந்தது உள்ளத்தினின்று உருவாகின்ற உணர்ச்சி.

பெரும்பான்மையோர் அபிப்பிராயம் வேறு; மனச்சாட்சியின் தீர்மானம் வேறு.

சொரூபத்தில் நிலைத்திருப்பவனை நலன், கேடு இரண்டும் வந்து தாக்க மாட்டா.

தூய ஆசை மனிதனை உயர்நிலைக்கு எடுக்கிறது; தீய ஆசை அவனைக் கெடுக்கிறது.

கஷ்டதசைகளனைத்துக்கும் விமோசனத்தைத் தன் உள்ளத்தினின்று மனிதன் பெறுகிறான்.

நூறாண்டுகள் வேள்வி வேட்பதற்கு மாறாகக் கணப்பொழுது சான்றோரை வணங்கி இருப்பது மேல்.

மனிதனின் செயல் நிலைத்திருக்கிறது. அவனுடைய சொல்லோ அக்கணமே மறைந்துபட்டுப் போகிறது.

மேற்போக்காக வாழ்பவனுக்கு அன்று; இயற்கையோடு ஒன்றித்து வாழ்பவனுக்கு அதன் உட்பொருள் விளங்குகிறது.

மனிதன் தன்னளவில் ஒன்றுக்கும் உதவாதவன்; ஆயினும் பரபோதத்தை அடைந்திருப்பவன் தெய்வத்துக்கு நிகராகிறான்.

சுகஜீவனத்தை நாடுபவன் அறிவிலி. தொடர்ந்து தொண்டு புரிய விரும்புபவனே வாழ்க்கைத் தத்துவத்தை அறிந்தவன்.

உலகைப் புறக்கணிப்பதால் மனிதனுக்கு நஷ்டம் ஏதும் வாராது. ஆனால் தன் சொரூபத்தைப் புறக்கணிப்பதற்கு நிகரான நஷ்டம் ஏதும் இல்லை.

வெறும் உலக வியவகார நூல்களினின்று பெறுகிற வாழ்க்கைத் தத்துவம் மிகக் குறைந்தது. மற்று, பாரமார்த்திகப் பெருநூல்களினின்றே வேண்டியவாறு ஞானப் பொக்கிஷங்களைப் பெறலாம்.

பரமஹம்சர் புகட்டிய

பெருநெறி விளக்கம்

பரமஹம்சதேவர் அன்பர்களுடன் உரையாடிக் கொண்டிருக்கிறார். நரேந்திரன்: ''ஹஸ்ரா இப்பொழுது சிறிது திருந்தியிருப்பவராகத் தென்படுகிறார்."

பரமஹம்சதேவர்: ''அது முற்றிலும் சரி. ஆனால் வாழ்க்கையில் மறைத்து வைக்கப்பட்டிருக்கின்ற பகுதி ஒன்று உளது. ஒரு சிலர் நாவால் ராம நாமத்தை உச்சரித்துக்கொண்டிருக்கிறார்கள். அது ஒரு புறம் இருக்க, பிறரைத் தாக்குதற்காகக் கற்கள் சிலவற்றை மறைத்து வைத்திருக்கிறார்கள்."

நரேந்திரன்: "ஐயனே, தாங்கள் பகர்வதும் உண்மையே. ஆனால் அது ஹஸ்ராவிற்குப் பொருந்தாது. உலகத்தவர் அவரைக் குறித்து என்னென்னவோ புகார்கள் பேசி வருகிறார்களே என்று நான் அவரிடம் தெரிவித்தேன். அதற்கு அவர், 'உலகத்தவர் வேண்டுமானதையெல்லாம் பேசிக்கொண்டிருக்கட்டும். அவர்கள் என்னைக் குறித்துப் பேசும் பொருள் சேராப் புகாருக்கு நான் பொறுப்பாளியாக மாட்டேன்' என்று கூறினர்."

பரமஹம்ச தேவர்: ''அவர் தியானம், ஜபம் முதலியவற்றை ஒருவாறு பழகி வருகிறார். ஆனால் விபரீதமான போக்குகள் சிலவற்றை அவருடைய வாழ்க்கை முறையில் காண்கிறோம். வாடகைக்கு வண்டி ஒன்று அமர்த்திக் கொண்டு வருகிறார். வந்த பிறகு வண்டிச் சத்தம் கட்டுதற்குத் தம் கையில் பணம் ஏதுமில்லை என்று அவர் கையை விரிக்கிறார்."

நரேந்திரன்: ''ஐயனே, இந்த விஷயத்தையும் நான் அவரிடம கேட்டேன். அவர் வண்டிச் சத்தத்தை வண்டிக்காரனுக்குத் தாம் செலுத்திவிட்டதாகக் கூறினர்."

பரமஹம்சதேவர்: "அப்படி வண்டிச் சத்தம் கட்டுதற்கு அவருக்குப் பணம் எங்கிருந்து வந்தது?''

நரேந்திரன்: "ஒருவேளை ராம்லாலர் கொடுத்திருக்கலாம்; அல்லது வேறு பக்தர் யாராவது அவருக்குக் கொடுத்திருக்கலாம்.''

பரமஹம்சதேவர்: "இச்செய்திகள் அனைத்தையும் நீ உடைத்து அவரிடம் கேட்டாயா? அன்னை பராசக்தியிடம் முன்பொரு நாள் நான் செய்த பிரார்த்தனையாவது: 'ஓ தாயே! ஹஸ்ராவின் போக்குச் சரியில்லையாயின் அவரை இந்த க்ஷேத்திரத்தினின்று அப்புறப்படுத்தி விடுவாயாக.' அப்படி நான் செய்த பிரார்த்தனையை ஹஸ்ராவிடமும் தெரிவித்து விட்டேன். இந்நிகழ்ச்சி நிகழ்ந்த சிறிது காலத்திற்குப் பிறகு அந்த ஹஸ்ரா என்னிடம் வந்து, 'நீங்கள் என்னை இங்கிருந்து அகற்றி விடவேண்டும் என்று அம்பிகையிடம் பிரார்த்தனை செய்தீர்கள். அதனால் என்ன? பாருங்கள் நான் இன்னும் இங்கேயே இருந்து வருகிறேன்' என்றார். (இதைக் கேட்ட பரமஹம்சரும் ஏனைய பக்தர்களும் கொல்லென்று சிரித்தார்கள்.) ஆயினும் சில நாட்களில் அவர் இந்த க்ஷேத்திரத்தினின்று வெளியேறிவிட்டார்.

''ஹஸ்ராவின் தாயார் தன்னைப் பற்றிய பரிதாபகரமான நிலையை ராம்லாலின் மூலமாக எனக்குத் தெரிவித்தாள். தன் மகனாகிய ஹஸ்ரா தன்னுடைய வயோதிக காலத்தில் தன்னை ஒரு தடவையாவது வந்து பார்க்க வேண்டும் என்று கண்ணீரும் கம்பலையுமாகப் பிரார்த்தித்தாள். நானும் அவ்வண்ணமே ஹஸ்ராவை வற்புறுத்தினேன். உன்னை ஈன்றெடுத்த தாயை ஒரு தடவையாவது சென்று பார்ப்பது உசிதம் என்று நான் அவனிடம் மன்றாடினேன். 'உன் தாய் மிகவும் வயோதிகம் அடைந்திருக்கிறாள். ஒரு தடவையாவது நீ அவளைச் சென்றுபார்க்கக் கடமைப்பட்டிருக்கின்றாய்' என்று வேண்டினேன். ஆனால் நான் எவ்வளவுதான் தூண்டிய போதிலும், அவன் அங்ஙனம் செல்லச் சம்மதிக்கவில்லை. அந்தியகாலம் அணுகியபொழுது அம்மாதுவும் தன் மகனைப்பற்றி எண்ணி எண்ணிக் கவலையுடன் உயிர் நீத்தாள்.''

நரேந்திரன்: ''இனியாவது ஹஸ்ரா தம் வீட்டிற்கு ஒரு தடவையாவது போவார் என்று நான் எதிர்பார்க்கிறேன்.''

பரமஹம்ச தேவர்: ''ஆம், ஆம்; அவன்

தன் இல்லத்திற்கு ஏதோ ஒரு போக்கில் போவான். அவன் ஒரு படுபோக்கிரி; அவன் ஒரு முட்டாள். அவனுடைய போக்கை நீ சரியாக அறிந்துகொள்ளவில்லை. அந்த அளவில் நீ ஒரு மடையன். கல்கத்தாவிலே சிந்தி என்னும் பகுதியில் ஹஸ்ரா சில நாள் தங்கியிருந்ததாகக் கோபால் தெரிவித்தான். அங்கிருந்த பக்தர்கள் அவனுக்கு அறுசுவையுடன் கூடிய நல்லுணவைப் பக்தியுடன் படைத்தார்கள். ஆயினும் அன்னவர்கள் தனக்குப் படைத்த உணவு மிக மட்டமானது என்று குறைகூறும் துணிவு படைத்தவனாக அவன் இருந்தான். அப்பொழுது கல்கத்தாவிலே பார்பரா என்னும் பகுதியில் வசித்திருந்த ஈசானன் இந்த ஹஸ்ராவோடு ஆங்குச் சென்றிருந்தான். தனக்குக் குற்றேவல்கள் சில புரியும்படி ஈசானனுக்கு அவன் உத்தரவு போட்டான். அவன் அங்கு நடந்துகொண்ட போக்கைக் குறித்து ஆங்கு இருந்த பக்தர்கள் அவனை மிகவும் சினந்துகொண்டனர்.''

நரேந்திரன்: ''தாங்கள் இப்பொழுது பகர்கிற இந்த நிகழ்ச்சியைக் குறித்தும் ஹஸ்ராவிடம் நான் வினவினேன். அதற்கு மறுமொழியாக ஈசானன் தாமே அவருக்குப் பணிவிடை பண்ண முன் வந்ததாக அவர் தெரிவித்தார். அது மட்டுமன்று; அப்பகுதியில் வசித்திருந்த பக்தர்களனைவரும் அவரிடம் மரியாதை காட்டியதாகவும் அவர் என்னிடம்தெரிவித்தார்."

பரமஹம்ச தேவர்: ''ஹஸ்ரா புரிந்து வந்திருந்த தபஸ், தியானம், ஜபம் ஆகியவைகளின் விளைவு அத்தகையதாம். உடல் கூறுக்கும் மன அமைப்புக்கும் இடையிலே நெருங்கிய தொடர்பிருக்கிறது என்பதை நீ ஞாபகத்தில் வைத்துக்கொள்வாயாக. குட்டையான உடலும் அதில் ஆங்காங்கு மச்சங்களும் அமைந்திருப்பது நல்லறிகுறிகள் ஆகமாட்டா. அத்தகைய அங்க அடையாளங்கள் படைத்திருப்பவர்கள் நெடுநாளைக்குப் பிறகே தங்கள் பாங்கைத் திருத்தி அமைத்துக் கொள்கிறார்கள்.''

பவநாத்: ''இதுபோன்ற பேச்சு நமக்கு எந்த நலனையும் அளிக்கமாட்டாது. ஆகையினால் இதை இத்துடன் நிறுத்திவிடுவோம்.''

பரமஹம்ச தேவர்: ''நான் சொல்லுவதைத் தவறாகப் பொருள்படுத்திக் கொள்ள வேண்டாம்.'' நரேந்திரனிடம் அவர் செய்த எச்சரிக்கையாவது: ''நீ மக்களைச் சரியாக அறிந்து கொள்கிறாய் என்று இயம்புகிறாய். ஆனால் நீ அப்படி எண்ணுவது சரியன்று. ஆகையினால்தான் இத்தகைய எச்சரிக்கையை நான் உனக்குத் தெரிவிக்கிறேன். ஹஸ்ரா போன்றவர்களை நான் எங்ஙனம் பொருள்படுத்துகிறேன் என்பது உனக்குத் தெரியுமா? கடவுள் தாமே அனைத்துமாக வடிவெடுத்து இலங்குகின்றார். உலகிலுள்ள நல்லவர்களாக வடிவெடுத்திருப்பவரும் கடவுளே. போக்கிரித்தனம், பித்தலாட்டம் படைத்திருப்பவர்களாக வடிவெடுத்திருப்பவரும் அதே கடவுள்தான்."

இப்பொழுது மஹிமசரணைப் பார்த்துப் பரமஹம்சதேவர் வினவுகிறார்: ''நீ என்ன சொல்லுகிறாய்? கடவுள் தாமே பிரபஞ்சத்திலுள்ள அனைத்துமாக இலங்குகின்றார்."

மஹிமசரண்: ''ஆம் ஐயனே. கடவுள் தாமே அனைத்துமாக, அனைவருமாக இலங்குகின்றார்.''

கிரீஷ் சந்திரகோஷர் பரமஹம்ச தேவரிடம் விண்ணப்பித்ததாவது: ''ஐயனே, ஒரு சார்பான பிரேமை என்பதன் பொருள் யாதோ?''

பரமஹம்ச தேவர்: ''ஓரம் சார்ந்துள்ள அன்பு என்பது அதன்பொருள். இதற்குச் சான்றொன்று எடுத்துக்கொள்வோம். வாத்தை நீர் நாடுவதில்லை. ஆனால் வாத்தோ நீரின்மீது பெரும் பற்றுதல் வைத்திருக்கிறது. வேறுவித அன்புகளும் இருக்கின்றன. சரள அன்பு, பரஸ்பர அன்பு, சாமர்த்தியம் மிக்க அன்பு ஆகியவைகளைச் சான்றுகளாக எடுத்துக்கொள்ளலாம். சாதாரண அன்பில் அன்பு பூணுகிறவன் தன் சுயநலத்திலேயே கண்ணும் கருத்துமாயிருக்கிறான். யாரிடம் அன்னவன் தன் அன்பைச் செலுத்துகிறானோ அவனைப்பற்றிய கவலை ஏதும் அவனுக்கில்லை. சந்திரவல்லி என்னும் கோபி அத்தகைய அன்பைக் கண்ணனிடம் வைத்திருந்தாள். இரண்டாவது அன்போ அன்னியோன்னியமானது. அதன்படி இரண்டு தரத்தாரும் அன்புக்குப் பாத்திரமாவது அதன் குறிக்கோளாகும். சரள அன்பின் மிக்கது என்று இதைப் பாராட்டவேண்டும்.

"இவை யாவிலும் மிக்கது மூன்றாவது அன்பு. அன்பு பாராட்டுகின்றபக்தன் அல்லது பக்திமதி பகர்வதாவது: 'என் அன்பிற்குரிய

பெரியபொருளே, நீ ஆனந்த முற்றிரு. எனக்கு நிகழ்வது நலனுயிருக்கலாம் அல்லது கேடாக இருக்கலாம். அது என்னேடு இருக்கட்டும். எவ்விதத்திலாவது நீ பேரின்பத்திலேயே திளைத்திருப்பாயாக.' இத்தகைய போற்றுதற்குரிய பெரிய பக்தியை ஸ்ரீமதி ராதை படைத்திருந்தாள். அவளுடைய அன்புக்கு இலக்காயிருந்த கிருஷ்ணனிடம் தன் கருத்து முழுவதையும் செலுத்தினள். அவள் மட்டுமல்லள், கோபிமார்கள் சிலர் இத்தகைய அதீத நிலையை அடையப் பெற்றிருந்தனர்.

"இக்கோபிமார்கள் யார் என்பதைப்பற்றி உனக்குத் தெரியுமா? ரிஷிகள் பலர் தண்டக வனத்தில் வாழ்ந்திருந்தபொழுது தன் வனவாசத்தைப் பூர்த்தி பண்ணுதற்காகத் தசரத ராமன் ஆங்குச் சென்றிருந்தான். அன்னவனைத் தரிசிக்கவும் அவனேடு இணக்கம் கொள்ளவும் அந்த ரிஷிகள் பலர் அவாவுற்றிருந்தனர். கருணைசொட்டும் சிறிது கண் பார்வையை மட்டும் அவன் அவர்கள்பால்செலுத்துதற்கு அவகாசம் கிடைத்தது. அவனிடத்தில் பக்தி பூணுதற்கும் நெருங்கி உறவாடுதற்கும் அந்த ரிஷிகள் பிருந்தாவனத்திலே கோபியர்களாகப்பிறந்து வளர்ந்தார்கள் என்பது சில புராணங்களின் வரலாருகும்."

ஒரு பக்தர்: "ஐயனே, அந்தரங்க சிஷ்யன் என்று பகர்தற்கேற்றவன் யார்?"

பரமஹம்சதேவர்: "ஓர் உபமானத்தின் வாயிலாக அந்தரங்க சிஷ்யன் யார் என்பதை விளக்குகிறேன். நடனசாலை ஒன்றில் தூண்கள் உள்ளும் புறமுமாக அமைக்கப்பெற்றிருக்கின்றன. உள்ளிருக்கும் தூண்கள் நடிப்பவர்களுக்குப் பக்கத்தில் இருக்கின்றன. அதே விதத்தில் அந்தரங்க சிஷ்யர்கள் குருமார்களுக்கு அருகிலேயே இருந்துவருகின்றனர்."

மஹிமசரணைப் பார்த்துப் பரமஹம்சதேவர் பகர்ந்ததாவது: "ஞானிகளுடைய போக்கு அலாதியானது. பரம்பொருளின் சின்னமோ அவதார மூர்த்தி ஒருவரின் சான்னித்தியமோ ஞானிக்கு அவசியமில்லை. ஸ்ரீராமன் வனவாசம் பண்ணியபொழுது ரிஷிகள் பலரைச் சந்தித்தான். பேரன்புபூண்டவர்களாக அந்த ரிஷிகள் ஸ்ரீ ராமனைத் தத்தம் ஆச்ரமங்களுக்கு வரவழைத்தார்கள். அதற்கு இணங்கி ஆங்குத் தங்கிச் சென்ற ஸ்ரீ ராமனிடம் அந்த ரிஷிகள் பகர்ந்ததாவது: 'ஓ ராமா, உன் தரிசனத்தினல் நாங்கள் இன்று கிருதார்த்தர்கள் ஆகிருேம். ரிஷிகள் சிலர் உன்னை அவதார மூர்த்தி என்று பாராட்டுகின்றனர். ஆனல் நாங்களோ உன்னை வெறும் தசரத ராமனுகவே கண்டு களித்து வருகிருேம். நீ அவதார மூர்த்தியா அல்லனு என்பதைப்பற்றிய எண்ணம் எங்களுக்கு இல்லை. நீ அகண்ட சச்சிதானந்த மூர்த்தி என்பது எங்களுக்கு வெளிப்படை. அதுவே எங்களுக்குப் போதுமானது.' இதைக் கேட்ட ஸ்ரீ ராமன் கருணையுடனும் புன்சிரிப்புடனும் அவர்களைப் பார்த்தான்.

"ஞான சாதனங்கள் புரிந்தபொழுது நான் அற்புதமான மனநிலைகளைப் பெறலாயினேன். அகண்ட சச்சிதானந்தத்தில் அப்பொழுது என் மனது மூழ்கிவிடும். நாட்கள் பலவற்றை நான் அங்ஙனம் கழித்தேன். பக்தியும் பக்தர்களின் கூட்டுறவும் அக்காலத்தில் என்னை விட்டு மறைந்து போயின. புறத்தோற்றத்தில் ஜடம் போன்று நான் தென்பட்டேன். அகத்தில் ஆழ்ந்த பிரக்ஞை திகழ்ந்துகொண்டிருந்தது. அப்பொழுது தேகாத்ம புத்தி என்னைவிட்டுத் தானுக நழுவிப் போயிற்று. சரீரமும் அழிந்துபட்டுப் போகும் நிலையில் இருந்தது. ராம்லாலனுடைய சிற்றன்னையாகிய சாரதாதேவியைப் பணிவிடையின் பொருட்டுப் பக்கத்தில் வைத்துக்கொள்ளலாமா என்ற எண்ணம் இடையிடையே என்னிடத்து உதித்தது.

"அத்தகைய அதீத நிலையில் இருந்த பொழுது என் அறையில் மாட்டப்பட்டிருந்த படங்களையெல்லாம் அப்புறப் படுத்தும்படி செய்தேன். சிறிது காலத்துக்குப் பிறகு என் மனது கீழ் நிலைக்கு இறங்கி வந்தது. அப்பொழுது நீரினுள் அமுத்தி வைக்கப்பட்ட மனிதன் காற்றுக்காக எங்ஙனம் திணறுகின்ருனே அத்தகைய நெருக்கடியை நான் அனுபவித்தேன். பக்தர்களுடைய கூட்டுறவு இல்லாவிட்டால் நான் எப்படி உயிர் வாழ்ந்திருக்க முடியும் என்கின்ற எண்ணம் உதயமாயிற்று. அதன் பிறகு என்னுடைய மனம் பழையபடி பக்தியில் ஆழ்ந்திருந்தது. பக்தர்களுடைய சகவாசமும் எனக்கு முற்றிலும் ஒத்திருந்தது."

எந்நாள் கண்ணி

(தாயுமானவர் இயற்றியது)

10-10. கன்னலுடன் முக்கனியும் கற்கண்டும்
[சீனியுமாய்
மன்னும்இன்ப ஆரமுதை வாய்மடுப்பது
எந்நாளோ.

அமுது—அமிர்தம், சாவா மருந்து.

மானுட சரீரம் பிரபஞ்சத்தின் கூருகிறது. ஆதலால் அதைப் பேணுதற்கு உணவாக அமைகிற யாவும் பிரபஞ்சத்தின் கூறுகளாம். சர்க்கரையின் தெளிந்த பகுதி கற்கண்டு எனப்படுகிறது. வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம் ஆகிய மூன்றும் சேர்ந்து முக்கனிகள் எனப்படுகின்றன. சீனி என்பது கற்கண்டாக வடிவெடுப்பதற்கு முன்பு உள்ள தித்திப்புப் பதார்த்தமாம். இவை இரண்டுக்கும் மூலப் பொருளாயிருப்பது கன்னல். அது கரும்பின் சாறு ஆகிறது. இவையாவும் புசிப்பதற்கேற்ற சுவை நிறைந்த பொருள்களாம். நாவுக்கினியது பெரும்பாலும் உடலுக்கு ஒத்ததாகிறது. ஏற்றுக்கொள்ள நா மறுதலிக்கின்ற உணவு பொருந்தாததாகிறது. அதைப் புசித்தால் கேடு உண்டாகும். எனவே, உடலுக்குப் பொருந்திய உணவையும் பொருந்தாத உணவையும் ஆராய்ச்சி செய்து பார்த்து அனுமதி தரும் கருவியாக அமைந்திருப்பது நா. அத்தகைய நா உயிர்வகைகளுக்கு இல்லாது போய் விடுமானல் உணவு உண்பதில் பெரும்பாலும் பிழை ஏற்படும். சரீர வாழ்வும் நன்கு நடைபெருது. புறத்தில் உள்ள பொருள்கள் அந்தந்த உயிருக்கு ஏற்ற உணவாக மாறியமைவது இயற்கையின் பாங்காகிறது. அப்படி அமைந்துள்ள உணவுவகைகளுள் சாலச் சிறந்தவைகளை மனிதன் ஏற்றுக்கொள்கிருன்.

இனி, அமுது என்பது புராண பூர்வமாக ஆராய்ந்து பார்க்குமிடத்து விண்ணவர்கள் அருந்தும் உணவாகிறது. ஆனல் அமிர்தம் உண்மையில் மனிதனுடைய உடல் அமைப்பிலேயே அமைந்திருக்கிறது. தத்துவத்துக்குப் பக்கத்தில் போகப் போக அதைப்பற்றிய உண்மை ஒன்று வெளியாகிறது. உண்மையில் மனிதன் நாடுகின்ற அனைத்தும் அவனிடத்திலேயே அமைந்திருக்கின்றன. அவை யாவும் இறுதியில் ஆத்மசொரூபமாக முடிவுறுகின்றன. உணவில்லாத மனிதன் உயிர் வாழ்ந்திருக்க முடியாது. அவன் உணவை நாடுவது தன் உயிரைப் பாதுகாத்தல் பொருட்டேயாம். எந்த உயிராவது அழிந்துபட்டுப்போகச் சம்மதிப்பதில்லை. யாண்டும் நிலைத்திருக்கவே உயிர்களனைத்தும் முயன்று வருகின்றன. அப்படி முயல்கின்றவைகளுள் உச்சநிலையிலிருப்பவன் மனிதன். எது அழிந்துபட்டுப்போகிறதோ அது அசத்து என்றும் அழியாது நெடிதிருப்பது சத்து என்றும் சொல்லப்படுகின்றன. இனி சத்பொருள்களுள் உச்சநிலையில் இருப்பது ஆத்மா. அதற்கு என்றும் அழிவில்லை. அந்த ஆத்மாவிற்கு மனிதன் புறம்பானவனல்லன். இந்த உண்மையை அறிந்துகொள்கின்றபொழுது உயிரைக் காப்பாற்ற முயல்கின்ற மனிதனுக்குச் சாசுவதமான வாழ்வு அமைகிறது.

அமிர்தம் என்பது மரணத்துக்கு அப்பாற்பட்டதில்லை. மரணத்தை வெல்ல முயல்கின்ற யோகிகளுக்கு அமிர்தத்தைப் புசித்த பிறகு நெடுநாள் உடலில் வாழ்ந்திருக்கும் சித்தி வந்தமைகிறது. இந்தச் சித்தியைப் பெற்றுன பிறகும் சாசுவதமாக மனிதன் வாழ்ந்திருக்க முடியாது. நெடுங்காலத்துக்குப் பிறகு விண்ணவர்களும் தங்கள் உடலை மரணத்தின் வாயிலாக நீக்குகின்றனர். அந்த விண்ணவர்களுக்கு நிகராக அமிர்தபானம் பண்ணி நெடுநாள் வாழ்ந்திருக்கும் யோகியர்களும் மரணத்துக்கு இரையாகவேண்டும். அத்தகைய அமிர்தபானம் பண்ண விரும்புகின்ற யோகிகள் அதைப் புறவுலகினின்று பெறுவதில்லை. அவர்களுடைய அமைப்பிலேயே அமிர்தம் இருக்கிறது. யோக பலத்தின் வாயிலாக அந்த அமிர்தத்தைப் பானம் பண்ணும் பரிபாகம் அந்த யோகிக்கு அமைகிறது. அப்படி அமையுங்கால் உலகில் உள்ள உணவு வகைகள் அனைத்தும் தருகின்ற ஆனந்தத்தைத் தன் உடலிலுள்ள அமிர்தபானத்தினின்றே யோகி பெறுகிருன். அந்த அமிர்தபானம் ஆத்ம ஞானத்துக்கு அடுத்த ஸ்தானத்தைப் பெறுகிறது. பிரபஞ்சத்தின்

கூறுகளனைத்திலும் உச்ச நிலையிலிருப்பது அமிர்தம். அதற்கு அப்பால் ஜனன மரணமற்ற நிலையிலிருப்பது ஆத்ம சொரூபம். அமிர்தத்தைப் புசித்து நெடுநாள் வாழ்ந்திருக்கும் யோகியும் இறுதியில் மரணத்துக்கு ஆளாகிறான். அப்படி மறையும் பரியந்தம் அவன் மரணமிலாப் பெருவாழ்வில் திளைத்திருக்கிறான் என்பது இக்கண்ணியின் கோட்பாடு. ஆயினும் ஞானிக்கு அமிர்தபானம் பண்ணி ஆனந்தத்தில் திளைத்திருக்கும் நாட்டம் வருவதில்லை என்பதை ஆத்ம சாதகன் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். சாதனத்தில் பெரும்பாலோர் போக்கைத் தாயுமானவர் இக்கண்ணியில் படம் பிடித்துக்காட்டுகின்றார்.

10-11. மண்ணோடு உழன்ற மயக்கம் எல்லாம்
தீர்ந்திடவும்
விண்ணோடு எழுந்த சுகம் மேவுநாள்
எந்நாளோ.

மண்—பிரபஞ்சம்: விண்—சிதாகாசம்.

கடல் அலைகள் உருவெடுப்பதற்கு நிகராகப் பரமாத்மன் அல்லது ஈசுவரனிடத்திருந்து ஜீவர்கள் பரிணமிப்பது அந்த ஈசனுடைய விளையாட்டாம். ஜீவபோதம் அடையும்பொழுதே உணவில் நாட்டமும் தானாக வந்தமைகிறது. பிரபஞ்சத்தில் கட்டுண்டு கிடப்பதன் அறிகுறியாக உணவில் நாட்டமும் ஜீவர்களிடத்து வடிவெடுத்திருக்கிறது. உணவு அனைத்துக்கும் பொதுப்பெயர் மண். ஏனென்றால் பிரகிருதியின் கூறுகள் பஞ்சபூதங்களாம். அவைகளுள் ஸ்தூலத்திலிருப்பது மண். அந்த மண்ணினின்று விதவிதமான உணவுகள் உருவெடுத்து வருகின்றன. ஒவ்வொரு ஜீவனும் அவனவன் தரத்துக்கேற்றவாறு உணவை உண்டு வாழ்ந்துமடிகின்றான். இக்கோட்பாட்டை உடல் வடிவெடுத்திருந்த கண்ணன் தன் விளையாட்டின் வாயிலாக விளக்கலாயினன். 'மண்ணை உண்ட கண்ணன் வெண்ணெய் உண்ட கண்ணன்' என்று உலகத்தவர் அவனைப் போற்றுகின்றனர். உணவின் ஆரம்பதசையிலிருப்பது மண். ஸ்தாவரங்கள் மண்ணைப் புசித்து உயிர் வாழ்ந்திருக்கின்றன. உணவு வகைகளுள் உச்ச நிலையில் இருப்பது வெண்ணெய். மக்கள் அதை உண்டு பயன் பெறுகின்றனர். உயிர் வகைகள் அனைத்தும் தன்னிடத்திருந்து வந்தவைகள் என்று மண்ணையும் வெண்ணெயையும் தின்ற கண்ணன் விளக்கியுள்ளான். ஆகையினால்தான் அவன் கிருஷ்ண பரமாத்மா என்று இயம்பப் பெறுகின்றான். ஈசனுடைய லீலைகள் அனைத்தையும் அவன் கண்ணனாக வடிவெடுத்து விளக்கிக் காட்டியுள்ளான்.

பிரபஞ்சத்திலுள்ள ஜீவகோடிகள் அனைத்துமாக வடிவெடுத்து விளையாடுபவன் ஈசன். அந்த வடிவங்களுள் உச்சநிலையை எட்டியிருப்பவன் மனிதன். பல பிறவிகளில் பிரபஞ்சத்தில் உழன்று பெரிய அனுபவங்களை அவன் பெறுகிறான். அவன் பெறுகிற அனுபவங்களுள் உச்ச நிலையில் இருப்பது இப்பிரபஞ்ச வாழ்வில் துன்பம் கலவாத இன்பம் இல்லை என்பதாம். ஒவ்வோர் இன்பத்திலும் துன்பம் சேர்ந்திருப்பதே இயற்கையின் கூறு. ஆகையால் துன்பம் வேண்டாம் என்று அதை விலக்க முயல்கின்ற ஜீவாத்மன் பிரபஞ்ச வாழ்வையும் துறந்தாக வேண்டும். அக்கோட்பாட்டைத்தான் தாயுமானவர் 'மண்ணோடு உழன்றமயக்கம்' என்கிறார். ஒட்டகம் முள் செடியைத் தின்னும்பொழுது முட்கள் அதன் உதடுகளின் பக்கங்களில் குத்தி இரத்தத்தை வெளிப்படுத்துகின்றன. தன் உடலிலுள்ள இரத்தத்தைச் சுவைத்து இன்புறும் ஒட்டகம் முள் செடியிலிருந்து இன்பம் கிடைப்பதாக மயக்கம் கொண்டிருக்கிறது. மனிதனும் இதேபோன்று தன்னிடத்திலுள்ள இன்பத்தைப் புறப் பொருள்களிலிருந்து வரும் இன்பமாகக் கருதி மயக்கம் கொண்டிருக்கின்றான். இந்த மயக்கம் தெளிகின்ற பொழுதுதான் விவேகம் உதயமாகிறது. அந்த விவேகத்தின் விளைவாக ஜீவாத்மன் தான் நாடும் ஆனந்தம் சிதாகாசத்தில் அல்லது ஆத்ம சொருபத்தில் இருக்கிறது என்பதை அறிய வருகிறான். அதை அறிந்தான பிறகு அமிர்தத்திலும் அவனுக்கு நாட்டம் வருவதில்லை. தன்னுடைய நிஜசொரூபம் ஆத்மன் என்பதை அவன் சுவானுபூதியில் அறிய வருகிறான். அதுவே மயக்கம் தெளிந்த நிலையாம். அதை நாடுவதே வாழ்க்கையின் முடிவான குறிக்கோள் என்னும் உண்மையை இக்கண்ணி மூலம் தாயுமானவர் விளக்குகிறார்.

பாமரமக்களை உயர்த்துவோம்

(சுவாமி விவேகானந்தர்)

நீங்கள் தெய்வத்தின் குழந்தைகளாவீர்கள். அழியாப் பேரின்பத்துக்கு உரியவர்கள். நீங்கள் புனிதம் வாய்ந்தவர்கள். பரிபூரணநிலை உங்களுடைய உண்மையான நிலை. உங்களைப் பலவீனர்கள் என்று ஒருபொழுதும் சொல்லாதீர்கள். எழுந்திருங்கள். தைரியமாக இருங்கள். உறுதியாக இருங்கள். பொறுப்பு முழுவதையும் நீங்களே ஏற்றுக்கொள்ளுங்கள். உங்களுடைய விதியை நீங்களே உருவாக்கியவர்கள் என்பதை அறிந்துகொள்ளுங்கள். உங்களுக்குத் தேவையான வலிவும், உதவியும் உங்களிடத்திலேயே இருக்கின்றன.

கீழ்க்குலத்தோருக்கு நான் சொல்ல விரும்புவது ஒன்று உள்ளது. அவசரம் வேண்டாம். உயர்குலத்தார்களோடு சண்டைபோடுவதற்கான சந்தர்ப்பத்திற்குக் காத்திருக்க வேண்டாம். உண்மையை ஆராய்ந்து பார்க்க வேண்டும். நீங்கள் செய்கிற தவறே நீங்கள் அடைகின்ற துன்பத்திற்குக் காரணமாகும். வீண் விவாதங்களில் சக்தியை வீணுக்காதீர்கள். பத்திரிகைகளில் எழுதுவதன் மூலமாகச் சண்டையைக் கிளப்பவேண்டாம். நமக்குள்ளேயே நாம் சண்டை போட்டுக்கொள்ளக் கூடாது. அப்படிச் செய்வது பாபமாகும். உயர்குலப் பண்பைப் பெறுவதற்கு உங்கள் சக்தி முழுவதையும் உபயோகப்படுத்துங்கள். அப்பொழுதுதான் நீங்கள் உங்கள் சக்தியை நன்கு பயன்படுத்தியவர்களாகிறீர்கள். நீங்கள் செய்யவேண்டிய செயல் அதுவே.

உயர் வகுப்பு மக்களே! நீங்கள் உயிரோடு இருக்கிறீர்கள் என்று எண்ணிக்கொண்டிருக்கிறீர்களா? நீங்கள் பத்தாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட முதுமக்கள் தாழியில் வைக்கப்பட்ட பிணங்கள் போல இருக்கின்றீர்கள். உங்கள் முன்னோர்களால் ஒதுக்கப்பட்டவர்களிடையேதான் இந்தியாவின் வீரியம் இருக்கிறது. நீங்கள் நடமாடும் பிணங்களாவீர்கள். உங்களிடத்திலுள்ள ஆன்மிகச் செல்வம் உங்களுடைய முன்னோர்களால் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளதாகும். அதை உங்களுடைய சந்திக்குக் கொடுங்கள். எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் அதைச் செய்து முடியுங்கள். ஒரு புதிய இந்தியா நீங்கள் இருக்குமிடத்தில் உருவாகட்டும்.

பொதுமக்கள் விழித்தெழும்பொழுது உங்களால் அவர்கள் நசுக்கி வைக்கப்பட்டிருந்ததை அறிந்து கொள்ளுவார்கள். அப்படிஅறியும் பொழுது உங்களை இருந்த இடம் தெரியாமல் ஊதித்தள்ளி விடுவார்கள். உங்களை இந்நிலையில் வைத்தவர்கள் அவர்களே. உங்களை இந்நிலையிலிருந்தும் அவர்களே இறக்குவார்கள். ஆகையால் நீங்கள் கீழ்நிலையிலுள்ள மக்களை உயர்த்துவதற்குக் கல்வியையும் பண்பையும் அவர்களுக்குத் தர முயலுங்கள். அவர்கள் விழித்தெழும்காலம் வரப்போகிறது. அப்படி அவர்கள் நிலை உயரும்பொழுது நீங்கள் அவர்களுக்குச் செய்த உதவியை மறக்கமாட்டார்கள். அவர்கள் உங்களிடம் நன்றி பாராட்டுபவர்களாகவே எப்பொழுதும் இருப்பார்கள்.

உயர் ஜாதி மக்கள் தங்கள் அழிவுக்குத் தாங்களே காரணமாக இருக்கிறார்கள். தங்களை எவ்வளவு விரைவில் திருத்திக்கொள்கிறார்களோ அவ்வளவு நல்லது. தாமதம் செய்கின்ற அளவு கஷ்டப்பட்டுத்தான் அழிய வேண்டிவரும். உயர்குலத்தவர்களுடைய கடமை மற்ற மக்களுடைய முன்னேற்றத்துக்குப் பாடுபடுவதாகும். அப்பொழுதுதான் இந்தியா முன்னேறும்.

அறியாமையிலும் பட்டினியிலும் லட்சக்கணக்கான மக்கள் துன்பப்பட்டுக்கொண்டிருக்கும் வரையில் இந்நாட்டில் வாழும் கற்றவர்களும் பணக்காரர்களும் துரோகிகளாவார்கள். பாமரர்களின் உழைப்பைக்கொண்டுதான் கற்றவர்கள் தங்கள் கல்வியைப் பெற்றார்கள். எனவே கற்றவர்கள் அவர்களைக் கவனிக்காமல் இருப்பார்களானால் துரோகிகளாவார்கள். பணம் படைத்த மக்கள் ஏழைகளைக் கவனிக்காவிட்டால் அவர்கள் நன்றி கெட்டவர்களாவார்கள். யாருடைய உழைப்பைக் கொண்டு பணத்தைத் தேடினார்களோ அவர்களுடைய நலனைக் கவனிக்க அவர்கள் கடமைப்பட்டிருக்கின்றார்கள்.

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம்

1. विश्वं விச்வம் — அகிலாண்டம்.

பரம்பொருளே உலகனைத்துமாய் இருக்கின்றார். அப்படி ஆயிருக்கின்றவர் மாயையில் கட்டுண்டிருப்பதாகக் காட்சி கொடுத்துக் கொண்டிருக்கிறார். கால, தேச, நிமித்தம் ஆகிய இம் மூன்றும் அமையப்பெற்றது மாயை. இத்திரையின் வாயிலாக உயிர்கள் அனைத்தும் காண்பது மாயப் பிரபஞ்சம். இது பரமனுக்குப் புறம்பானதன்று. ஆகவே உயிர்களனைத்தும் யாண்டும் இறைவனுடைய சன்னிதியிலேயே வாழ்ந்திருக்கின்றனர். அவர்களுக்குப் புலனாவதும் பரம்பொருள் ஒன்றேயாம். ஆனால் கால, தேச, நிமித்தம் என்னும் திரையின் வாயிலாகக் காண்கின்றபொழுது ஏகமாய் உள்ள அப்பொருள் பல வடிவங்கள் எடுத்திருப்பதாகக் காட்சி தருகிறது. ஆதலால் ஆத்ம சாதகர்கள் தாங்கள் பஞ்சேந்திரியங்கள் மூலமாக நுகர்வது பரம்பொருள் ஒன்றே என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

2. विष्णुः விஷ்ணு: — எங்கும் நிறைபொருள்.

காற்றுக்கும் நீருக்கும் நிறம் இல்லை. ஆனால் காற்றானது எங்கும் வியாபகமாகின்றபொழுது நீலநிறம் உடையதாக அது காட்சி தருகிறது. நிறமற்ற நீர் கரைகாணாத கடலாக வடிவெடுக்கின்றபொழுது அது நீல நிறமாகக் காட்சி தருகின்றது. இக்கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டே சான்றோர்கள் மஹாவிஷ்ணுவுக்கு நீலநிறமான மேனியைக் கொடுத்திருக்கிறார்கள்.

3. वषट्कारः வஷட்கார: — யாகம் பண்ணுகிறபொழுது உச்சரிக்கப்படும் வஷட் என்னும் மந்திரவடிவத்தில் இருப்பவன்.

யாகம், யக்ஞம், வேள்வி ஆகிய சொற்கள் ஒரே கருத்துக்குரியவைகளாம். தனக்கு உரியவைகள் எனக் கருதப்படுபவைகளைப் பொது நலனுக்குரியனவாக்குதல் யக்ஞம் அல்லது வேள்வி. ஸ்ரீ மகாவிஷ்ணு தாமே யக்ஞ வடிவமாக இருக்கிறார் என்பது வேத வாக்கு. உலகில் எங்கெல்லாம் தன்னலம் கருதாது பிறர் நலனில் கண்ணுங்கருத்துமாக ஈடுபட்டிருக்கின்ற செயல் தென்படுகின்றதோ ஆங்கெல்லாம் பரமனின் சான்னித்யம் தெற்றெனத் தென்படுகிறது.

4. भूतभव्यभवत्प्रभुः பூத பவ்ய பவத் ப்ரபு: — இறந்தகாலம், எதிர்காலம், நிகழ்காலம் ஆகிய முக்காலத்துக்கும் இறைவன்.

பகவான் தாமே கால வடிவினன் என்பது கோட்பாடு. காலத்திரயம் அல்லது காலம் முழுதும் அவன் மயமாய் இலங்குகிறது. காலத்தை நன்கு பயன்படுத்துவதும் கடவுளை வணங்குவதும் ஒன்றேயாம்.

5. भूतकृत् பூதக்ருத் — உயிர்களைத் தோற்றுவிப்பவன்.

பகவானுடைய சான்னித்தியமே உயிர்களின் தோற்றத்துக்கும் முன்னேற்றத்துக்கும் முதற்காரணம் என்பது கோட்பாடு.

6. भूतभृत् பூதப்ருத் — தோற்றுவித்த உயிர்களைக் காப்பாற்றுவதும் பகவானுடைய செயலாம். அவர் உலகிலே உயிர்கள் மயமாய் இலங்குவதினின்று இச்செயல் வெளிப்படையாகிறது. நடப்பன, பறப்பன, நீந்துவன ஆகிய உயிர்வகைகள் அனைத்தும் தாம் தாம் ஈன்றெடுத்த இனத்தை முறையாகக் காத்தும் போஷித்தும் வருவது எங்கும் நிகழ்ந்து வருகிற அரிய செயலாம். இச்செயலினின்றே பரமனுடைய சான்னித்தியமும் வெளிப்படையாகிறது.

7. भावः பாவ: — ஜீவகோடிகளிடத்து வெளிப்படையாகத் தென்படுகின்ற தெய்வத்தின் சான்னித்தியம்.

8. भूतात्मा பூதாத்மா — உயிர்கள் அனைத்திடத்தும் அந்தராத்மாவாக இலங்குபவன்.

9. भूतभावनः பூதபாவன: — தோன்றியுள்ள உயிர்கள் வளர்ந்து விரிவடைந்து வருவதற்கு முகாமையாய் இருப்பவன்.

10. पूतात्मा பூதாத்மா — தூய்மையே வடிவெடுத்தவன்.

உயிர்கள் அனைத்தும் அதனதன் வினைக்கேற்ற பிரகாரம் நலனும் கேடும் நிறைந்தவைகளாகத் தென்படுகின்றன. அத்தோற்றத்துக்கு அடிப்படைக் காரணம் முக்குணங்கள். பரமாத்மனே முக்குணங்களுக்கு அப்பாற்பட்டவர். இவ்வையக சம்பந்தமான நலனும்

கேடும் உயிர்களனைத்துக்கும் அந்தராத்மாவாயிருக்கின்ற பரமாத்மனைப் பழுதுபடுத்துவதில்லை. இக்கோட்பாட்டினின்று ஆத்ம சாதகன் ஒருவன் அறிந்துகொள்ள வேண்டிய பேருண்மை ஒன்று உளது. உடலைத் தான் என்று கருதுபவன் உடலுக்கு உரியனவாகின்ற நலன் கேடு, நோய் நொடி முதலியவைகளுக்கு அடிமைப்பட்டவனாகின்றான். மற்று, உடலினுள்ளே விற்றிருக்கும் பரமாத்மனுக்குத் தான் சொந்தம் என்று உறுதியாக எண்ணுபவன் உடலை ஒட்டிய நலம் கேடுகளுக்கு அடிமையாவதில்லை. அவைகளைக் கருத்திலும் அவன் வாங்கிக்கொள்வதில்லை.

11. परमात्मा பரமாத்மா — பரமாத்மன் பிரபஞ்சத்தின் கூறுகளனைத்துக்கும் அப்பாற்பட்டவன்.

12. मुक्तानां परमा गतिः முக்தானாம் பரமா கதி: — முக்தர்களுடைய பரமகதி.

ஜனன, மரணமாய் இருக்கின்ற பிரகிருதியினின்று விடுபடுகின்றவர்கள் முக்தர்கள் ஆகின்றனர். பிறப்பு இறப்பினின்று விடுதலை பெற்றவர்கள் என்பது இதன் பொருள். அங்ஙனம் விடுதலை அடைந்தவர்கள் யாண்டும் பரமன் மயமாகப் பரமனையே சார்ந்திருக்கின்றனர்.

13. अव्ययः அவ்யய:—மாறுபாடு அடையாதவன்.

இவ்வுலகம் ஐந்து பூதங்களைக் கொண்டு ஆகியது. அவ்வைந்தும் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் எனப்படுகின்றன. இந்த ஐந்தனுள் ஆகாயம் நீங்கலாக ஏனைய யாவும் சர்வகாலமும் நிலை மாறி மாறி அமைந்து வருகின்றன. மற்று, முற்றிலும் சூட்சுமமாயுள்ள ஆகாயம் அல்லது ஆகாசமோ யாண்டும் தன் மயமாயிருக்கிறது. பரமாத்மன் அங்ஙனம் யாண்டும் மாறியமைகின்ற பிரபஞ்சத்துக்கு ஆதாரமாக இருக்கிறார். எக்காரணத்தைக் கொண்டும் அவர் மலினமடைவதில்லை. பிரபஞ்சத்துக்குத் தோற்றமும் ஒடுக்கமும் உண்டு. பரமாத்மன் யாண்டும் தோன்றாது, ஒடுங்காது, மாறாது தன் மயமாய் இருக்கிறார்.

14. पुरुषः புருஷ:—புரத்திலே வசித்திருப்பவன் புருஷன்.

புரம் என்பது இயற்கைக்கும் மானுட சரீரத்துக்கும் பொதுப்பெயராம். மானுட சரீரம் நவத்துவாரபுரம் என இயம்பப்பெறுகிறது. ஒன்பது வாயில்களை உடைய இருப்பிடம் என்பது அதன் பொருள். பிரகிருதிக்கும் புரி அல்லது புரம் என்பது பெயர். அதில் வீற்றிருப்பவன் புருஷன். தோன்றியுள்ள யாவும் தோற்றத்துக்கு வருவதற்கு முன்பே அவன் யாண்டும் தன் மயமாய் நிலைத்திருக்கிறான் என்பது இதன் பொருள். உடலிலும், இயற்கையிலும் புருஷன் வீற்றிருப்பதால் அவை யாண்டும் மேன்மையுற்று மிளிர்கின்றன. வீட்டில் குடியிருக்கும் மானுடன் ஒருவன் அப்போதைக்கப்போது தன் வீட்டில் ஏற்படும் குறை நிலைகளைப் பழுது பார்த்து நல்ல நிலையில் வைத்திருக்கிறான். இதேவிதத்தில் அகிலாண்டம் முழுதிலும் புருஷன் வீற்றிருப்பதால் அது பழுதுபட்டுப்போகாது யாண்டும் நல்ல நிலையில் இருந்துவருகிறது. எடுத்துக் கொண்ட முயற்சிக்கேற்ற சன்மானத்தை வழங்குவதாலும், பிரளயகாலத்தில் பிரபஞ்சம் அனைத்தையும் தன்னுள்ளே அடக்கிக்கொள்வதாலும் அவன் புருஷன் எனப்படுகிறான். மற்று, புரி அல்லது புரம் முழுதிலும் அவன் நீக்கமற ஊடுருவிப் பாய்ந்திருப்பதாலும் அவன் புருஷன் எனப்படுகிறான்.

15. साक्षी சாக்ஷி — தன் கண்கொண்டே பார்ப்பவன்.

பிரபஞ்சத்தில் நிகழும் அனைத்தையும் அவன் சதாபார்த்துக் கொண்டிருப்பதால் சாக்ஷி என்னும் பெயர் அவனுக்கு வந்துள்ளது. அக்ஷம் என்பது கண். அக்ஷன் அல்லது அக்ஷி கண்ணை உடையவன். எல்லார் உள்ளத்திலும் அவன் மனசாட்சியாக அமர்ந்திருந்துகொண்டு அந்தந்த ஜீவனுடைய செயலுக்குச் சாக்ஷியாகிறான்.

16. क्षेत्रज्ञः க்ஷேத்ரக்ஞன் — க்ஷேத்ரம் என்னும் சொல் கழனி என்றும், நிலம் என்றும், குடியிருக்கும் இடம் என்றும், பிரகிருதி என்றும் பொருள்படுகிறது. இதன் பாங்கை உள்ளிருக்கும் அந்தராத்மன் சர்வகாலமும் அறிந்துகொண்டிருக்கிறான். ஆதலால் அவனுக்கு க்ஷேத்ரக்ஞன் என்னும் பெயர் வந்துள்ளது.

ஞானேசுவரர் சரிதம்

அணிமா, மஹிமா, லகிமா, கரிமா, பிராப்தி, பிராகாம்யம், ஈசத்துவம், வசித்துவம் என்பன அஷ்டமா சித்திகளாகும். மனதை அடக்கிப் பழகினவர்களுக்கு இச்சித்திகள் கைகூடுகின்றன. இச்சித்திகளில் மனதைச் செலுத்தாது பரநாட்டத்தில் மனதைச் செலுத்துகின்றவர்களுக்குப் பாரமார்த்திகத் தத்துவங்கள் தெளிவாக விளங்குகின்றன. அஷ்டமா சித்திகளில் மேன்மை அடைந்திருந்தும் அவற்றில் கருத்துச் செலுத்தாது உத்தவ சித்தர் போன்ற சித்தர்கள் சாதனையில் கருத்து மிகச்செலுத்திவந்தார்கள். பிராம்ம முகூர்த்த நேரத்தில் எழுந்திருந்து சந்திரபாகா நதியில் நீராடி ஜபதபங்களை முடித்துக்கொண்டு சாந்தமூர்த்தியாக நாபாஜி சித்தர் அமர்ந்திருந்தார். உத்தவ சித்தர் முதலான சித்தபுருஷர்கள் நாபாஜி சித்தரை வலம் வந்து பணிந்து விண்ணப்பிக்கலாயினர். ''குரு சிகாமணியே! பக்தர்களின் சரிதத்தைக் கூறி எங்களை மகிழ்வியுங்கள்'' என்றனர். "யோகீசுவரர்களே! பக்தர்கள் அல்லது ஜீவன்முக்தர்களுடைய சரிதங்களை அன்புடன் சொல்கின்றவர்களும், இன்பமுடன் கேட்கின்றவர்களும் பிரம்மானந்தம் அடைவார்கள். பக்தர்களுடைய வரலாற்றைக் கேட்குந்தோறும் அஞ்ஞானம் அகல்கின்றது. மெய்ஞ்ஞான விளக்கம் ஏற்படுகின்றது. வெளி விஷயாதிகளில் செல்லும் மனது உள்முகமாகச் சென்று பேரின்பத்தை அனுபவிக்கின்றது. கனவிலும் சிற்றின்பத்தை எண்ணுது பேரின்பத்தில் சதா மனது மூழ்கி இருக்கின்றது. எனவே பக்தர்களின் சரிதத்தைக் கேட்பவர்கள் பாக்யவான்கள் ஆகின்ருர்கள்.'' இங்ஙனம் பக்தர்களின் சரித்திரத்தைக் கேட்பதனல் உண்டாகும் மஹிமையை நாபாஜி சித்தர் கூறிவிட்டு மஹா பக்தராகிய ஞானேசுவரரின் சரிதத்தைக் கூறலானர்.

கோதாவரி நதிக்கரையில் ஆபெகா என்னும் ஊரில் கோவிந்த பண்டிதர் என்னும் பக்தர் ஒருவர் இருந்தார். அவர் வைகுந்தநாதனை வைகலும் வணங்கி வந்தார். அவருக்கு நிருபா என்னும் நிர்மல மனைவியும் இருந்துவந்தாள். அவர் அரசனிடம் கணக்கர் தொழில் செய்து வந்தார். அன்பர் பணி செய்வதில் ஆர்வமிக உடையவராக விருந்தார். அவருக்கு எல்லாம் அமைந்திருந்தும் புத்ரபாக்யம் மட்டும் அமையாது இருந்தது. அவரும் அவர் மனைவியும் தங்கள் குலதெய்வத்திடம் தங்களுக்கு ஒரு புத்திரனைத் தந்தருளுமாறு தோத்திரம் செய்து வந்தார்கள். பகவான் அருளால் அவர்களுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு அவர்கள் வழிபட்டு வந்த இறைவனுடைய விடோபா என்னும் பெயரையே வைத்தார்கள். குழந்தை கல்விப் பயிற்சியை முடித்து வாலிப தசையை அடைந்ததும் தங்கள் மகனுக்கு விவாகம் செய்துவைக்க வேண்டும் என்று பெற்ருேர்கள் விரும்பினர்கள்.

விடோபா அவர்களுடைய விருப்பத்துக்கு மாருக "எனக்கு விவாகம் வேண்டாம்; நான் தீர்த்தயாத்திரை போகவேண்டும்; அதற்கு எனக்கு அனுமதி தாருங்கள்" என்று கேட்டார். பெற்ருேர்கள் சிறுவனைப் பார்த்துப் பகர்ந்ததாவது: "எங்களைப் பிரிந்துபோக உனக்கு எவ்வாறு மனம் வந்தது? இனி நீ இல்லறத்தில் சௌக்கியமாகவிருந்து வயதான எங்களை மகிழ்வித்து நல்லறம் நடத்தி வர வேண்டும். நாங்கள் அதை விரும்புகிருேம். நீ அதற்குச் சம்மதிக்கவேண்டும்.'' விடோபா அதற்கு மறுமொழி தந்ததாவது: "இவ்வுடல் நிலையற்றது; செல்வம் நீர்மேல் எழுத்துப் போன்றது; இளமை நீர்மேல் குமிழி போன்றது; ஆயுள் வில்லிலிருந்து புறப்பட்ட அம்புபோன்றது; மனம் மான் போன்று அலையும் தன்மையுடையது. இவற்றை எல்லாம் நீங்கள் நன்கு அறிந்திருக்கிறீர்கள். அப்படி அறிந்துள்ள நீங்கள் விவாகம் செய்துகொண்டு சம்சாரசாகரத்தில் மூழ்குமாறு கூறுவது முறையோ? மெய்ஞ்ஞானநிலையைவிட்டு நான் இல்லறத்தில் ஈடுபடுவேனே? காம எண்ணத்தோடு பெண்களைத் தொடுவேனே? சம்சாரம் என்னும் தொல்லையில் அகப்பட்டவர்களுக்குத் துக்கமே அன்றி சுகம் உண்டோ? அன்புள்ள அன்னையே! இன்புடன் வளர்த்த தந்தையே! நான் ஞானத் தெளிவைப் பெற உதவுங்கள். பெற்ருேர்களே! வைராக்யம் இல்லாதவனுடைய சாஸ்திர விசாரணையும், ஞானமில்லாதவனுடைய விவே

கமும், பதிவிரதத்தன்மை இல்லாதவளுடைய அலங்காரமும், சத்கர்மம் செய்யாமல் கழியும் நாளும், பக்தியில்லாத பூஜையும் பயனற்றவை. அவைபோன்று இளமையிலேயே மோக்ஷமார்க்கத்தை நாடாத புருஷனும் பயனடையான். ஆதலால் முதலில் நான் உத்தமர்களிடம் சென்று ஞானசாஸ்திரங்களை அறிந்துகொண்டு ஞானத் தெளிவுடன் திரும்பி வந்து உங்கள் விருப்பப்படி நடந்துகொள்வேன்." இங்ஙனம் கூறித் தாய்தந்தையரை விடோபா வணங்கினார். "குழந்தாய்! சன்மார்க்கத்தில் செல்லும் உன்னைத் தடுப்பது கூடாது. விரைவில் நீ ஞானம் பெற்று எங்களிடம் திரும்பி வரவேண்டும்" என்று ஆசி கூறினார்கள். விடோபா பெற்றோர்களுடைய ஆசியைப்பெற்றுப் பல புண்ணிய க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை சென்றார்.

யாத்திரையில் அலங்காவதி என்னும் ஊரை ஒருநாள் அடைந்தார். அவ்வூரில் சீதோபந்து என்னும் உத்தமர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் விடோபாவைப் பார்த்ததும் அவர் வேதாந்தி என்று அறிந்து ஆனந்தம் அடைந்து அவரைத் தம் வீட்டுக்கு அழைத்துச் சென்றார். இரண்டு நாட்கள் தம் வீட்டில் தங்கவேண்டும் என்று சீதோபந்து அவரைக் கேட்டுக் கொண்டார்.

அன்று இரவு அவர்கள் தூங்கும்பொழுது சீதோபந்து சொப்பனத்தில் பகவான் வந்து "உத்தமனே, இப்பொழுது இன்று உன் வீட்டில் படுத்துறங்கும் விடோபாவுக்கு உன் மகளை மணம்செய்து வைத்துமகிழ்ச்சி அடைவாயாக" என்று கூறி மறைந்தார். சீதோபந்து கனவிலிருந்து விழித்தெழுந்தார். ஒருவேளை தம் மனதிலுள்ள எண்ணம் கனவாகத் தோன்றியிருக்குமோ என்று எண்ணினர். இறைவனுடைய திட்டத்தைத் தம் மனோ கற்பனை என்று ஏன் தாம் எண்ணவேண்டும் என்று அடுத்த கணம் நினைத்தார். முடிவில் விடோபாவை எழுப்பிக் கனவில் தமக்குப் பகவான் சொன்னதைக் கூறித் தம் புதல்வியை மணம் செய்துகொண்டு மகிழ்வுடன் அங்கேயேஇருக்க வேண்டும் என்றார். விடோபா திகில் அடைந்தார். "கிணறு வெட்டப்போய்ப் பூதம் புறப்பட்டது போன்றிருக்கிறது. கல்யாணம் வேண்டாம் என்று வந்த எனக்கு இது என்ன சோதனை!" என்று எண்ணியவராய்ச் சீதோபந்துவை வணங்கி, "தாங்கள் இப்படிப் பேசலாமா? என்னிடம் அன்பு காட்டியது இதற்காகத்தானா! இனி இவ்வார்த்தையை என்னுடன் பேசாதிருக்குமாறு உங்களை வேண்டிக் கொள்கிறேன். நான் ஞானம் பெற யாத்திரை மேற்கொண்டுள்ளேன். பிரம்மச்சரிய விரதம் பூண்டுள்ளேன். என் விரதத்தை நீங்கள் கெடுக்கலாகாது" என்றார். "அரசன் வார்த்தையை மீறினாலும், மாதா பிதாக்களின் வார்த்தைகளை மீறலாகாது. மாதா பிதாக்களின் வார்த்தையை மீறினாலும் குரு வார்த்தையை மீறலாகாது; குரு வார்த்தையை மீறினாலும் தெய்வத்தின் வார்த்தையை மீறலாகாது. தெய்வத்தின் வார்த்தைப்படி என் மகளை நீ விவாகம் செய்துகொள்ள வேண்டும்" என்றார் சீதோபந்து. "உத்தமரே, உங்கள் கனவில் தோன்றிக் கூறிய இறைவன் என் கனவில் தோன்றி ஏன் உரைக்கலாகாது?" என்றார் விடோபா. அடுத்த நாள் இரவு 'உன் கனவிலும் அவர் கூறுவார்' என்று சீதோபந்து கூறி அன்று அவரைத் தம் வீட்டிலேயே தங்கச் செய்தார்.

விடோபா கனவிலும் இறைவன் தோன்றி "குழந்தாய்! விடோபா! சீதோபந்துவின் புதல்வி பதிவிரதைகளுள் தலைசிறந்தவளாவாள். எனவே அவளை விவாகம் செய்து கொள்வாயாக" என்று கூறி மறைந்தார். விடோபா விழித்தெழுந்ததும் தாம் கொண்ட வைராக்யத்துக்குக் கடவுளே தடைபோடுவது போல் தோன்றுகின்றது. இங்குத் தங்கினால் இனி ஆபத்து வந்துவிடும். விடிவதற்குள் இங்கிருந்து கிளம்பி விடவேண்டும் என்று எண்ணிச் சந்தடியில்லாமல் வெளியே கிளம்பிப்போனார். சீதோபந்துவின் புத்ரியாகிய ருக்மாபாய் விவேகத்துடன் கூடிய ஞான புருஷனையே மணந்து கொள்ள வேண்டும் என்று வெகு நாளாகப் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தாள். விடோபா தனக்கு மணாளனாகக் கிடைக்கப்போகிறார் என்பதை அறிந்ததும் பிரார்த்தனை நிறைவேறியதாக உணர்ந்தாள். எனவே விடியும் பொழுதை எதிர்பார்த்துக்கொண்டு விழித்துக்கொண்டிருந்தாள். அப்

பொழுது விடோபா வெளியேறுவதைக் கண்டாள். பெற்ரோர்கள் ஏற்கனவே தன்னை இவருடைய மனைவி என்று தீர்மானம் செய்துவிட்டார்கள்; எப்போது அவர்கள் தீர்ப்புச் செய்தார்களோ அப்பொழுதே தான் அவருக்கு மனைவியாகி விட்டதாக எண்ணினுள். "இவர் நம்மைமோசம் செய்துவிட்டுப்போகிருர் போல் தெரிகிறது. இவர்தாம் எனக்குக் கணவராவார். இவரை விட்டு இனிப் பிரிந்திருக்கக் கூடாது" என்று எண்ணியவளாய் அவர் பின் ஓடி அவர் பாதங்களில் வீழ்ந்து "சுவாமி, எங்கே யாருக்கும் தெரியாமல் மெல்லப் போகிறீர்? தங்களுக்கு இங்கிருக்க விருப்பம் இல்லை என்ருல் தாங்கள் விரும்பும் இடத்துக்கு நாம் இருவரும் போகலாம்" என்று கூறி அவரைப் போக ஒட்டாது தடுத்தாள். "பெண்ணே! நீ யார்?" என்று விடோபா கேட்டார். "சுவாமி, என் தந்தை என்னை உங்களுக்கு மணம் செய்விக்க எண்ணி உங்களை இங்குத் தங்கச் செய்துள்ளார். அவர் இப்பொழுது அறையில் தூங்கிக்கொண்டிருக்கிருர். அவருக்குத் தெரியாமல் நீங்கள் போவதை அறிந்து உங்களை அழைத்துச் செல்ல வந்தேன்" என்ருள். விடோபா திகில் அடைந்தார். "பெண்ணே! பெற்ருேர்கள் உன்னை ஒருவனுக்கு விவாகம் செய்யும் பரியந்தம் உனக்குத் தாயும் தந்தையும்தான் தெய்வமாவார்கள். நீ தனித்து எப்புருஷ விடமும் உரையாடாமல் இருப்பதே விரதமாகும். அயல்வீடு அறியாமல் இருப்பதே அழகு ஆகும். கற்பைக் காப்பதே தவமாகும். எனவே இந்த நடு இரவில் வழிப்போக்கனுகிய என்னைத் தனித்து வந்து வழி மறிக்கலாமா? பெண்ணொருத்தி தனித்து ஒரு புருஷனுடன் பேசத் துணியும்பொழுதே விபசாரி ஆகிவிடுகின்ருள்" என்று விடோபா கடுமையாகப் பேசினர். ருக்மாபாய் விடோபாவின்பாதங்களில் பணிந்து "என் தாய் தந்தையர்கள் என்னை உமக்கு விவாகம் செய்யவேண்டும் என்று நினைத்து உம்மிடம் எப்பொழுது பேசினர்களோ, எப்போது பகவான் என்னை உமக்கு மணம் செய்விக்க வேண்டும் என்று கனவில் கூறினரோ, எப்போது நான் உம்மைக் கணவன் என்று பாவித்தேனே அப்போதே நமக்கு விவாகமாகிவிட்டது. எல்லாவற்றிற்கும் மனமே காரணம். புறச் சடங்கில் என்ன இருக்கின்றது? உமக்கு என் தாய் தந்தையரிடம் சொல்லிப்போக மனமில்லாவிட்டாலும் நான் இனி உம்மைப் பிரிந்திருக்க முடியாது. இது சத்தியம் ஒருவேளை பலவந்தமாக என்னைத் தள்ளிவிட்டுப்போனலும் என் உயிரை உமக்கு அர்ப்பணம் செய்வேன். இது உறுதி" என்று ருக்மாபாய் அழுத்தம் திருத்தமாகக் கூறினள். இதைக் கேட்ட விடோபா "பெண்ணே! தாய் தந்தையர்கள் தங்களுடைய பெண்ணை பலருக்கும் கொடுக்க யோசிப்பார்கள். அப்பொழுதெல்லாம் அப்பெண் அவர்களுக்கு மனைவியாவாளா? நிச்சயார்த்தமான பிறகும் விவாகம் நடவாது போவதுண்டு அன்ருே? நீ என்னேடு பேசுவதை யாராவது அறிந்தால் நிந்தைக்கு இடமாகும். சீக்கிரம் வீட்டுக்குப் போய்ச் சந்தோஷமாய் இரு. நான் நாடோடி மனிதன். எனக்கு விவாகம் செய்துகொள்ளவேண்டும் என்ற விருப்பமும் இல்லை" என்று கூறிவிட்டு விடோபா மேலே நடந்தார். "சுவாமி! கற்புள்ள மங்கை ஒருத்தி ஒருவரைக் கணவர் என்று தீர்மானித்த பிறகு அவரையன்றி வேருெருவரைக் கனவிலும் நினைக்கக்கூடாது. நான் உம்மைக் கணவர் என்று தீர்மானித்துவிட்டேன். இனி நான் உம்மைப் பிரிந்து வேருெருவரைக் கணவராகக் கொண்டால் அதுதான் நிந்தைக்கு இடமாகும்" என்று ருக்மாபாய் கூறினள். "பெண்ணே! நீ கூறும் வார்த்தை சரியானதன்று. அருமையாய்ப் பெற்று வளர்த்த தாய் தந்தையரை வஞ்சித்து வழிப்போக்கனுகிய என்னுடன் நீ வருவது பொருந்துமா? நீ வீட்டுக்குத் திரும்பிப்போ" என்ருர். "என் பிராண நாதனே! தாங்கள் என்னை நிந்தித்தாலும் எனக்கு மகிழ்ச்சியே உங்களுடைய சொத்தை நீங்கள் என்னவேண்டுமென்ருலும் செய்துகொள்ளுங்கள். உங்களுடைய சொத்தாகிய என்னை சித்திரவதை செய்வதற்கும் உங்களுக்கு உரிமையுண்டு" என்ருள் ருக்மாபாய். "இதென்ன விபரீதமாக முடிந்திருக்கிறது! பகவானுடைய மாயைதான் என்னே! தெய்வமே! என்னைப் பழிக்கு ஆளாக்கி விட்டாயே! இந்த இக்கட்டான நிலையிலிருந்து எப்படி உய்வடைவேன்?" என்று துக்கமடைந்

தார் விடோபா. அவ்வமயம் ருக்மாபாயினு டைய தாய் தந்தையர்கள் விழித்தெழுந்து வெளியில் ஓடிவந்து விடோபாவைப் பார்த்து "யாரும் அறியாமல் இப்பெண்ணைத் தெரு வுக்கு அழைத்து வந்து எங்களுக்குத் துன் பம் தரலாமா?" என்று கேட்டார்கள். அவ் வார்த்தையைக் கேட்டவுடன் விடோபா தம் இருசெவிகளையும் மூடிக்கொண்டு "இப் பெண்ணை நான் இச்சித்திருப்பேனுகில் மீளா நரகிற்குப் போவேன்" என்று கூறிவிட்டுச் சீதோபந்துவைப் பார்த்தார். "ஐயா! உம் மால் நான் மேன்மை பெற்றது போதும்! இம்மட்டிலும் என்னை விட்டுவிடுங்கள்" என்று கூறிவிட்டு அவ்விடத்தைவிட்டு நகர்ந்தார். "என் அருமை மருமகனே! பகவான் உம் சொப்பனத்தில் வந்து ஏதாவது கூறினுரா?" என்று சீதோபந்து விட்டோபாவைக் கேட் டார். "பகவான் பிரத்யக்ஷமாய் வந்து என்னை விவாகம் செய்துகொள்ளும்படி கூறினு லும் அதற்கு நான் இசைவதாக இல்லை. உம் வேலையை நீங்கள் பார்த்துக்கொள்ளுங் கள்" என்று கூறிவிட்டு விடோபா மேலும் நடந்தார். சீதோபந்து வற்புறுத்தி அழைக்க விடோபா சீதோபந்துவுக்கு வந்த னம் செய்து, "ஐயா! என் உயிரைக் கேட்கி னும் தருவேன். விவாக விஷயத்தில் நான் சம்மதிக்க இயலாது. என்னை விட்டுவிடுங் கள்" என்ருர் விடோபா. "அப்பா! விடோபா, உன்னுல் என்மகளை இழந்துவிடவேண்டியுள் ளது. நீ என் மகளை மணந்துகொள்ள மறுத்து விட்டுச் செல்வாயானுல் அவள் இறந்து போவாள். பிறகு நானும் இறந்துபோவேன். இதனுல் வரும் பாவத்தை மேற்கொண்டு நீ யாத்திரை செல்வாயானுல் உன் எண்ணம் நிறைவேறுமா? நீ செய்யும் தவம்தான் சிறப் படையுமா?" என்ருர் சீதோபந்து. "இறைவா! என் விரதத்தை நீ இப்படிக் கெடுக்கலாமா? இப்பெரியவர் என்னைப் போகாமல் தடுக்க லாமா?" என்று மனமுருகி இறைவனைப்பிரார்த் தித்தார். அப்பொழுது இறைவன் அசரீரி யாக வந்து "விடோபா, இவர் ஓர் உத்தமர் ஆவார். இவர் மகள் ருக்மாபாயும் உத்தமி ஆவாள். எனவே அவளை நீ மணந்துகொள் வதில் உன் தவத்துக்கு எவ்வித இடையூறும் வராது. நான் கூறுவதை மறுக்காதேஎன்ருர்." விடோபா அவ்வாக்கியத்தைக் கேட்டுத் திகில் அடைந்தார். மேலும் செய்வதற்கு ஒன்றும் தெரியாது திகைத்து நின்ருர். சீதோபந்துவும் இறைவனுடைய அருள் வாக்கைக் கேட் டார். பரமபந்தன் தம் மகளுக்கு மணளனைக் கிடைத்ததைக் குறித்துப் பெருமகிழ்வு அடைந் தார். விடோபாவின் கையைப் பிடித்து இழுத் துச் சென்று தம் மகள் ருக்மாபாயை அவருக்கு மணம் செய்வித்து மகிழ்ச்சி அடைந்தார். "ஐயா! நீங்கள் எனக்கு மணம் செய்துமகிழ்ச்சி அடைந்தீர்கள். இறைவன் வாக்குப்படி மணம் முடிந்துவிட்டது. நான் மேற்கொண்டு யாத் திரை செய்யவேண்டும். அதற்குத் தடை சொல்லாது விடை கொடுங்கள்" என்ருர் விடோபா. சீதோபந்து தாமும் அவருடன் யாத்திரை வருவதாகக் கூறி பண்டரிபுரம், கோகர்ணம், திருவேங்கடம், சிதம்பரம், இராமேஸ்வரம் முதலான திவ்ய க்ஷேத்திரங் களுக்கு அவருடன் யாத்திரை சென்ருர். பல புண்ணிய நதிகளில் ஸ்நானம் செய்தார்கள். யாத்திரையை முடித்துக்கொண்டு அலங்காவதி ஊருக்குத் திரும்பி வந்து சேர்ந்தார்கள். "ஐயா! என் தாய் தந்தையர்களைப் பிரிந்து வெகுநாளாகிவிட்டது. எனக்கு விவாகமான தும் அவர்களுக்குத் தெரியாது. உடனே சென்று நான் அவர்களைக் காணவேண்டும்" என்ருர் விடோபா.

சீதோபந்து தம் குடும்பத்துடன் மருமகனை அழைத்துக்கொண்டு சம்பந்தியைப் பார்க்கச் சென்ருர். பெற்ரேர்கள் மகனைக் கண்டதும் பெருமகிழ்வு அடைந்தார்கள். மாதா பிதாக் களின் மலரடிகளில் விடோபா வீழ்ந்து வணங் கினர். ருக்மாபாயும் மாமனர், மாமியார் பாதங்களில் வீழ்ந்து வணங்கினள். "அப்பா! மகனே! உன்னுடன் வந்துள்ள இவர்கள் யார்? இவர்களை எங்களுக்கு அறிமுகம் செய்து வைப்பாயாக" என்ருர்கள். விடோபா நடந்த நிகழ்ச்சிகளை எல்லாம் விரிவாக எடுத்துச் சொன்னர். "இவர்கள் இப்பொழுது நமக்கு உறவினர்கள் ஆகிவிட்டார்கள் என்ருர்." சீதோ பந்துவையும், அவருடைய மனைவியையும் சுட் டிக்காட்டி "இவர்கள் உங்களுக்குச் சம்பந்தி களாகிருர்கள்" என்ருர். ருக்மாபாயைச் சுட்டிக்

காட்டி இம்மங்கை உங்களுக்கு மருமகளாகி ருள்'' என்று விடோபா கூறினர். நிருபாயி, ருக்மாபாயின் மேனி அழகையும், முகப்பொலிவையும், அடக்க ஒடுக்கத்தையும் கண்டு மிகவும் பாராட்டினுள். மருமகளேயும், அவள் தாயாரையும் அன்புடன் வரவேற்று உபசரித்தாள். கோவிந்த பண்டிதன் சீதோபந்துவுக்கு வந்தனம் செய்தார். ''உத்தமரே! உம் கிருபையால் அன்ரோ என் அருமைப் பாலகனேக் கண்குளிரப் பார்த்தேன். நான் உமக்கு என்ன உபகாரம் செய்ய முடியும்!" என்ருர். சீதோபந்து கோவிந்த பண்டிதரை வணங்கி ''உத்தமரே! உம் அருமைப் புதல்வனுக்கு என் மகளேக் கொடுக்கும் பாக்யம் எனக்குக்கிடைத்தது. கடவுள் அசரீரியாக இருந்து பலரும் அறியும் வண்ணம் திருவாய் மலர்ந்த திருவாக்கைக் கேட்டபொழுது நான் அளவிலா ஆனந்தம் அடைந்தேன். ஆனல் உம்மை இப்பொழுது சந்தித்து அதனினும் பன்மடங்கு ஆனந்தம் அடைகின்றேன். பரம சாதுவாகிய உம்முடன் சகவாசம் செய்யக் கூட்டி வைத்தது குருகடாக்ஷமாகும்" என்று கூறினர். இங்ஙனம் இரு குடும்பத்தினர்களும் பரமானந்தம் அடைந்தார்கள். இனம் இனத்தைச் சாரும் என்ற கோட்பாட்டிற்கு ஏற்ப பக்தர்களேப் பக்தர்களோடு இணேத்து வைக்கின்ற செயலே இறைவன் செய்கின்ருர். பக்தர்கள் அடையும் ஆனந்தம் குற்றமற்ற ஆனந்தம். அதனே உலகியல் இன்பத்தோடு ஒப்பிட முடியாது. பக்தர்கள் அடையும் ஆனந்தம் உள்ளத்தையும் உடலேயும் தூய்மையாக்குகின்றது. அவ்வானந்தத்தின் மூலம் உள்ளம் உயர்நிலேயை அடைகிறது. அது உடல் சம்பந்தமான ஆனந்தம் அன்று. ஆகவே அது ஒப்பு உயர்வற்ற ஆனந்தம் ஆகும். அத்தகைய ஆனந்தத்தை விடோபாவின் குடும்பத்தினரும், ருக்மாபாயின் குடும்பத்தினரும் பெற்றுப் பெரிய பேறு பெற்ருர்கள்.

கோவிந்த பண்டிதருடைய இல்லத்தில் சீதோபந்துவும் அவருடைய மனேவியும் சில நாட்கள் தங்கி இன்புற்றிருந்தார்கள். பிறகு சீதோபந்துவும் அவருடைய மனேவியும் கோவிந்தபண்டிதரிடமும் அவருடைய மனேவியிடமும் விடைபெற்றுக்கொண்டு தங்கள் சொந்த ஊராகிய அலங்காவதிக்குச் சென்ருர்கள். தங்கள் மகள் ருக்மாபாய்க்குவேண்டிய புத்திமதிகளேக் கூறிவிட்டுச் சென்ருர்கள்.

விட்டோபா ருக்மாபாயுடன் இல்லறவாழ்க்கையில் ஈடுபட்டிருந்த பொழுதிலும் மனதைத் தெய்வத்தின்பால் வைத்து வைராக்ய புருஷராக வாழ்ந்து வந்தார். துறவையே அவர் மனதில் லட்சியமாகக்கொண்டிருந்தார். சின்றின்பத்துக்கு உட்படாது அவர் மனம் யாண்டும் பக்தியிலேயே மூழ்கியிருந்தது. சாதுசங்கத்திலும் வேதாந்த விசாரத்திலும் அவர் பெரிதும் ஈடுபட்டார். சேற்றுமீன் சேற்றுக்குள்ளிருந்த பொழுதிலும் சேறு அதன்மீது படிவதில்லே. அங்ஙனம் விடோபா சம்சாரத்தில் இருந்தபொழுதிலும் அவருடைய மனம் சிற்றின்பத்துக்கு வசப்படாதிருந்தது.

விடோபாவின் பெற்ரேர்கள் வயோதிகப் பருவம் அடைந்து முக்தி அடைந்தார்கள். அவர்களுக்குச் செய்யவேண்டிய கிரியைகளே எல்லாம் விடோபா முறையாகச் செய்து முடித்தார். தம் மனேவியை நோக்கிப் ''பெண்ணே, நான் என் தந்தையின் அஸ்திகளேக் கொண்டுபோய்க் கங்கையில் விடவேண்டும். நான் போன பிறகு நீ இங்கு தனித்திருக்க மாட்டாய். ஆகையால் நான் உன்னேக் கொண்டு போய் உன் தந்தையிடம் விட்டுப் போகிறேன். என் பெற்ரேர்கள் சம்பாதித்த சொத்தில் உனக்குத் தேவையானதை நீ எடுத்துக்கொள். மீதியுள்ளதைத் தேவையானவர்களுக்கு எடுத்து வழங்கு'' என்று விடோபா கூறினர். ருக்மாபாயும் கணவன் கட்டிய மங்கலியத்தைத் தவிர மற்ற எல்லாப்பொருள்களேயும் மகிழ்ச்சியுடன் தானம் செய்தாள். விடோபா அவளுடைய மனப்பான்மையை மிகவும் பாராட்டினர். தம் மனேவியை அழைத்துக்கொண்டு மாமனர் வீட்டுக்குச் சென்ருர். ஆங்குத் தன் மாமன் மாமிகளே வணங்கி அவர்களிடம் தம் மனேவியை ஒப்படைத்துக் கூறியதாவது: ''நான் என் பெற்ரேருடைய அஸ்தியைக் கங்கையில் கரைப்பதற்குக் கொண்டு செல்கின்றேன். உங்கள் மகள் உங்களுடன் இருக்கட்டும்.'' ''நீங்கள் இங்குச் சில நாட்கள் தங்கிப் போகலாம்'' என்று சீதோபந்து கூறினர்.

(தொடரும்)

ஸ்ரீமத் பாகவதம்

(சுவாமி ஸதானந்தர்)

அத்தியாயம் 13

சூதர் சொன்னதாவது: விதுரர் யாத்திரை போய்க்கொண்டிருந்தபோது சுமந்து என்பவரிடம் ஒரு அரிய விஷயத்தைத் தெரிந்துகொண்டார். மானுட ஜன்மத்தின் ஒரே குறிக்கோள் கடவுளான ஸ்ரீ கிருஷ்ணனை அடைதலே ஆகும் என்ற இந்த ஆன்றோர் வாக்கு அவரது பக்தியை அதிகரிக்கச் செய்தது. தம் யாத்திரையை முடித்துக்கொண்டு விதுரர் ஹஸ்தினபுரம் திரும்பினர். அவர் அரண்மனையில் தங்களோடு இல்லாதபோது யுதிஷ்டிரர், மற்ற பாண்டவர்கள், திருதராஷ்டிரன், கிருபர், குந்தி, காந்தாரி, திரௌபதி ஆகிய யாவருக்கும் வாழ்க்கையே சுவாரஸ்யமற்றுப் போயிற்று. அவர்களுடைய வாழ்வு வெறும் ஜடம்போன்று நடந்து வந்தது. அவருடைய வருகையைக் கேட்டதும் அவர்கள் உடலில் புதிய உயிரோட்டம் உண்டாயிற்று. அவரை வழியில் சந்திக்க அவர்கள் விரைந்தார்கள். அவரவர் வயதுக்கேற்ப அவரை அன்புடன் வணங்கியும், ஆலிங்கனம் செய்தும் வரவேற்றனர். பின்னர் அவர் அரண்மனைக்குச் சென்று உணவும் ஓய்வும் எடுத்துக்கொண்டார். பற்றற்ற நேர்மையே வடிவெடுத்த மிக உயர்ந்த ஆத்மாவாகிய விதுரரை ஒரு நல்ல ஆசனத்தில் எழுந்தருளப் பண்ணி அதி அன்புடனும் மிகுந்த மரியாதையுடனும் யுதிஷ்டிரன் அவருக்குப் பணிவிடை பண்ணினன். பிறகு அவரிடம் மிகவும் தழதழத்த குரலில் கேட்டான்: "ஐயனே! தங்களுக்கு இவ்வுலக ஞாபகம், உடல் ஞாபகம் இருக்கிறதா? எங்களைப் பற்றியெல்லாம் நினைக்கிறீர்களா? தாய்ப் பறவை தன் குஞ்சுகளைத் தன் சிறகுக்குள் அடக்கி வைத்துக் காப்பது போன்று தாங்கள் எங்களையும் எங்கள் தாயாரையும் பேரன்புடன் காத்தருளினீர். தங்கள் அருளால் நாங்கள் இன்று உயிர் வாழ்கிறோம். விஷ உணவினின்றும் அரக்குமாளிகைத் தீயினின்றும், இன்னும் இது போன்ற பல சதிகளினின்றும் எங்களைக் காத்தருளினீர்கள். நீங்கள் இப்போது ஒரு தல யாத்திரையை மங்களமாய் முடித்து வந்துள்ளீர்கள். நீங்கள் இந்த யாத்திரையில் எந்த எந்தத் தலங்களுக்குப் போனீர்கள்; எதை உண்டு எப்படிச் சஞ்சரித்தீர்கள்? தங்களைப் போன்ற உத்தம கிருஷ்ண பக்தர்கள் மூர்த்தி விசேஷம் பெற்ற, பாடல் பெற்ற ஸ்தலங்களுக்கு நிகராவீர்கள். சதா சர்வகாலமும் ஸ்ரீ கிருஷ்ணனை மனதில் ஸ்மரித்துக் கொண்டிருப்பவர்களின் விஜயத்தினால் அப்புண்ணிய க்ஷேத்திரங்களின் சான்னித்தியம் மேலும் உயரும். எங்கள் மாதா பிதாவிற்கு நிகரான ஐயனே, எங்கள் உயிர் நண்பர்களாகிய யாதவர்கள் ஸ்ரீ கிருஷ்ணனுடைய பாதுகாப்பில் துவாரகையில் க்ஷேமமாக இருக்கிறார்களா? நீங்கள் அவர்களைச் சந்தித்தீர்களா?"

இங்ஙனம் கேட்ட யுதிஷ்டிரருக்கு விதுரர் எல்லா விபரங்களையும் முறையே சொன்னர். ஆனால் ஒரு விஷயத்தை மட்டும் அவர் வேண்டுமென்றே சொல்லவில்லை. யாதவ வம்சம் முழுதும் அழிந்துபோன பேரதிர்ச்சியைத் தரக்கூடிய செய்தியை அவர் சொல்லவில்லை. மிகப் பிரசித்திபெற்ற அந்த வம்சத்துக்குக் களங்கம் போன்றுள்ள இந்த அழிவைக் கேட்டுப் பாண்டவர்கள் மனம் ஒடிந்து போவார்கள்.

இவ்விதம் பாண்டவர்கள் கடவுளாகக் கருதி உபசாரங்கள்செய்ய, விதுரர் ஹஸ்தினபுரத்தில் வாழ்ந்து வந்தார். அப்போது தம் மூத்த சகோதரனாகிய திருதராஷ்டிரனுக்குப் பல சத் விஷயங்களை எடுத்துச் சொன்னர். பிறவிக் குருடனாகிய திருதராஷ்டிரனுக்கு, இப்போது மனம் சுத்தமாக இருந்ததால், அப்போதனைகள் எல்லாம் அவனுக்குத் திருப்தியளித்தன, மனம் ஏற்றுக்கொண்டது. எல்லாரும் விதுரரை ஒரு சாதாரண மானுடன் என்றே அறிந்திருந்தனர். ஆனால் உண்மையில் அவர் யமதர்மராஜன். மாண்டவ்யர் என்கிற ரிஷியின் சாபத்தின் விளைவாக அவர் நூறு ஆண்டுகள் மானுட உலகில் வாழ்ந்தார். யமதர்மராஜன் விதுரராக மண்ணுலகில் வாழ்ந்த காலத்தில் சூரியதேவர் அவருடைய செங்கோல் தாங்கி அவருடைய கடமைகளைச் செய்தார்.

பரிக்ஷித்துப் பிறந்ததால் பரதவம்சம் முற்றுப் பெருமல் காப்பாற்றப்பட்டது குறித்துப் பாண்டவர்கள் மகிழ்ந்திருந்தனர். அதனல் அவர்கள் மனது ஒரு சிறிது உலகில் ஒட்டியிருக்கலாயிற்று. உலகக் கிருத்தியங்களில் ஊக்கமும் அபிமானமும் கொள்ளலாயிற்று. ஆயினும் ஜீவிதத்தின் முடிவுகாலம் அவர்களை வேகமாக நெருங்கிக்கொண்டிருந்தது. விதுரருக்கு இவ் விஷயம் தெளிவாக மனதில் இருந்தது. அவர் திருதராஷ்டிரனிடம் இங்ஙனம் பகர்ந்தார்: "அரசே! நீங்கள் என்ன காரியம் பண்ணிக் கொண்டிருக்கிறீர்கள்! மரணம் தங்களை வேகமாக நெருங்கிக் கொண்டிருக்கிறது. நீர் இந்த அரசாங்கத்தை விட்டு வனத்திற்குச் செல்வீராக. மனதைக்கடவுள்பால் நிலைநிறுத்துவீராக. நாம் அனைவரும் மரணமடைவது நிச்சயம். மரணத்தை விட நிச்சயமான நிகழ்ச்சி உலகில் வேறு ஒன்றுமில்லை. அதைத் தடுக்கவல்லவர் யார்? ஆகவே மனைவி, உற்ருர், ராஜபோகம், சரீரம் ஆகிய பற்றுக்களைத் துடைத்து விட்டு ஸ்ரீ வாசுதேவரையே தியானித்திருப்பீராக. மரண பயத்தைப் போக்கவல்லது ஹரியின் நாமமே. ஜீவனுக்கு ஒரே கதி, புகலிடம் ஸ்ரீ கிருஷ்ணனே ஆவார்.

"அரசே! உம் தாய் தந்தையர்; சகோதரர், நண்பர், மக்கள் மற்ற எத்தனையோ உறவினர்கள் எல்லாரும் உம் கண் முன்னே காலமாய் விட்டார்கள். உமக்கும் மிகவும் வயதாகிவிட்டது. உம் சரீரத்தில் சத்தெல்லாம் போய் விட்டது. நீர் வேறு ஒருவர் வீட்டில் வாழ்ந்து வருகின்றீர். நீர் பிறவியிலேயே குருடர். இப்போது காதும் செவிடாகிவிட்டது. மனது தளர்ச்சியினல் புரிந்துகொள்ளும் சக்தியையும் இழந்துவிட்டது. பற்கள் முழுவதும் உதிர்ந்து விட்டன. பசியே எடுப்பதில்லை. சரீரத்தில் கபம் நிறைந்துவிட்டது. இத்தகைய நிலையிலும் சரீரப்பற்றும், உலகப்பற்றும் ஜீவனை விட்டு விலகவில்லையே. ஆ! இதென்ன மாயை! இதென்ன அபிமானம்! அன்பான அண்ணு! தங்கள் புத்திரர்கள் நூற்றுவரையும் பீமசேனன் கொன்றுதள்ளினன். இப்போது அவன் இடுகிற சோற்றை நாய் போன்று உண்டு ஜீவித்து வருகிறீர். இவ்வுடல் வாழ்வில் தங்களுக்கு எவ்வளவு அபிமானம் இருக்கிறது என்று பாருங்கள். நீங்கள் எவ்வளவு விரும்பினுலும் மரணம் உங்களை விடப்போவதில்லை. அறியாமையில் பெரிய அறியாமை இவ்வுலக வாழ்வில் வைத்துள்ள பற்றுதல் ஆகும். நீர் யாரை விஷம், நெருப்பு மூலம் அழித்துவிட நினைத்தீரோ, முயன்றீரோ, யாருடைய மனைவியை மிகப்பெரிய ராஜசபையில் மானபங்கம் பண்ணினீரோ அவர்கள் உயிர் வாழ்கிறுர்கள். சீலமாக வாழ்கிறுர்கள். உம்மைத் தந்தை போன்று உபசரிக்கிறுர்கள். நீர் அவர்கள் தயவில் வாழ்ந்து வருகிறீர். இந்த ஜீவிதத்தால் உமக்குப் பயன் என்ன? இது நாள் வரை நடந்த சம்பவங்கள் தங்களுக்குத் தர்மத்தில் பிடிப்பையும், கடவுளிடத்தில் பக்தியையும், உலகினிடத்தில் விரக்தியையும் இன்னும் உண்டுபண்ணவில்லையா? நீர் என்ன பாதுகாப்புப் பண்ணினுலும் அதைக் காலதேவன் தவிடுபொடி பண்ணிவிடுவான். ஆகவே ஸ்ரீ கிருஷ்ணனையே ஸ்மரணை பண்ணுங்கள். ராஜ்யத்தைத் துறந்து வனத்துக்குச்சென்று தவத்தில் இருந்து உயிர் நீப்பீராக. அதுவே உமக்கு உய்வதற்கு வழியாகும்.

உலகில் வாழ்வாங்கு வாழ்ந்தான பிறகு முதுமையில் யார் ஒருவன் உலகப் பற்றுக்களை உதறி எறிந்து விட்டு, அகங்கார மமகாரங்களைத் துடைத்துத் தள்ளிவிட்டுத், தன் மீதி வாழ்நாளைத் தபஸில் ஈடுபடுத்துகிருனே அவன் பாக்கியவான் ஆகிருன். தன் வாழ்வின் சம்பவங்களிலிருந்தோ, சாஸ்திரங்களைப் படித்தோ, பெரியோர்கள் சொல்லக் கேட்டோ இவ்வுலகம், அது தரும் இன்பங்கள், சௌபாக்கியங்கள் எல்லாம் நிலையற்றவை என்றும் கடவுளைச் சரணடைதல், பக்தி பண்ணுதல், கடவுளை நாடுதல் ஒன்றே மானுட வாழ்வின் சிறப்பு, தலையாய பயன் என்றும் யார் தெரிந்து கொள்கிருனே அவனே மானுடருள் சிறந்தவன் ஆகிருன்; உலகப் பற்றுக்களை, பந்தங்களைத் துறந்து யார் ஹரியையே தியானிக்கின்ருனே அவன் மானுடருள் தலைசிறந்தவன் ஆகிருன். நீங்கள் உங்கள் வாழ்க்கையில் இதுநாள்வரை மானுடரில் உயர்ந்தோனுய் இருக்க முயற்சியே செய்ததில்லை. இப்போதாவது அந்த முயற்சியில் ஈடுபடுவீராக. உம் உற்ருர் உறவினர்களைப்பற்றி

எந்தக் கவலையும் படாது நீர் இப்பொழுது கடவுளையே கதி எனப் பற்றி அவரை நினைந்து வடக்கு நோக்கிப் புறப்படுவீராக. யாராலும் தடுத்து நிறுத்தமுடியாத எந்த ரூபத்தில் எந்த நேரத்தில் வரும் என்று நிர்ணயிக்க முடியாத மரணம் தங்களை வந்தடையும்போது உங்களை அறியாமல் உங்கள் உயிரைக் கொண்டுபோம் பொழுது பிருந்தாவனக் கூத்தன் அல்லால் உங்களுக்கு உற்ளுர் யாருளரோ? ஆகவே இப்பொழுது முதலே உங்கள் தலைவன் ஸ்ரீஹரியைத் தேடிக் கண்டுகொள்ளுங்கள். அவன் பாதங்களைப் பற்றிப் பிடியுங்கள்.''

இங்ஙனம் மஹாத்மாவாகிய விதுரரால் உபதேசிக்கப்பட்ட பிறவிக் குருடனுகிய திருதராஷ்டிரனுக்கு இப்பொழுது ஒரு விழிப்பு வந்தது. மின்னல் போன்று அவன் உள்ளத்தில் சிறிது ஞானேதயம் உண்டாயிற்று. அவன் மனதைப் பிடித்திருந்த பந்தபாசங்கள் எல்லாம் உதறி எறியப்பட்டன. அவன் சிறிதும் காலதாமதமின்றித் தன் அரண்மனையை விட்டு வெளியே புறப்பட்டான். அவனிடம் மிகவும் பக்திகொண்ட காந்தாரியும் அவனைப் பின் தொடர்ந்தாள். அவர்கள் வடக்கே இமயமலையை நோக்கிப் புறப்பட்டார்கள். ஆ! அது எவ்வளவு தெய்விகமான, புனிதமான மலை! நம் மக்களால் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகப் பக்தியுடன் கடவுளுக்கு நிகராகப் பாவிக்கப்பட்ட மிக உன்னதமான மலை அது. எவ்வளவு துறவிகள், ரிஷிகள், மஹாத்மாக்கள் அதைத் தங்கள் இருப்பிடமாகக்கொண்டு பெருநிலை அடைந்துள்ளார்கள். யுதிஷ்டிரன் தினந்தோறும் அவர்களைச் சந்தித்து க்ஷேமம் விசாரித்து, வணங்கி, பணிவிடை செய்து, அவர்களுக்கு மிகுந்த ஆறுதலும் சாந்தியும் அளித்துவிட்டுப் போவது வழக்கம். அன்றைய தினம் தன் வழக்கமான வழிபாடுகள் ஆத்ம சாதனங்கள் ஆகியவற்றை முடித்துக்கொண்டு திருதராஷ்டிரனையும், காந்தாரியையும் வழிபட வந்தான். ஆனுல் அவர்களைக் காணேம். அங்குச் சஞ்சயன் மட்டும் மிகுந்த வருத்தத்துடன் உட்கார்ந்திருந்தார். மிகவும் கவலையுடன் தர்மபுத்திரன் சஞ்சயரை விசாரித்தான்: ''என்னுடைய வயதான பெரியப்பாவும் பெரியம்மாவும் எங்கே போனுர்கள்? தங்கள் மக்களின் இழப்பைக் குறித்த வியாகுலம் அவர்களுக்கு இன்னும் தீரவில்லை. மஹாத்மாவாகிய விதுரரையும் கூடக் காணவில்லையே. ஐயோ, நான் எத்தகைய கெட்ட இயல்பு படைத்தவன். அவர்களின் புதல்வர்கள் அனைவரையும் கொன்றுவிட்டேனுதலால் என்னைக் குறித்து அவர்களுக்குப் பயம் வந்துவிட்டதோ? என்னுல் தங்களுக்குப் பிராண ஆபத்து வரக்கூடுமென எதிர்பார்த்துக் கங்கையில் குதித்துவிட்டார்களோ? எங்கள் தந்தையார் காலமான பிறகு அவர்கள் இருவரும் எங்களை எவ்வளவு அன்புடன் பராமரித்தார்கள். அவர்கள் எங்கே போய்விட்டார்கள்?''

சூதர் சொன்னுர்: சஞ்சயன் திருதராஷ்டிரனிடத்தில் தேவதா விஸ்வாசம் வைத்திருந்தார். ஆகையால் அவர்களின் இழப்புச் சஞ்சயனுக்கு மிக ஆழ்ந்த துயரத்தை உண்டாக்கியது. அவருடைய கண்களில் கண்ணீர் மல்கியது. அவருடைய தொண்டையைத் துக்கம் அடைத்தது. அதனுல் யுதிஷ்டிரனுக்கு அவர் உடனடியாகப் பதில்சொல்ல முடியவில்லை. ஆயினும் அவர் தெளிந்த மனமுடையவர்; ஞானி. தம் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு திருதராஷ்டிரனையே எண்ணிக்கொண்டிருந்த அவர் இங்ஙனம் பதில் சொன்னுர். "யுதிஷ்டிரனே, சிரேஷ்டமான குருவம்சத்தின் உத்தமமான அரசனே, உன்னுடைய பெரியப்பாவும், பெரியம்மாவும் எங்கே போனுர்கள் என்பதை நானும் அறியேன். பெருமனம் படைத்த அவர்கள் இருவரும் என்னை ஏமாற்றி விட்டுப் போய்விட்டார்களே." இங்ஙனம் அவ்விருவரும் மிகுந்த துயரத்துடன் சம்பாஷித்துக் கொண்டிருந்தபோது அங்குத் தேவரிஷியாகிய நாரதர் கையில் வீணையைத் தாங்கினவராக வந்து சேர்ந்தார். அவரை மிகுந்த பக்தியுடன் தர்மராஜன் வரவேற்று வழிபட்டான். பிறகு நாரதரிடம் இங்ஙனம் வினவினுன்: "தேவே, புத்திர சோகத்தில் மிகவும் துயருற்றுக்கிடந்த எங்கள் பெரியப்பாவும், பெரியம்மாவும் மஹாத்மா விதுரரும், எங்கே போனுர்கள் என்று தெரியவில்லை. அவர்களைப் பற்றிய விபரம் தெரியாது நான் மிகவும் கவலைப்படுகிறேன். தேவரீர் முக்காலமும் உணர்ந்த பிரபு, எங்களை இக்கவலையினின்றும் விடுவிக்கப் பிரார்த்திக்கிறேன்."

நாரதர் இங்ஙனம் ஆறுதல் கூறினர்: "அரசே, மிகவும் துயரத்துக்கு ஆளாகாதீர். இப்பிரபஞ்சம் முழுவதும் பகவானல் பரிபாலிக்கப்படுகிறது. தேவராஜன் இந்திரனும் திக்பாலர்களும் ஆண்டவனின் கருவிகளாக இருந்து ஈஸ்வர கிருத்தியத்தையே செய்கின்றனர். பகவான் யாரையும் சார்ந்திருக்கவில்லை. அனைத்தும் பகவானைச் சார்ந்திருக்கின்றன. நாடகத்தில் கதாபாத்திரங்களைச் சூத்திரதாரி இயக்குவது போன்று அரங்கநாதன் இவ்வுலகில் ஜீவர்களை ஒன்று சேர்க்கிறுன், பிறகு பிரிக்கிறுன். அவன் அலகிலா விளையாட்டுடையான். அவன் பித்தன், பேயன், பாலன், ஆனந்தக் கூத்தன். இந்த ஆத்மா அழிவற்றது. சாஸ்வதப் பொருள். அது அணிந்திருக்கும் இச்சரீரமோ அழியக்கூடியது. ஒருநாளைக்கு இதைக் கழற்றி எறிந்து விட்டு ஆத்மா தன் யதார்த்த நிலையில் நிலைபெற்றிருக்கும் என்கிற ஆத்ம தத்துவங்களை எல்லாம் உணர்ந்தவனுகிய நீ அறியாமையினுலும் பந்த பாசத்தினுலும் துயருற்றுக்கிடப்பவன் போன்று துயரப்படலாகாது. அது உனக்குப் பொருந்தாது. எல்லாத் துயரத்துக்கும் காரணம் உலகப்பற்றுதல்தான். உன் பெரியப்பாவும் பெரியம்மாவும் உன் பராமரிப்பு இன்றி எவ்விதம் வாழ்வார்களோ, எப்படியெல்லாம் துன்பப்படுவார்களோ என்கிற உன் கவலை எல்லாம் வீணனது, அர்த்தமற்றது. மிக நல்ல மனம் படைத்தவனுகிய உனக்கு இத்தகைய துயரம் பொருந்தாது. ஆகவே தாற்காலிகமான உன் மன பலஹீனத்தில் எழுந்த இந்த அர்த்தமற்ற துயரத்தைத் துடைத்துத் தள்ளிவிட்டு நீ சாந்தமாக இருப்பாயாக.

இந்தப் பூத சரீரம் பஞ்சபூதங்களால் ஆனது. கால, தேச வர்த்தமானத்தால் அது பாதிக்கப்படக் கூடியது. மாற்றம் அடையக்கூடியது. ஆகவே காலாந்தரத்தில் பஞ்சபூதங்கள் பழையபடி பிரிந்துபோய் சரீரம் என்று ஒன்று இல்லாது போய் விடுகிறது. இப்படி அழிந்து போகக்கூடிய இந்தச் சரீரத்தை யாரால் அதன் அழிவைத் தடுத்து நிறுத்த முடியும்? பெரிய மலைப்பாம்பினுல் விழுங்கப்பட்ட ஒருவன் மற்ளெருவனை எங்ஙனம் பாதுகாக்கமுடியும்? நாம் அனைவரும் காலத்தில் கட்டுப்பட்டவர்களாக இருக்கிறேம். மற்றெருரு ஜீவனை நம்மால் காக்க முடியாது. ஒவ்வொரு ஜீவனுக்கும் அதனதன் சம்ரக்ஷணை தெய்வ நீதியால் நிர்ணயிக்கப்படுகிறது. மனிதன் ஸ்தாவரம், விலங்கு இவைகளினுல் ஜீவிக்கிறுன். விலங்கு ஸ்தாவரம், சகவிலங்குகள் இவைகளினுல் உயிர் வாழ்கிறது. சுருங்கச் சொன்னுல் வாழ்வில் வலு உடையது வலுவற்றதின் பேரில் ஜீவிதம் நடத்துகிறது. ஓர் உயிர் மற்றோர் உயிரை உண்டு வாழ்கிறது. மரணம் என்னும் அஸ்திவாரத்தின் பேரில் வாழ்வு என்னும் மாளிகை கட்டப்பட்டுள்ளது. உன் பெரியப்பாவும் பெரியம்மாவும் க்ஷேமமாய் வாழவேண்டுமே என்கிற கவலையினுல் என்ன பிரயோஜனம்? ஸ்தாவரம், விலங்கு, பறவை, அனைத்தும், மானுடர் அனைவரும் கடவுளே ஆவார்கள். ஒவ்வொன்றும் ஒருதனி வியக்தி அன்று. தனித்தனி இருப்பு இல்லை. ஆகவே இவ்வுலகில் உள்ளதெல்லாம் ஒன்றே ஒன்றுதான். அவரே கடவுள். உண்ணுகிறவனும் அவனே. உண்ணப்படுகிற பொருள்களும் அவனே; அனுபவிப்பவன் அவனே; அனுபவிக்கப்படுகிற பொருள்களும் அவனே. நமக்குப் பிரத்யக்ஷமாகத் தெரிகிற பேதங்கள் அனைத்தும் அறியாமையினுல் தோன்றுகின்றன. அவைகள் வெறும் தோற்ற மாத்திரம். ஒரே பொருள் பலவாகப் பார்க்கப்படுகிறது. இது ஆண்டவனின் கூத்து, மாயை. அன்புடைய அரசனே, பரம்பொருள் இப்போது சம்ஹார மூர்த்தியாக வடிவெடுத்துத் துவாரகையில் வசித்து வருகிறுர். அசுர சம்ஹாரம் (கெட்டவர்களை அழித்தல்) அவருடைய அவதார நோக்கமாகும். நடந்த மஹாபாரத யுத்தத்தில் இந்தத் தேவகாரியம் ஓரளவு நிறைவேறியிருக்கிறது. இன்னும் எஞ்சியிருக்கிற யதுகுலத்தின் சர்வ நாசத்திற்காக அவர் காத்திருக்கிறுர். வந்த காரியம் முழுவதும் நிறைவேறியதும் அவர் தம் யதா ஸ்தானத்துக்குப் போய்விடுவார். அப்பிரபு இவ்வுலகில் தங்கியிருக்கும் பரியந்தம் நீங்கள் எல்லாரும் இங்கு வாழ்ந்திருங்கள்."

24—1—84 செவ்வாய் அன்று சுவாமி விவேகானந்தர் ஜன்ம தினமாகும்.

கர்மத்தின் மூலம் கடவுள் வழிபாடு

(சகோதரி நிவேதிதை)

[சேலம் சகோதரி தங்கம் தமிழில் மொழி பெயர்த்தது]

கர்மத்தில் ஈடுபடாமல் உயர்ந்த கருத்துக்களைப் பற்றிப் பேசிக்கொண்டு மட்டும் இருப்பது கேடாய் முடியும். கர்மத்தோடு சம்பந்தப்படாத வாய் வேதாந்தம் மனதைப் பாழ்படுத்தும் என்ற இந்த உண்மையை உலக வரலாற்றில் நிகழ்ச்சிகள் பல காட்டுகின்றன. ஆன்மீக முன்னேற்றம் அடைவதற்கு ஸ்தூல உலகில் தம்மைச் சுற்றியுள்ள எதிர்மறைச் சூழல்களுடனும், சூக்ஷ்மமாக மனதில் மறைந்துள்ள எதிர்மறை வாசனைகளுடனும் நாம் கடுமையாகப் போராட வேண்டியது அவசியமாகிறது. இப்படித் தொடர்ந்து போராடுவதால் நம்முடைய பழவினைகள்—சித்த மலம்—முழுதும் அறுபட்ட பின்னர் உண்மையை உணரும் ஞானக்கண் உண்டாகிறது. ஞானக்கண்ணுகிய மனத்தெளிவு முற்றிலும் ஏற்பட்ட பின்னரே கர்மம் புரிந்து பழவினையைத் தேய்க்கவேண்டும் என்ற தேவையும் நீங்குகிறது. அந்த நிலையை அடையும்வரையில் நாம் கர்மம் புரிந்தே ஆகவேண்டும். அந்தக் கர்மமும் நம் முழு ஆற்றலையும் ஈடுபடுத்தி ஒருமுகப்பட்ட மனதைக் கொண்டு செய்யப்பட்டதாய் இருக்கவேண்டும். இவ்வாறு கர்மம் புரிந்து அக, புறப்பகைகளை முற்றிலும் வெல்வதற்கு முன்னர் கர்மத்தை விட்டுவிடும் எண்ணம் கூட நம் மனத்தில் எழக்கூடாது. ஆனல் இவ்வுலகை ஆராய்ந்து பார்த்தால், எந்த ஒரு குறிப்பிட்ட காலத்திலும், கர்மம் புரியத் தேவையில்லாத, அகர்மத்தில் நிலை பெற்றிருக்கக்கூடிய ஞானிகள் மிகச் சிலரே இருப்பார்கள் என்பது விளங்கும். எனவே பெரும்பாலானேர்க்குக் கர்மம் புரிதல் இன்றியமையாததாகிறது. முறையாகக் கர்மம் புரிவதால்தான் உண்மையைப் புரிந்துகொள்ளும் ஞானமும் அதில் முதிர்ச்சியும் வாய்க்கும்.

ஆத்மசாதகனின் வாழ்வில் குரு ஒருவர் எவ்வளவு அவசியமோ, வேதாந்தம் புகட்டும் உண்மைகளை அறிந்துகொள்வது எவ்வளவு அவசியமோ, அவ்வளவு அவசியம் கர்மம் புரிதலும் ஆகும். ஒருவிதத்தில், சாஸ்திரத்தையும் குருவையும்விடக் கர்மம் அதிகம் தேவைப்படுகிறது என்று கூடச் சொல்லலாம். ஏனென்ருல் முறையாகக் கர்மம் புரிந்து பக்குவமடைந்த ஆத்மாவைத் தேடி குரு தாமாகவே வருகிருர்; அப்படிப்பட்ட பக்குவிக்கு உண்மைகள் எளிதில் விளங்குகின்றன என்று பெரியோர் சொல்லியிருக்கின்றனர். ஆன்மீக வாழ்வில் நம்மை வழி நடத்திச் செல்லும் குரு அமைவது நம் கையில் இல்லை. ஆனல் நல்ல ஒரு குரு அமையும் வரையிலும், அமைந்த பின்பும், இவ்வாறு எல்லாக் காலங்களிலும் கர்மம் புரிந்துகொண்டிருப்பது நமக்குச் சாத்தியம். அதுவே நம்மைப் பண்படுத்தும். பக்தன் தன்னுடைய இஷ்ட தெய்வத்தை விதிவகையாகப் பூஜை செய்து வழிபடுகிருன். கர்மயோகியோ தான் ஆற்றும் வினையையே பூஜை ஆக்குகின்ருன். கர்மயோகியின் கர்மமே, இயற்கைத் தாயாகத் தன்னை விளக்கிக்கொண்டிருக்கும் ஆதிசக்திக்கு, மஹாசக்திக்கு அவன் அளிக்கும் நிவேதனம் ஆகிறது.

உயர்ந்த கோட்பாடுகள் வாழ்வில் அனுஷ்டானத்திற்கு உரியவை என்பதை நாம் மறந்துவிட்டால் வெறும் மேற்பூச்சான சொல்லழகில், வெறும் பாண்டித்தியத்தில் மயங்கிவிடுவோம். பின்னர் அதிலிருந்து மீண்டு உண்மையை உணர்வது கடினம். புத்தி சாதுர்யத்தைப் பயன்படுத்திக் கருத்துக்களிடையே மிக நுண்ணிய வேறுபாட்டைக் கற்பித்து வாதம் புரிவது, மிகப் பெரிய கேடு ஆகும். ஒருவருடைய வாதத் திறமை, அவர் மனம் எந்தப் போக்கில் வளர்ச்சி அடையலாம் என்பதைச் சுட்டிக் காட்டுமே ஒழிய, உண்மையான மனேசக்தி எதுவும் அதன் மூலம் வந்துவிடாது. இந்த வாதத்திறமையை அதன் போக்கில் விட்டுவிட்டால் தர்ம அனுஷ்டானத்திலிருந்து படிப்படியாக அது நம்மைக் கீழே இழுத்துவிடும். எனவே, ஆத்மசாதகன், தான் அறியவரும் நல்ல கருத்துக்களையும், கோட்பாடுகளையும் வாழ்வில் நடைமுறைக்குக் கொண்டுவர முயலவேண்டும். சொல்லழகில் ஈடுபடுவதைத்

தவிர்த்து மனதைக் கொஞ்சங் கொஞ்சமாகத் திருத்தி, இலட்சியத்தை அடைய இந்த முயற்சி தேவைஎன்று உணர்ந்து நற்கருமத்தில் ஈடுபடவேண்டும்.

தனி மனித வாழ்வில் போலவே, ஒரு நாட்டின் வரலாற்றிலும் கர்மம் புரிதலின் அவசியத்தைக் காணலாம். மக்களுக்கு உண்மையான பக்தியும் நம்பிக்கையும் எப்பொழுதெல்லாம் ஏற்பட்டிருக்கிறதோ, அப்பொழுதெல்லாம் அவர்கள் பெருஞ் செயலில் ஊக்கத்துடன் ஈடுபட்டிருக்கிறர்கள் என்று வரலாற்றில் அறிய வருகிறோம். உதாரணமாக ஐரோப்பாவின் வரலாற்றை எடுத்துக்கொள்வோம். இடைக்காலத்தில் மதக்கொள்கைகள் பெரிதும் பரவிய போது அக்கொள்கைகளைக் குறித்த வாதப்பிரதி வாதங்கள் மட்டும் பரவவில்லை. கொள்கைகள் ஏற்கப்பட்டதன் அடையாளமாக அவை செயலில் வெளிப்பட்டன. இன்றைக்கு ஐரோப்பாவில் உள்ள சிறப்பு வாய்ந்த தேவாலயங்களில் பெரும்பாலானவை பதின் மூன்றும் நூற்றுண்டில் கட்டப்பட்டனவையே. அவ்வாறே இந்திய வரலாற்றிலும் பெரும் போர்கள் நிகழ்வதும், அரசபரம்பரைகள் வீழ்வதும் நிறைந்த காலங்கள்தாம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை என்று நினைத்து விடக்கூடாது. மக்களிடம் நம்பிக்கை மிகுந்து, ஆக்கபூர்வமான செயல்கள் நிகழும் காலங்கள்தாம் சிறந்தவை ஆகும். அத்தகைய காலங்களில் கலைகளிலும் தொழில்களிலும் வளர்ச்சி ஏற்பட்டிருக்கின்றன; கல்வி எல்லாருக்கும் கிடைக்கும் வண்ணம் பரவியிருக்கின்றது; கைத்தொழில்கள் வளர்ந்திருக்கின்றன. இவ்விதம் பெருமுயற்சியும், பெருநம்பிக்கையும் சேரும்போதுதான் பெரிய சாதனைகள் நிகழும்.

அப்படிச் சாதனைகள் பல நிகழ்த்தப்படும் பெரிய சகாப்தத்தின் அறைகூவல் நமக்கு இப்போது விடுக்கப்பட்டிருக்கின்றது. நம்மிடம் இருக்கும் மிகப் பெருஞ் செல்வம் நம்முடைய அருட்செல்வமே. எதையும் எளிதில் நம்பி விடாத நவீன மனிதனும் கூட ஏற்றுக்கொள்ளும்படி வேதாந்த தத்துவங்கள் இன்று விளக்கப்பட்டிருக்கின்றன. அதுமட்டுமன்று. நம்மிடத்துள்ள அருட் பொக்கிஷத்தை வழங்கும் நூல்களைப் பிற நாட்டவரும் படிக்கத் தூண்டும் வகையிலும் இந்த வேதாந்தத் தத்துவங்களைச் சுவாமி விவேகானந்தர்விளக்கியுள்ளார். நிகழும் நூற்றுண்டுகளின் மிகப்பெரிய செயலாக இருக்கப்போவது என்னவென்றால், இந்தியாவின் ஞான வெள்ளம் உலகம் முழுதும் பாய்ந்து பரவி நவீன மனிதனைச் சிந்திக்கச் செய்வதேயாம். மற்றெல்லாத் துறைகளின் வளர்ச்சிக்கும் இது முன்னோடியாக அமையும்.

இதற்கிடையில், நாம் எப்படி இருக்கப் போகிறோம்? நம் முன்னோர்கள் தேடிவைத்த புனிதமான ஞானச் செல்வத்தை வழங்கி உலகை வளமுறச் செய்துவிட்டு, நாம் வெறுங் கையராய் நிற்கப் போகிறோமா? இல்லையென்றால் அப்படியொரு நிலையை எப்படித் தவிர்க்கலாம்? எந்த வழியை மேற்கொண்டு நம் வறுமையை நீக்கலாம்? கர்மத்தையே கடவுள் வழிபாடாகச் செய்வதன் மூலமாகத்தான் அதைச் செய்ய முடியும். நம்முடைய தத்துவ சமயக் கருத்துக்களோடு போட்டி போடும் வகையில் நவீன விஞ்ஞானம் அதிவேகமாய் வளர்ந்து வருகிறது. இந்த விஞ்ஞான முன்னேற்றம்தான் தற்காலத்தின் இயல்பான செயல் துடிப்பாக (Time-spirit) இருக்கிறது. எல்லா நாடுகளும் முன்னேறிவரும் இவ்விஞ்ஞானத்துறையில் இந்தியர்கள் பின்தங்கி விடாமல், தமக்கும் அத்துறையில் வல்லமையும் திறமையும் உண்டு என்பதை நிரூபிக்க வேண்டும். அப்போதுதான் நம் முன்னோர்கள் பெற்றிருந்த ஞானம் உண்மையானது, மாண்பு மிக்கது என்று நிரூபிக்கமுடியும். இதுவே இன்றைய உலகில் நம் கடமை ஆகிறது.

உலகில் மற்ற நாடுகளுக்குப் பயன்படும் வகையில் நாம் ஆற்றவேண்டிய கடமை இது என்றால், நமக்கு நாமே செய்து கொள்ள வேண்டிய கடினமான கடமையும் ஒன்றுண்டு. நாம் பெறுகின்ற ஞானத்தைக் கரவாது பிறர்க்கும் எடுத்து வழங்க வேண்டும். அப்போதுதான் சாஸ்திர ஞானம் உண்மையான அனுபவ ஞானம் ஆகும். இதுவே ஆன்மீகத் துறையில் நமக்கு உறுதியும் வலிமையும் அளிக்கும். சிறந்த வழியும் இதுவேயாம். மனது ஒருமுகப்பட்டு, வேறு எதிலும் கருத்துச் செலுத்தாது செய்யும் இந்த முயற்சியே நம்மை உய்விக்கும்.

"முத்தமிழில் இறையுணர்வு"

(C. R. சகுந்தலா—முதல்வர், சாரதா மகளிர் கல்லூரி, சேலம்)

தமிழ்மொழியில் இயல், இசை, கூத்து என்ற மூன்று பிரிவுகள் இடம் பெற்றிருப்பதால், அது முத்தமிழ் என வழங்கப்படுகிறது. இயற்றமிழில் வல்லவர் 'புலவர்' என்றும், இசைத்தமிழில் வல்லவர் 'பாணர்' என்றும் நாடகத் தமிழில் வல்லவர் 'கூத்தர்' என்றும் கூறப்பெற்றனர். இயற்றமிழ் என்பது தொகை நூல்களையும், காவியங்களையும், இலக்கண நூல்களையும், உரைநடை நூல்களையும் குறிப்பதாகும். பொருள் பொதிந்த சொற்களாலாகிய காவியங்கள், நீதி நூல்கள், பக்திப் பாடல்கள் இம்மை, மறுமைப்பயனை அளிப்பனவாகவுள்ளன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்ககால நூல்களில் காதலும், வீரமும் முதலிடம் பெற்று, சமுதாய நோக்கே சிறந்து விளங்கினும், இறையுணர்வை எடுத்துரைக்கும் பகுதிகளும் இடம்பெற்றிருக்கின்றன என்பது குறிப்பிடத் தக்கது.

மிகத் தொன்மை வாய்ந்த இலக்கண நூலாகிய தொல்காப்பியம், ஒவ்வொரு நிலப்பிரிவுக்குமுரிய கடவுளைப் பற்றிப் பகர்கின்றது.

"மாயோன் மேய காடுறை யுலகமும்
சேயோன் மேய மைவரை யுலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்"

என வரும் பகுதிகளிலிருந்து, திருமால் முல்லை நிலத்திற்குரிய கடவுளென்றும், முருகன் குறிஞ்சி நிலக்கடவுள் என்றும்; இந்திரன் மருத நிலத்திற்குரியவனென்றும் வருணன் நெய்தல் நிலத்திற்குரியவனென்றும் கூறப்பட்டுள்ளது. இறைவழிபாட்டு நெறிமுறைகள் இலக்கண நூலுள் இடம் பெறுமளவு சிறப்புற்றிருந்ததைக் காண்கின்றோம்.

தமிழில் உள்ள பக்திப் பாடல்களில் மிகப் பழமையானவை, திருமுருகாற்றுப் படையும், செவ்வேள் பற்றியும், திருமால் பற்றியும் எழுந்த பாடல்களைக் கொண்ட பரிபாடலென்ற நூலுமாகும். இறைவனிடம் மக்கள் வேண்டுபவை யாவை என்பதனைப் பரிபாடலில் ஒரு பாடல் மிகச் சிறந்த முறையில் அறிவிக்கின்றது.

"..... ....யாம் இரப்பவை
பொருளும் பொன்னும் போகமும் அல்ல [நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்"

என வரும் அடிகள் பயன்கருதி இறைவனை வழிபடும் காமிய வழிபாட்டை மறுத்துப் பயன் கருதாத வழிபாட்டை உணர்த்துகின்றன. அன்பும், அறனும், அருளும் வேண்டுமென்ற கூற்றில் சிறந்த சமயக் கோட்பாட்டைக் காண்கின்றோம். பொன்னும் பொருளும் கொண்டு உலகியல் இன்பங்களைப் பெறலாம். அத்தகைய இன்பங்கள் அழியக் கூடியவை. துன்பம் கலவாத இன்பத்தை இவ்வுலகில் பெறுவதரிதாகின்றது. எனவேதான் துன்பமே எந்நாளுமில்லாத பேரின்பத்தைப் பெறுவதற்குரிய வழிமுறைகள் வேண்டப்படுகின்றன.

இலக்கியங்கள் ஈடு இணையற்ற கருத்துக் கருவூலங்களாகத் திகழ்கின்றன. பொதுவாக இயற்றமிழை நோக்குமிடத்து, சங்ககாலத் தொகை நூல்களும், திருக்குறளும், சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, பெரியபுராணம், கம்பராமாயணம் போன்ற காவியங்களும், சைவத் திருமுறைகள், நாலாயிரத் திவ்யப் பிரபந்தங்கள், திருப்புகழ், தாயுமானவர் பாடல்கள், அருட்பா போன்ற பக்திச் சுவை நிரம்பிய பாடல்களைக் கொண்ட நூல்களும் சிறப்பிடம் பெறுகின்றன. அழகிய இனிய தோத்திர நூல்களையும், அரிய பெரிய சாத்திர நூல்களையும் நாம் ஏராளமாகப் பெற்றிருப்பது நம் நாட்டின் தனிச் சிறப்பாகும். அருளாளர்களால் இயற்றப்பட்ட பக்திச் சுவை நிரம்பிய பாடல்கள், இறையுணர்வைத் தட்டி எழுப்பி இறையனுபவத்தைப் பெறவைக்கும் கருவிகளாக அமைந்துள்ளன.

முத்தமிழில் இயலுக்கும் நாடகத்திற்கும் இடையில் நின்று இரண்டோடும் இணைந்து இயங்குவது இசை. நம் நாட்டில் மிகப் பழங்காலத்திலேயே பல்வேறு இசைக் கருவிகள் வழங்கி வந்தமை சங்க நூல்களாலும், சிலப்பதிகாரம் தேவாரம் முதலியவற்றில்

உள்ள அகச் சான்றுகளாலும் அறியலாகின்றது. இசைக் கருவிகள் தோற்கருவி (மத்தளம்), துளைக் கருவி (குழல்), நரம்புக் கருவி (யாழ்), கஞ்சக் கருவி (ஜால்ரா) என்ற நான்கு பிரிவுகளில் அடங்கும்.

குறிஞ்சி நிலத்துக்குக் குறிஞ்சிப் பண், முல்லை நிலத்துக்கு முல்லைப் பண் என்று ஒவ்வொரு நிலத்திற்குரிய பண் வகைகள் இடம் பெற்றிருந்தன. மேலும் காலையில் மருதப்பண்ணும், மாலையில் செவ்வழிப் பண்ணும் இசைத்தற்குரிய அமைப்புக் குறிப்பிடத் தக்கது. ஒரு சமயம் பாணர்கள் இசை மரபை மறந்து பாடியதைக் கண்ட வன்பரணர், கோப்பெருநற்கிள்ளி என்ற அரசன் பாணர்களுக்கு மிகுதியாகப் பொருள் கொடுத்திருந்த காரணத்தால், அவர்கள் தம் நிலை மறந்து பாடுகின்றனர்கள் என்று அரசனின் கொடையைப் புகழ்ந்து பாடுகின்றார்.

இசை என்பது ஒரு தெய்வீகக்கலை. உயர்ந்த இசை உடலின் சோர்வைப் போக்கி, உள்ளத்திற்கும் புத்துணர்ச்சி ஊட்டும். அருவுருவான இறைவன் இசைவடிவில் நம்மிடையே இலங்குவதாக நம் முன்னோர்கள் அறிந்திருந்தனர். குடியானவன் வயலை உழும்போதும், கிணற்றிலிருந்து நீர் இறைக்கும்போதும், பெருஞ் சுமைகளைச் சுமக்கும்போதும் பாடுகின்றான். அவன் செய்யும் தொழிலுக்கு இசை ஆக்கம் தருகின்றது. இசையின் ஊக்க சக்தியைப் போர்க்களங்களிலும் காண்கிறோம். இவ்வாறு ஊக்கமளிக்கும் இசை மற்றொரு நிலையில் நோயாளியையும், குழந்தையையும் தூங்கச் செய்கின்றது. உணர்வுகளைத் தட்டி எழுப்பும் இசையானது, உணர்வுகள் அடங்கி அமைதியைப் பெறவும் கருவியாகின்றது. விலங்கினத்தையும் தன் வயப்படுத்தும் ஆற்றலுடையது இசை. இசை இன்பத்தை அனுபவித்து ஆடும் இயல்பைப் பாம்பிடம் காண்கின்றோம். மதம் பிடித்த யானையும் யாழோசையின் வயப்பட்டு நிற்கும் நிலையை, சங்க காலப் பாடல்கள் எடுத்துரைக்கின்றன. வெம்மை நிறைந்த பாலை நிலத்து வாழ்ந்து அவ்வழி வருவோரைத் துன்புறுத்திய கொடிய ஆறலைக்கள்வர்களும் இசை இன்பத்தில் தம்மை மறந்த நிலையை அடைந்தனர் எனப் பொருநராற்றுப் படை கூறுகின்றது.

கண்ணன் தன் அழகிய தோற்றத்தாலேயே உலகை வசீகரிக்கும் ஆற்றல் படைத்திருப்பினும், யாவருடைய உள்ளத்தையும் உருக்கத் தன் புல்லாங்குழலைக் கையாண்டான். அக் குழலோசை மக்களை மட்டுமின்றி இயற்கை முழுவதையுமே தன்பால் ஈர்த்தது. மீராபாய் கண்ணபிரானிடத்துத் தான் கொண்ட அன்பினை இசை வாயிலாகவே வெளிப்படுத்தினாள். தியாகராஜருடைய உயர்ந்த பக்தி புலப்படுவதற்கும் இசையே கருவியாயிற்று. வீடு பேறு அடைய எளிய, மகிழ்ச்சியுள்ள, பயனுள்ள உயர்ந்த வழி இசையே என்று அவர் பாடுகின்றார். இசை வாயிலாகத் தெய்வீகக் கலை வளர்ந்துள்ள நிலைகளைக் காண்கின்றோம். உள்ளத்தில் உணரும் ஆழ்ந்த உணர்ச்சிகளைப் பரம்பொருளுக்கு அறிவிக்க இசை ஒரு கருவியாக அமைகின்றது.

தமிழ் நாட்டில் பௌத்தமும், சமணமும் பரவி வந்த காலத்தில் பண் சுமந்த பாடல்களால் சைவ, வைணவ சமயங்களைத் தழைத்தோங்கச் செய்தவர்கள் நாயன்மார்களும், ஆழ்வார்களுமாவர். இசையோடிணைந்த பாடல்கள் மக்களைக் கவர்ந்தன. நாளும் இன்னிசையால் நற்றமிழ் பரப்பி மகிழ்ந்தார் திருஞான சம்பந்தர். "சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்" என்று கூறிய திருநாவுக்கரசர் "தமிழோடிசை பாடல் மறந்தறியேன்" என்றும் பாடுகின்றார். நாள் வழிபாட்டில் தமிழிசை சிறப்பிடம் பெற்றிருந்தமை தெளிவாகின்றது. இறைவனை இசையுருவினனாய்க் காண்கின்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள். "ஏழிசையாய், இசைப்பயனாய், இன்னமுதாய்" எனப்போற்றுகின்றார். மொழிக்கு மொழி தித்திப்பான மூவர் சொலுந் தமிழ் கேட்கும் சிவபெருமானின் திருச்செவிக்குத் தாம் புலம்பும் சொற்கள் ஏற்புடையதாகுமா என முறையிடுகிறார் தாயுமானவர். மேலும், "மூவர் செய் பனுவலலது பகரவோ இசையுமில்லை" எனக் கூறுவதன் வாயிலாகப் பண் சுமந்த தேவாரப் பாடல்களின் அமைப்பையும், இசையின் பெருமையையும் குறிப்பிடுகின்றார். எனவே, இறைவனை அடைய இசை ஏற்றதொரு துணையாக அமைந்திருத்தல் கண்கூடு.

ஆடற் கலையைக் குறிக்கும் பழமையான சொல் 'கூத்து' என்பதாகும். அதில் தேர்ந்த விறலியர் கோயில் முன்றிலிலும், அரசர் திரு முன்பும் இறைவனின் அருட் செயல்களை ஆடிப்பாடிப் பரிசில் பெற்றனர். போர்க்களத் தில் மாவீரம் காட்டி, காலில் கழல் அணிந்து கூத்தாடுதலைக் 'கழல் நிலைக் கூத்து' என்று கூறுகின்றது தொல்காப்பியம். குண நூல், செயிற்றியம், மதிவாணர் நாடகத் தமிழ் முதலான கூத்து நூல்கள் இருந்தன என்று சிலப்பதிகாரம் அடியார்க்கு நல்லார் உரையால் அறிகின்றோம். குறிஞ்சி நிலத்தில் குறப்பெண் கள் தங்கள் நிலத்திற்குரிய முருகக் கடவுளை வழிபட்டு ஆடிய கூத்து குன்றக் குரவை எனப் பட்டது. முல்லை நிலத்து மகளிர் அந்நிலத் துக்குரிய மாயோனை நினைந்து ஆடிய கூத்து ஆய்ச்சியர் குரவை என்று பெயர் பெற்றது. குரவைக் கூத்து என்பது எழுவரேனும் எண்ம ரேனும் ஒன்பதின்மரேனும் கைகோத்து ஆடும் கூத்தாகும். இரண்டு கைகளையும் முழங்கை வரையிலும் முடக்கி விலாப்புறங்களில் ஒன்றி அடித்துக்கொண்டு அசைந்து ஆடும் கூத்து 'துணங்கை' எனப்பட்டது. நாகரிகம் மிக்கவர் கலைப்பணியில் உயர்ந்தவர் அனுபவிக்கின்ற கூத்து "வேற்றியல்" எனவும் சாதாரணப்பொது மக்கள் அனுபவிக்கின்ற கூத்து "பொதுவியல்" எனவும் வழங்கப்பட்டது. 'சாந்திக் கூத்து' என்பது சோழர்காலத்தில் கோவில்களில் நிகழ்த்தப்பட்டு வந்தது. கூத்து முடிந்து செல் லும்போது, மக்கள் மன அமைதியுடன் செல்லு மாறு அமைக்கப்பட்டிருந்த கூத்து 'சாந்திக் கூத்து' எனப்பட்டது. கூத்து இயலையும் இசையையும் இணைத்து வழங்குவதால் அது கண்ணுக்கும், செவிக்கும், மனதிற்கும், அறி வுக்கும் விருந்தாகி, கல்லார், கற்றவர் ஆகிய எல்லாருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது.

கதை தழுவி வரும் கூத்தே நாடகம் எனப் படுகிறது. ஓய்வு நேரங்களில் மக்கள் கூடுவதற் கேற்ற தெருக்களின் மையத்தில் கதை தழுவிய கூத்துக்கள் நடத்தப்பட்டு வந்தன. கேரள நாட்டில் நடத்தப்படும் கூத்துக்கள் 'கதகளி' என்றும் கர்நாடகத்தில் நடத்தப்படும் கூத்துக் கள் 'யட்சகானம்' என்றும் அழைக்கப்படுகின் றன. தமிழ்நாட்டில் கூத்துக்கள் "தெருக் கூத்து" என்றே வழங்கப்பட்டன. இவ்வகைக் கூத்துக்களில் இலக்கியச்சுவை, இசைச்சுவை, மெய்ப்பாட்டுச் சுவை ஆகிய மூன்றையும் ஒருங்கே காணலாம். உயர்ந்த கருத்துக்களையும் உணர்வுகளையும் யாவருக்கும் அறிவிக்க நாடகம் கருவியாக அமைதல்வேண்டும். கல்வியறிவில் லாத பாமர மக்கட்கும் எளியமுறையில் புகட்டு வதற்கேற்றநெறியாகநாடகம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. சிறந்த கோட்பாடுகளின் விளக்கங்களாக அமைதலே நாடகத்தின் குறிக்கோளாக இருக்க வேண்டும். வாழ்க் கைத் தத்துவங்களை எடுத்துரைக்கும் இதி காச புராணங்களின் காட்சிகள் நாடகமாக்கப் படின், அவை மக்களின் வாழ்வுக்கு வளம் சேர்ப்பனவாகும். இதிகாச காலங்களில் நடை பெற்ற நிகழ்ச்சிகளை இன்று நம்கண்முன் நடப் பனபோன்றுபார்த்து அநுபவிக்கும் வாய்ப்பை நாடகங்களின் வாயிலாகப் பெறுகின்றோம்.

இவ்விதம் இயல், இசை, கூத்து ஆகிய மூன்றும் இறையுணர்வை ஊட்டி அவ்வுணர் விலே இறையனுபவத்தைப் பெறவைக்கும் இயல்புடையனவாக நம் தெய்வத் தமிழ் நாட் டில் திகழ்ந்தன. சிவபெருமான், திருமால், துர்க்கை, முருகன் ஆகிய கடவுளர்களின் திருநடனங்கள் கூத்துக்கும் இறைமைக்கும் உள்ள தொடர்பைக் காட்டுகின்றன. பரம் பொருள் இவ்வுலகமாகக் காட்சி தந்து பார்க்கு மிடமெங்கும் நீக்கமற நிறைந்துள்ளது. அவ னன்றி ஓர் அணுவும் அசையாது. இறை வன் இயக்க உலகம் இயங்குகின்றது. உல கில் நடைபெறும் செயல்களுக்கெல்லாம் அவனே காரண கர்த்தா என்பதனையும், படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத் தொழில்களைச் செய்பவன் அவனே என்பதனை யும், சிவனாரின் ஆனந்தக் கூத்து விளக்கு கின்றது. இங்ஙனம் இறைவனையே கூத்தப் பிரானாக்கி வழிபடும் நிலையிலிருந்து கலை களுக்கும் கடவுளுக்குமுள்ள தொடர்பை அறி கின்றோம். ஒரு நாட்டின் பண்பாட்டை, கலா சாரத்தைக் கண்ணடியாகக் காட்டக் கூடியன அந்நாட்டின் கலைகளேயாகும். நம் நாட்டின் கலைகள் யாவும் தெய்வீக அடிப்படையில் அமைந்துள்ளமை நம் நாட்டுக் கலாசாரத்தின் தனிப்பட்ட மரபாகும்.

முக்குணமும் வருணபேதமும்

(ஸ்ரீமத் நித்தியானந்த சுவாமிகள் வனவாசி அந்தர்யோகத்தில் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்)

உலக மாந்தரை நான்கு வகையினராகப் பாகுபடுத்தலாம். யாண்டும் பெருநிலையில் லயித்திருக்கும் பிரமஞானிகள் தலைத்தரமான வர்கள். அவர்கள் புறத்தே செயல் ஒன்றும் நிகழ்த்துவதில்லை ஆயினும் அகத்தே ஜீவ கோடிகளின் ஆன்மநேயத்தையே கருதி மீளாத நிட்டையில் ஆழ்ந்திருப்பார்கள். அவர்கள் நித்திய சித்தர்கள். மற்று, ஜீவன் முக்தர்கள் எனப்படுபவர்கள் தங்களுடைய தெய்விகமான அருட்செயல்களாலும், வாக்கினாலும் மக்களை நன்னெறியில் செலுத்துபவர்கள். அவர்களும் பந்தபாசங்களிலிருந்து பூரணமாய் விடுபட்ட வர்களே. முமுட்சுக்கள் தீவிர அருள்தாகம் கொண்டு உலக பந்தங்களிலிருந்து விடுபட்டு ஆன்மீகத்தில் ஈடுபட முயற்சிப்பவர்கள். பந்தாத்மாக்களோ பந்தம், பாசம் ஆகிய வலை களில் சிக்குண்டு மீளத்தெரியாமல் துன்பத் தில் உழல்பவர்களாவார்கள்.

ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர் ஓர் எளிய உபமானத்தால் இந்நிலையை விளக்குகின்றார். மீனவர்கள் சேர்ந்து பெரிய வலையை நீர்ப் பரப்பில் வீசுகின்றனர். சில மீன்கள் அதில் சிக்காமல் அதனைக் கடந்து செல்கின்றன. சில மீன்கள் வலையில் விழுந்தாலும் அதிலி ருந்து துள்ளிப்பாய்ந்து வெளியேறுகின்றன. சில மீன்கள் தாம் வலையில் சிக்கிவிட்டதை உணர்ந்து அதினின்றும் மீளுவதற்குப் பெரி தும் முயல்கின்றன. பெரும்பாலான மீன் களோ வலைக்குள் விழுந்து கிடக்கின்றன. தப்பிச் செல்வதற்கான எண்ணமோ, முயற் சியோ அவற்றினிடம் இல்லை. இவ்விதம் மாயையாகிய திரை ஒன்று இறைவனிட மிருந்து நம்மைப்பிரித்து வைக்கிறது. அந்தத் திரையைக் கடந்துவிட்டால் இறைவனும், நாமும் ஒன்றாகிவிடுவோம். "மாயாஜாமில்லை யேல் மற்றெனக்கோர் பற்றும் இலை. நீயே நான் என்று வந்து நிற்பேன் பராபரமே" என் கிறார் தாயுமானார்.

இந்த மாயை அநிர்வசனீயமானது; சொல் லால் விளக்க இயலாதது; ஆனால் செயல்முறை யில் நாம் அதற்கு வசப்பட்டுள்ளோம். வயிற்று வலி என்பது வாயால் விளக்க முடி யாதது. ஆனால் அதை அனுபவிப்பவனின் துன்பத்தை நம்மால் காண இயலும். இந்த மாயையினின்று நம்மால் எளிதில் விடுபட இயலுவதில்லை. "சிவராத்திரிப்போது துயி லோம் என்ற விரதியரும் அறிதுயிற்போலே இருந்து துயில்வார்" என்று மாயையின் ஆட்சித்திறத்தினை எடுத்துக் காட்டுகின்றார் தாயுமானார். இந்த மாயைக்கு உட்பட்டவர் கள் தமோகுணம் நிரம்பப் பெற்றிருப்பார்கள். அதனை வெல்லுகின்ற அளவு, மனோ சக்தியும் அதிகரிக்கும். பின்பு, ரஜோகுணம் என்பதோ ஆசையோடு கூடிய செயல்கள் ஆகும். இறுதி யில் சத்துவம் என்பது ஒப்பற்ற அதிசூட்சும மான தியான நிலையாகும். 'சும்மா இருப்ப துவே சுட்டற்ற பூரணம்' என்று தாயுமானர் வருணித்த நிலை இதுதான். இந்த மூன்று நிலை களையும் 'எழுமின், விழிமின், ஆயராது உழை மின்' என்ற தம் வாக்கினால் விளக்குகின்றார் விவேகானந்தர். முதலில் தமோகுணத்திலி ருந்து விடுதலை பெறவேண்டும்; அதாவது தூக்கத்திலிருந்து விழிக்கவேண்டும். பிறகு எழுச்சி பெறவேண்டும்; அதாவது உள்ளத்தி லும், உடலிலும் புதிய உரமும், உணர்வும் ஊற்றெடுக்கவேண்டும். இறுதியில் உன்னத லட்சியத்தை அடைய வேண்டும்; அதாவது பரம்பொருளை அறிந்துகொள்ளவேண்டும்.

இன்றைக்குச் சமூகம் தமோகுணத்திலி ருந்து விழித்தெழுந்து விட்டது. சுயநலத் தோடு கூடிய உற்சாகத்தை எங்கும் காண் கிறோம். மற்றவருக்குச் செய்வது என்றால் சலிப்படைந்து விடுகிறோம். நமக்கு லாபம் என்று தெரிந்தால் கடுமையாக உழைக்கி றோம். இதுவே ரஜோகுணநிலை. இனி எதிர் காலத்தில் சத்துவமும் வந்து அமையும். கடும் புயலில் சிக்குண்டவர்கள் தாம் பட்ட பாட்டை எண்ணி, அடுத்த முறை முன்னெச்சரிக்கைகள் மேற்கொள்வதுபோல, சுயநலத்தின் கொடு மைகளை அனுபவித்த பிறகு சமூகம் திருந்தி விடும். சுயநலமே உருவானவன் துரியோதன மன்னன். தனக்கு ஒரு கண் போனாலும் பாதக

மில்லை; தன் எதிரிக்குஇரண்டு கண்களும் போக வேண்டும் என்று ஆத்திரப்பட்டான் ஒருவன். துரியோதனன் அம்மனிதனுக்கு ஒப்பானவன். ஒருமுறை துருவாச முனிவரைத் தன் அரண்மனைக்கு வருவித்து நன்கு உபசரித்தபின், வனத்தில் உறையும் தன் அண்ணன் தருமனுடைய குடிலுக்கும் அவர் செல்லவேண்டும் என்பதை அவரிடம் வரமாகக் கேட்டான். அவரும் இசைந்து அங்குச் சென்ருர். குறையாது வழங்கும் அட்சய பாத்திரத்தைக் கழுவித் துடைத்து வைத்திருந்தாள் திரௌபதி. 'இனி என் செய்வது?' என்று பாண்டவர்கள் கலங்கிய பொழுது கண்ணபெருமான் அங்கு வந்தார். பாத்திரத்தின் ஓரத்தில் ஒட்டியிருந்த ஒரு பருக்கையை எடுத்து உண்டார். 'சகல உயிர்களின் பசியையும் இது தீர்ப்பதாகுக' என்ற பகவத் சங்கல்பம் உடனே நிறைவேறியது.

ஆக, எல்லாரும் இன்புற்றிருக்க வேண்டும் என்று நினைக்கின்ற உத்தமர்களுக்கு இறைவனே வியாபக மூர்த்தியாய்த் தோன்றி பிரமானந்தத்தை அருள்கின்ருர். பிறருக்கு நலன் தேடுவதன் மூலம் சுயநலத் தியாகம் பண்ணிக்கொள்பவர்களையும் சிவத்தொண்டில் ஈடுபட்டு சுயநலத்தை விட்டவர்களையும் இறைவன் ஆட்கொள்கின்ருர். தியாகமே வடிவெடுத்த கர்ணன் தான் குந்தியின் மைந்தன் என்ற உண்மையை வெளியிட மறுத்தான். அவன் இதனை வெளியிட்டிருந்தால், தருமனும், துரியோதனனும் சேர்ந்தே அவனுக்கு முடி சூட்டியிருப்பார்கள். இரு கூட்டத்தார்க்கும் நல்லவனுக அவன் இருந்திருக்க முடியும். ஆனல் போரை மூட்டிப் பூபாரம் தீர்க்க வந்த மாயவனின் திட்டம் வேறுவிதமாக இருந்தது. பாரதப்போரில் கர்ணனை அவன் செய்த தருமமே துணை நின்று தலைகாத்தது. எல்லாம் வல்ல இறைவன் அவனிடம் யாசகனுக வரநேரிட்டது.

கர்ணனுடைய தம்பி தருமனும் கடைசிவரையில் தருமநெறியில் உறுதியாக நின்ருன். ஒரு சமயம் தன் அருமைத் தம்பியர் நால்வரும் வீழ்ந்துகிடக்கப் பதட்டப்படாமல் யக்ஷனின் கேள்விகள் அனைத்துக்கும் தகுந்த பதில்களைச் சொன்னுன். முடிவில் யக்ஷன் ஒரே ஒருவனை மட்டும் உயிர்ப்பிப்பதாகக் கூறிய பொழுது வாள் வலியும், தோள் வலிவும் மிக்க பீம அர்ச்சுனர்களை எழுப்பித் தருமாறு அவன் கேட்கவில்லை. தன் மாற்றாந்தாயின் மகனை நகுலனையே உயிர்ப்பிக்குமாறு கோரினன். அவனது அறச் சிந்தையைக் கண்டு மகிழ்ந்து, யக்ஷனுக வந்த தருமதேவன் நால்வரையும் எழுப்பித்தந்தான். கடைசி யாத்திரையின் போது ஒரு நாய் தருமனைப் பின்தொடர்ந்தது. சொர்க்கத்தில் அதற்கு இடம் இல்லை என்று விரட்டியபோது தன்னை நம்பிய உயிருக்கு இடமில்லையானல் தனக்கும் அந்தசொர்க்கம் வேண்டாம் என்று மறுதளித்தான். தருமதேவதையின் இந்தக் கடைசிச்சோதனையிலும் வெற்றி பெற்றுத் தருமத்தை நிலைநாட்டினன் தருமன்.

ஆகவே சத்துவ குணம் வாய்க்கப் பெற்றவர்களுக்கே அருள் தாகம் தோன்றும் என்பது உறுதியாகின்றது. ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் ஓர் எளிய கதையைச் சொல்லி இதனை விளக்குகிருர். ஒரு காட்டின் வழியே சென்று கொண்டிருந்த வழிப்போக்கனை மூன்று வழிப்பறிக்காரர்கள் வழிமறித்துக் கொள்ளையடித்தார்கள். பின்பு அவனை ஒரு மரத்தில் கட்டிப் போட்டனர். முதலாமவன் அவனைக் கொல்லப் போனுன். இரண்டாமவன் 'இவனைக் கொல்வதால் நமக்கு என்ன பயன்' என்று கூறி அவனைத் தடுத்தான். பிறகு மூவரும் விலகிச் சென்றனர். சிறிதுநேரம் கழித்து மூன்ருமவன் திரும்பி வந்தான். "பாவம் உனக்குத் துன்பமாக இருக்கிறதா?" என்று கேட்டு அவன் கட்டுக்களை அவிழ்த்தான். அவன் ஊர்வரை துணையாகச் சென்று உதவினுன். ஆனல் தன்னைக் காவலர்கள் பிடித்துக் கொள்வார்கள் என்று கூறி அவன் ஊருக்குள் வர மறுத்தான். இந்தக் கதையில் வழிப்போக்கன் என்பவன் ஒவ்வொரு ஜீவனும் ஆவான். காடுதான் இப்பிரபஞ்சம். கொள்ளையடித்தது ஆன்ம ஞானம் என்ற செல்வத்தை. மூன்று திருடர்கள் என்பவர்கள் தமஸ், ரஜஸ், சத்வம் ஆகிய மூன்று குணங்கள். இதில் தமோ குணம் நம்மை அழிக்க முயல்கிறது. ரஜோகுணம் துன்பப் படுத்துகிறது. சத்வம் பரமன் இருக்கும் இடம் வரை நமக்குத் துணையாகவே வருகிறது.

நம்மிடமுள்ள ஞானத்தை மூன்று குணங்கள் முதலில் அபகரித்து விடுகின்றன. "செத்தாரை மீண்டும் இங்கே எழுப்பியிடல்

வேண்டும்'' என்பது வள்ளலார் வாக்கு. அதாவது தமோகுணத்தில் மூழ்கியிருக்கும் நடமாடும் பிணங்களை நாம் முதலில் உயிர்ப்பிக்கவேண்டும். இந்தத் தமோகுணம் பயிர் நடுவே வளரும் களை போன்றது. பயிரைவிடக் களை வேகமாக வளர்ந்து பயிரையே அழிப்பது போன்று, தமோகுணம் மேலோங்கி சத்துவத்தை அழித்துவிடும். சத்துவகுணம் நமக்கு வாழ்க்கைத் துணையாய் வரும். ஆனால் குணாதீத நிலையை அடையும்போது, அதுபின் தங்கிவிடும்.

சுருங்கச் சொன்னால், கர்மத்தில் பற்றில்லாமல் சோம்பித் திரிவது தமோகுணம். கர்மத்தில் பற்று வைத்து உழைப்பது ரஜோகுணம். ''நீயே நானென்று வந்து நிற்பேன் பராபரமே'' என்பதை உணரச் செய்வது சத்துவம். ஆக ரஜோகுணத்தை வளர்த்துத் தமோகுணத்தையும், பின்பு சத்துவத்தைப் பின்பற்றி ரஜோகுணத்தையும் நாம் வெல்ல வேண்டும். இறைவன் அனைத்தையும் கடந்தவன்; மாயாரகிதன். நாமோ மாயாசகிதர்; முக்குணத்துக்கு அடிமைப்பட்டவர்கள். ஆகவே இறைவனிடம் 'மாயையாகிய இருளிலிருந்து என்னை ஞானம் என்னும் ஒளிக்கு அழைத்துச் செல்—தமஸோமா ஜோதிர் கமய' என்று பிரார்த்திப்போம். 'என்னை முற்றிலும் சரணடைந்தவனுக்கு நானே உதவி செய்வேன்' என்று கீதையில் பரந்தாமன் பகர்கின்றான். 'நாம் அடிமைகள் அல்லர்; ஆள்வதற்காக வந்தவர்கள்' என்பது விவேகானந்தர் வாக்கு. ஆகவே இம்மூன்று குணங்களையும் வென்று மாயையைக் கடந்து பிரபஞ்சத்துக்கு அப்பால் போவோம். தேர்வில் இருபத்தைந்து சதவிதம் பெற்றவன் அறுபது சதவீதத்திற்கும், அறுபது சதவீதம் பெற்றவன் நூறு சதவீதத்துக்கும், அதனை அடைந்தவன் தன் அறிவை மேலும் விரிவுபடுத்தவும் முயல்வது போன்று, நாமும் முயன்று படிப்படியாக முன்னேறுவோம்.

மாயையை வெல்லும் முயற்சி இறைவன் திருவருளினால்தான் கைகூடும். அறிவு, ஆற்றல் ஆகியவற்றால் இது சாத்தியப்படாது. வாழ்க்கையில் நான்கு ஆசிரமங்களை நம் ஆன்றோர்கள் வகுத்தார்கள். முதலாவதான பிரம்மச்சரியத்தில் பணிவிடையும், ஒழுக்கமும், வித்தையில் ஆர்வமும் இருத்தல் வேண்டும். பின்பு, கிருகஸ்தாசிரமத்தில் தியாக மனப்பான்மையும், உழைப்பில் ஆர்வமும், இறையருளில் நாட்டமும் வேண்டும். வானப்பிரஸ்தத்தில் பற்றுதலை முற்றிலும் ஒழித்துமனிதசமூகத்தையே தன்குடும்பமாக நினைத்து அதன் உயர்வையே உள்ளத்தில் சிந்திக்க வேண்டும். சந்நியாசத்தில் சகலத்தையும் இறைவனுக்கு ஒப்படைக்கும் நிலையை அடைதல் வேண்டும். இங்ஙனம் தனக்காக, தன் குடும்பத்துக்காக, தன் நாட்டுக்காக, தன் தெய்வத்துக்காகத் தொண்டு செய்யும் பொழுது மாயை என்ற திரை படிப்படியாக விலகும். இறைவனின் பெயரால் தன்னையும், தன்னுடையதையும் பிறருக்குப் பகிர்ந்து கொடுக்குமளவு ஒருவன் இத்துறையில் அதிக முன்னேற்றத்தை அடைகிறான். இதனையே சுவாமி விவேகானந்தர் 'சுருங்குதல் மரணம்; விரிதல் வாழ்வு' என்று பகர்ந்தார்.

விசுவாமித்திரர் பெருநிலை அடைய முயன்று தவம் இயற்றியபொழுது பலவகை இடையூறுகள் அவருக்குத் தோன்றின. காமம், கோபம், அகங்காரம் முதலிய பலவகை உணர்ச்சிகள் அவரை அலைக்கழித்தன. மேனகை தன் குழந்தையை ஏற்றுக்கொள்ளுமாறு கூறியபோதுதான் அவர் தம் கனவுலகிலிருந்து விழித்தெழுந்தார். தமோகுணம் தம்மை ஆள்வதையும், காமத்துக்குத் தாம் வசப்பட்டதையும் அறிந்தார். ஆனால் மனம் தளரவில்லை. மீண்டும் உறுதியாக முயல்வது என்று தீர்மானித்துத் தம் வழியில் மேற்சென்றார். முடிவில் பிரபஞ்சத்தைக் கடந்து பிரம்மஞானமும் வரப்பெற்றார். ஆக, கடமையை மறவாது ஒழுங்காகச் செய்தால், கடவுள் நம்மைக் கைதூக்கி விடுவார்.

தெய்வ சம்பத்துப் பெற்றிருப்பவர்களை ஞானிகள் தங்கள் நோக்கினாலேயே அறிந்து கொள்வார்கள். பரமஹம்சர் தம்முடைய சீடர்களின் கையைத் தூக்கி எடை போட்டுப் பார்த்தும், அவர்கள் உறங்குகையில் முகங்களை உற்று நோக்கியும் அவர்களுடைய தராதரங்களை அறிந்து கொண்டார். வாழ்நாள் முழுதும் உடனிருந்தும், தம் சமாதி நிலையில் தம்மைத் தாங்கிப் பிடித்தும் பணிவிடை புரிந்த ஹிருதயருக்கு அவர் ஒன்றுமே உபதேசிக்கவில்லை. ஆனால் சகல பாபங்களிலும் ஈடுபட்

டிருந்த கிரீஷ்சந்திரகோஷரைத் தம் சீடராக மனமுவந்து ஏற்றுக்கொண்டார். நரேந்திரருக்குச் சிறுவயதிலேயே தியானத்தில் லயித்திருத்தல் ஸ்வபாவமாக இருந்தது. அதுபோன்று சொன்ன சொல் பிறழாமை என்ற உத்தம குணம் கிரீஷிடம் இயல்பாய் அமைந்திருந்தது. இதை வைத்துப்பரமஹம்சர் அவரை இறுதியில் வென்றார். "அப்பா, நீ எதை உண்டாலும், எதைச் செய்தாலும் முதலில் எனக்கு அர்ப்பணம் செய்துவிட்டுப் பிறகு உண்க அல்லது செய்க" என்று தம் சீடரிடம் கூறினர் பரமஹம்சர். அதன் பிறகு தீயது எதையும் உண்ணவோ,செய்யவோ கிரீஷருக்கு இயலாது போயிற்று.

எனவே இந்த நான்கு ஆசிரமங்களிலும், மூன்று குணங்களிலும் எவர் எந்த நிலையில் இருந்தாலும் மேல் நிலைக்கு முன்னேற முயல வேண்டும். வர்ணங்கள் பிராம்மணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் என்று நான்கு வகைப்படும். ஒரே குடும்பத்து உறுப்பினர்கள் அவரவர் குண இயல்புகளுக்கு ஏற்ப வெவ்வேறு வர்ணதர்மங்களைக் கொண்டிருத்தல்சாத்தியமே. சத்துவத்தில் சத்துவம், ரஜஸ், தமஸ் என்றும் ரஜஸில் சத்துவம், ரஜஸ், தமஸ் என்றும், தமஸில் சத்துவம், ரஜஸ், தமஸ் என்றும் ஒன்பது வெவ்வேறு குணபேதங்களை நாம் மாந்தரிடத்தே காணலாம். இந்த வர்ணம், ஆசிரமம் ஆகியன பிறப்பைக் குறிப்பன அல்ல, அவரவர் இயல்பைக் குறிப்பனவாகும்.

சான்ருக அந்தணன் என்போன் அறவோன் ஆவான். அவன் திரிகரண (மனம், வாக்கு, மெய்) சுத்தியும், தவநெறியும், தியாக சீலமும் இயல்பிலேயே வாய்க்கப் பெற்றவன். நாம் கம் கரத்துக்கு 'எடு, கொடு' என்று உத்தரவு போட்டு அதனைக் கையாளுவது போன்று, அவனுல் தன் மனத்தினைக் கையாள இயலும். அவன் மனமானது கண், காது முதலிய புலன்களோடு பொருந்தியும், தேவையில்லாதபோது விலகியும் இருக்கும். இந்த நெறிகளினின்று பிறழ்ந்தவன் அந்தணன் ஆகமாட்டான். மனதை அடக்கும் வழியைக் குறித்துப் புத்தர் தம் சீடனுக்கு ஒரு பயிற்சி தந்தார். சீடனுக்கு ஒரு கனியைக் கொடுத்து 'இதைப் பெற்றுக்கொள்' என்ருர். அவனும் ஏற்றுக்கொண்டான். பிறகு "இப்பொழுது அதே கனியை இன்னெருமுறை தருவேன்; அதனை ஏற்க மறுத்துவிடு" என்ருர். சீடனும் கனியைப் பெற்றுக்கொள்ளவில்லை. "இப்பொழுது கனி உன்னிடத்தில் உள்ளதா?" என்று கேட்டார். சீடன் "இல்லை" என்ருன். "மனமும் அவ்விதமே" என்ருர் புத்தர். "நாம் கொடுப்பதைத்தான் அது ஏற்கவேண்டும். இது உனக்கு இல்லை என்று உறுதியாகக் கூறினல் மனமும் அதனை மறுத்துவிடவேண்டும். இதுவே மனதை அடக்கும் உபாயம்" என்று உபதேசித்தார்.

பரமஹம்சரின் சீடரான சுவாமி துரியானந்தருக்கு ஒருமுறை உடல் உபாதை வந்துற்றது. சத்திர சிகிச்சை செய்யவேண்டும் என்று வைத்தியர்கள் வலியுறுத்தினர். மயக்க மருந்துகளைத் தம் உடலிற் செலுத்தத் துரியானந்தர் ஒருப்படவில்லை. இதனைக் கேள்வியுற்ற பிரம்மானந்தர் "சற்று நீங்கள் உடலை மறந்திருக்கலாகாதா? வைத்தியர்கள் அதில் என்னவாவது செய்யட்டும்" என்றுஅவரிடம் எடுத்துரைத்தார். துரியானந்தரும் நாம் ஓர் அறையை விட்டு வேறு ஓர் அறைக்குப் போவதைப் போன்று தம் உடல் நினைவைத் துறந்து பரத்தில் லயித்திருந்தார். வைத்தியர்களும் மயக்கமருந்து செலுத்தாமலேயே அறுவை சிகிச்சையைச் செய்து முடித்தனர். சிறிதுநேரம் சென்றபின் கண் விழித்தார் துரியானந்தர். அப்பொழுதுதான் இவ்வுலக நினைவுக்கு மீண்டார் அவர். இதுவே ஆன்மீகத்தின் பலம்.

கிரீஷ் சந்திரகோஷ் ஒரு தடவை சமுதாயத்திலுள்ள கஷ்டங்களை எடுத்து விளக்கியபொழுது சுவாமி விவேகானந்தர் அதைக் கேட்டு உள்ளம் உருகினர். மேலும் சுவாமி விவேகானந்தர் காசியில் இறந்தால் முக்தி கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் காசியில் வாழ்ந்து வந்த வயோதிகர்கள் நோய்வாய்ப்பட்டுக் கவனிப்பார் யாருமின்றி கஷ்டப்பட்ட நிலையை நேரில் பார்த்தார். அவர்களுக்கு உதவிசெய்து அவர்களுடைய கஷ்டத்தைப் போக்கவேண்டும் என்று சிந்தித்தவராய் விவேகானந்த சுவாமிகள் மருத்துவக் கல்வி கற்றிருந்த தம் சிஷ்யர் கல்யாணனந்த சுவாமிகளை அழைத்தார். அவரிடம் நாலணைக்

கொடுத்து, "நீ இதை மூலதனமாக வைத்துக் கொண்டு காசியில் கவனிப்பாரற்று நோய் வாய்ப்பட்டுக்கிடக்கும் மக்களுக்கு வைத்தியப் பணி செய்வாயாக" என்று கூறினர். அவர் ஆரம்பித்த பணி வளர்ச்சியடைந்து இன் றைக்குக் காசியில் ராமகிருஷ்ண சேவாச்ரமம் என்ற பெயரில் நோயாளிகளுக்கு அற்புதமான சேவை நிகழ்த்தி வருகிறது. இங்ஙனம் நரர்களுக்குச் செய்கின்ற சேவையே நாராயண சேவை என்று சுவாமி விவேகானந்தர் செய்து வந்தது அவர் செய்த தவம் ஆகும்.

உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசாது இருப்பதும் சொல்லியபடி செயல் புரிவதும் பண்பட்டவர்களுடைய இயல்பாகும். அவர்களையே பிராம்மணர்கள் என்று சொல்ல லாம். எல்லா உயிர்களிடத்தும் பரதரிசனம் காண்பதுதான் ஞானமாகும். மனம் பரநாட் டம் கொண்டிருக்கும் பொழுதுதான் ஞானம் சித்திக்கிறது. ஏட்டுக்கல்வியின் மூலம் ஞானம் வந்துவிடாது. ஞானி ஒருவர் ஸ்ரீ ராமகிருஷ் ணர் வசித்திருந்த தக்ஷிணேசுவரக் கோவி லுக்கு ஒரு தடவை வந்திருந்தார். அவர் அம் பிகையின் சந்நிதியின் முன்னிலையில் நின்று உருகிப் பாடியதைக் கேட்ட ஸ்ரீ ராமகிருஷ்ண ருக்குச் சமாதிநிலை வந்துவிட்டது. ஆலயத்தை விட்டு அவர் வெளியே வந்தபொழுது நாய் ஒன்று தெருவில் எச்சிலிலை உணவைத் தின்று கொண்டிருந்தது. தாமும் அந்நாயோடு சேர்ந்து எச்சிலுணவை உண்டார். ஸ்ரீ ராம கிருஷ்ணர் அவரிடமிருந்த ஞான நிலையை அறிந்துகொண்டார். ஹிருதயரை அழைத்து அவரிடம் ஞானோபதேசம் பெற்றுக்கொள்ளு மாறு கூறினர். ஹிருதயர், "எனக்கு உப தேசம் செய்யுங்கள்" என்று கேட்டுக் கொண்டே அவர் பின் சென்ருர். சாக்கடை யொன்று கங்கையில் கலக்கின்ற இடத்தில் அம்மகான் நின்ருர். ஹிருதயரைப் பார்த்து, "இச்சாக்கடை நீரும் கங்கை நீரும் ஒன்ருகத் தென்படும்பொழுது உனக்கு ஞானம் வந்ததாக வைத்துக்கொள்" என்று கூறி விட்டு அம்மகான் சென்றுவிட்டார். ஹிருதய ருக்கு அவர் ஏதோ உளறுவதுபோன்று இருந் தது. எனவே ஸ்ரீ ராமகிருஷ்ணர் போன்று அவரும் ஒரு பைத்தியக்காரர் ஆவார் என்று ஹிருதயர் தீர்மானித்தார். இக்காலத்தில் மக் கள் பணத்தை நம்பி வாழ்கின்ருர்கள். பிராம ணன் தெய்வத்தை நம்பிவாழ்கின்ருன். ஸ்ரீராம கிருஷ்ணர் பணத்தைக் கையில் தொடாது வாழ்ந்து வந்தார். முற்றும் தெய்வத்தை நம்பி இருப்பவர்களுக்குத் தெய்வம் அவர்களுடைய யோகக்ஷேமத்தைக் கவனித்துக்கொள்கின்ருர்.

அந்தணர்கள் வகுத்த அறநெறியினின்றும் பிறழ்ந்து போகாமல் மக்களை நடாத்திச் செல்கின்றவன் க்ஷத்திரியன் ஆகின்ருன். க்ஷத்திரியன் தன் இயல்பாகிய ஆளும் தன்மை யையும் பராக்கிரமத்தையும் அறத்தைக் காப் பதற்கே பயன்படுத்துகின்ருன்.

பொருள்களை உற்பத்திசெய்வதும் கால்நடை களைப் பராமரிப்பதும் வாணிபத்தின் வாயிலாக மக்களுக்கிடையில் பொருள்களைப் பகிர்ந்து கொடுப்பதும் வைசிய இயல்புடையவர்கள் கடமைகளாகும். சமுதாயத்துக்கு வேண்டிய பொருள்களை உற்பத்தி செய்து அவை முறை யாக மக்களுக்குப் போய்ச் சேரும்படி பார்த் துக்கொள்கின்றவன் சிறந்த வைசியன் ஆகின்ருன்.

தானுகச் சிந்தித்துச் செயல் புரியத்தெரியா தவன், பிறர் இடுகின்ற ஆணைக்கு உட்பட்டுக் கர்மம் புரிகின்றவன் சூத்திரன் ஆகின்ருன். சூத்திரனும் தன் உழைப்பைச் சமுதாயத்துக் கென்றே கொடுத்து வருவானுகில் அவன் உயர் நிலை அடைவது உறுதி. பிறக்கும்பொழுது எல்லாரும் சூத்திரர்களாகத்தான் இருக்கிருர் கள். குழந்தை நிலையில் சிந்தித்துச் செயல் படுவதற்குத் தெரிவதில்லை. பிறகு முயற்சிக் கேற்ப பிராம்மண நிலையெய்துவது சாத்தியம். சூத்திரர்களாகப் பிறக்கின்ற நாம் பிராம்மணர் களாக மடிவோமானல் வாழ்வின் லட்சியத்தை நிறைவேற்றியவர்களாகின்ருேம்.

நம்முடைய ஆற்றலை வளர்ப்பது கர்மயோ கம். ஆற்றல்களைச் சேகரித்து உயர்நிலையை அடையப் பயன்படுத்துவது ராஜயோகம். உயிர்களிடத்து அன்பு செலுத்தி இதயத்தை மலரச்செய்வது பக்தியோகம். உயிர்கள் அனைத்திலும் இறைவனைக் காணுதல் ஞான யோகம். முக்குணங்களையும் கடந்து பிரம்ம நிலையை அடைவதுதான் மானுட வாழ்வின் லட்சியமாகும்.

வாழ நினைத்தால் வாழலாம்

(சுவாமி துருவானந்தர்)

இவ்வுலகில் பிறந்தவர்களில் பெரும்பான்மையோர் என்றாவது ஒருநாள் எண்ணிப் பார்க்கும் விஷயம் ஒன்று உண்டு. "நான் ஏன் பிறந்தேன்?" என்று உலகில் பிறந்த ஒவ்வொருவனும் ஒவ்வொரு சமயத்தில் சிந்தித்துப் பார்ப்பது உண்டு. இந்தக் கேள்விக்கு விடை கண்டவர்கள் பிறவிப்பயனைப் பெற்றவர்கள். மற்றவர்கள் ஏன் பிறந்தோம் என்று எண்ணிவிட்டு அதோடு மறந்தவர்கள். அவர்கள் வாழ்க்கையின் நுணுக்கமான பகுதியை, சிக்கலான பகுதியைப் பற்றிச் சிந்திக்கத் தெரியாதவர்கள். அவர்களும் என்றைக்குச் சிந்திக்க ஆரம்பித்துவிடுகிறார்களோ அன்றைக்கே அவர்களைப் பிடித்திருக்கும் அறியாமையாகிய மயக்கமும், வாழ்க்கையைப் பிணித்துள்ள மர்ம முடிச்சுக்களும் தாமாகக் கழன்றுபோகின்றன.

கண்களைத் திறந்து நம்மைச்சுற்றிலும் பார்க்கும் போது என்ன தெரிகிறது? வானத்தைத் தொடப்போவதுபோல் எழுந்து உயர்ந்து இருக்கின்ற பெரிய பெரிய மாடி வீடுகளும் பங்களாக்களும், படகுக் கார்களில் பவனி வருபவர்களும், நவீன நாகரிகம் என்னும் மோகத்தில் மூழ்கியுள்ள மாந்தர்களும் ஒரு புறம். சாலையின் இருமருங்கிலும் மக்கள் நடக்கும் பாதையைத் தங்களின் சாம்ராஜ்யமாக ஆக்ரமித்து அதற்குள்ளேயே தங்களின் இருப்பிடத்தை அமைத்து, படுக்கப்பாயின்றி, உடுத்த உடையின்றி, உண்ண உணவின்றி அலைந்து எச்சிலிலையில் கிடக்கும் எஞ்சிய உணவுக்கு நாய்களோடு போராடி வயிறு வளர்க்கும் கூட்டம் மற்றொரு புறம். தங்களுக்கு அமைந்த வளமான வாழ்க்கை தருகின்ற அளவுகடந்த வசதிகளால் செருக்கோடு திரிபவர்கள் ஒரு புறம். பிறரால் அவமதிக்கப்பட்டுக் கேவலம் விலங்கைவிட இழிநிலையடைந்தவர்கள் இந்த வாழ்க்கை இதோடு முடிந்து தொலையட்டும், இனியும் தொடரவேண்டாம் என விரக்தியடைந்து தற்கொலை செய்து கொள்பவர்கள்! மற்றொருபுறம். இந்த மாறுபட்ட நிலைக்கு என்ன காரணம்? நாம் எல்லாரும் இந்த இரண்டுவிதக் காட்சிகளைப் பார்த்துக் கொண்டுதானே இருக்கிறோம்! இப்படிப்பட்ட நிலை ஏன் ஏற்படவேண்டும்? வாழ்க்கை என்பதே ஒரு மர்மக் கதை போன்று புரியாத புதிராக இருக்கிறது அன்றோ! இந்த உலகை ஆனந்த மாளிகை என்கிறார் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர். 'இன்பமே எந்நாளும் துன்பமில்லை' என்கிறார் நாவுக்கரசர். சான்றோர்கள் வாக்குப் பொய்ப்பதில்லை. இந்த உலகில் பிறந்த ஒவ்வொருவனும் ஆனந்தத்தைப் பெற முடியும். ஆனால் வாழவேண்டிய முறை தெரியாததால் மனிதன் தனக்கமைந்த பிறவியைக் கெடுத்துக் கொள்கிறான். வாழ நினைத்தால் வாழலாம். அதாவது, வகை தெரிந்து வாழ முயற்சிப்பவன் வாழும் வழியை நிச்சயம் கண்டுகொள்கிறான். அத்தகையவன் வாழ்க்கையில் மகிழ்ச்சியாயிருந்து விட்டு இவ்வுலகை விட்டுப் போகும்போதும் நிம்மதியாகச் செல்கிறான்.

இறைவன் இந்த உலகில் மனிதனைப் படைத்தான்; மனிதனோ இறைவன் தந்த அறிவைக் கொண்டு அற்புதமான படைப்புக்களை உருவாக்கியுள்ளான். சான்றாக இறைவன் கல்லைப் படைத்தான். அந்தக் கல்லிலிருந்து கடவுளுக்கு அற்புதமான வடிவம் கொடுத்தான் மனிதன். பேசும் ஆற்றலைக் கொடுத்தான் இறைவன்; தன் குரல் ஒலியை இன்னிசையாக அமைத்து அந்த ஈசனுக்குப் பாமாலை சாத்தி வழிபட்டான் மனிதன். ஈசன் இயற்கையைப் படைத்தான். அந்த இயற்கையிடமிருந்து உயிர்கள் வாழ்வதற்கேற்ற வசதிகளைப் பெற்று வருகிறான் மனிதன். எடுத்துக்காட்டாக, இன்னும் சில ஆண்டுகளில் வான வெளியை வலம் வரப்போகிறான் மனிதன். ஆனால், பறவை போன்று வானிலும், மீனைப் போன்று நீரிலும், புழுப்போன்று சுரங்கத்தினுள்ளும் வாழக்கற்ற மனிதன் பூமியில் மனிதனாக வாழத் தெரியாது அல்லல் உறுகின்றான். இதுதான் பெரிய விந்தையாக இருக்கிறது.

ஓர் ஓடையிலே பெரிய மரக்கட்டை ஒன்று மிதந்து வந்துகொண்டிருக்கிறது. அந்தக் கட்டைக்குப் பின்னால் ஒரு மனிதன் கட்டு

மரத்தை நீரில் செலுத்தி ஓட்டிக்கொண்டு வருகிறான். முன்னே போகிற மரக்கட்டை நீர் ஓடுகிற திசையில்தான் போகமுடியும். அதற்கென்று தனிச் செயல் எதுவும் கிடையாது. ஆனால் பின்னால் வருகின்ற கட்டுமரமோ ஒரு விதக் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு வருகிறது. அது விரைந்தும் போகமுடியும்; மெதுவாகவும் போகமுடியும்; நீரின் போக்கிலும் போகமுடியும்; நீரை எதிர்த்தும் போகமுடியும். ஏனெனில் கட்டுமரத்தை இயக்குகிறவன் அதனைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறான். அவன் ஒரு குறிக்கோளுடன் ஓர் இலக்கை நோக்கி அதைச் செலுத்துகிறான். வெறுமனே மிதக்கிற கட்டைக்கு நோக்கமோ, இலட்சியமோ கிடையாது. நம்மில் பலர் வெறுமனே நீரின் போக்கில் போகிற கட்டைகள் போன்று வாழ்ந்து வருகிறோம். இக்காலத்திய இளைஞர் பலருக்கு இலட்சியங்களை வகுத்துக்கொள்ளவும் தெரிவதில்லை. திட்டமிட்ட வாழ்க்கை தெவிட்டாத வாழ்க்கை என்பதை வெறும் குடும்பக் கட்டுப்பாட்டு விளம்பரத்திற்கு மட்டும் பயன்படுத்தினால் போதாது. இலட்சிய வாழ்க்கை என்பது ஒரு தேசிய இயக்கமாக மாறவேண்டும். "If a man with an ideal makes thousand mistakes, a man without an ideal makes fifty thousand mistakes. So better to have an ideal" என்றார் விவேகானந்த சுவாமிகள். எடுத்துக்கொண்ட இலட்சியத்திற்காக உழைப்பவன் தன் முயற்சியில் ஆயிரம் தவறுகள் பண்ணலாம். ஆனால் லட்சியம் என்பதே இல்லாதவன் ஐம்பதினாயிரம் பிழைகளைச் செய்கின்றான். ஆகவே இலட்சியம் இன்னதுதான் என்பதை முதலில் தீர்மானம் செய்துகொள்வது மிகவும் அவசியம்.

பிறகு அந்த இலட்சியம் நிறைவேற நாள்தோறும் ஒவ்வொரு க்ஷணமும் பாடுபட்டுக்கொண்டேயிருக்க வேண்டும். நமது நாட்டு மக்களில் பெரும்பாலோர் உழைப்பதற்கு ஆயத்தமாயில்லை. பிறர் முன்னேற்றத்தைப் பார்த்துப் பொறாமைப்படுபவர்களைத்தாம் நாம் நிறையக் காண்கிறோம். மற்றவர்களைத் தூற்றித் திரிவதனாலோ, அவர்களை வெறுத்துத் தள்ளுவதனாலோ ஒருவரும் முன்னேறி விட முடியாது. நம் நாட்டில் பலரும் உழைக்காது சோம்பேறிகளாக இருந்துவிட்டுத்தோல்வியும், நஷ்டமும் வருகிறபொழுது தமக்கு அதிர்ஷ்டம் இல்லை என்றும், அது தம் ஊழ்வினை என்றும் அர்த்தமில்லாத மூட நம்பிக்கைகளில் அடைக்கலம் புகுகின்றனர். எங்கு உழைப்பு இருக்கின்றதோ அங்குதான் முன்னேற்றம் உண்டு. முன்னேறுகின்ற நாட்டில்தான் கலாசாரம், பண்பாடு அனைத்தும் இருக்கின்றன. உழைப்பைப் புறக்கணிக்கும் வீடும் நாடும் முன்னேற்றம் அடையா.

அழியாத ஆத்ம தத்துவத்தை உலகத்திற்கு வழங்கிய இந்தியாவில்தான் தெய்வத்தின் பெயரால் மூடநம்பிக்கைகள் சில இருக்கின்றன. மனதின் அளப்பரிய ஆற்றலை உணர்ந்தவர்கள் அந்த மூட நம்பிக்கைகளை உடைத்தெறிந்து விட்டு இயற்கையை எதிர்த்துப் போராடி வாழ்வில் வெற்றியின் சிகரத்தை எட்டிப் பிடித்து விடுகின்றனர். விவசாயி ஒருவன் நிலத்தில் பாடுபடாது இருந்தால் பலன் கிடைக்குமா? அயராது உழைப்பவர்களுக்குத்தான் இறைவன் எல்லாவித உதவிகளும் செய்கிறான். கடவுள் தியானத்தால், பிரார்த்தனையால் மனத்தெளிவும், மன உறுதியும் ஏற்படுவது நிச்சயம். உடலும் மனமும் சேர்ந்து திறமையுடன் இயங்குகிற பொழுதுதான் சிறந்த பலன் கிட்டுகிறது. ஆகவேதான் வள்ளுவரும்,

> **தெய்வத்தால் ஆகா தெனினும்—முயற்சிதன்**
> **மெய் வருத்தக் கூலி தரும்**

என்று கூறினர்.

வாழ நினைத்தால் வாழலாம் என்ற கோட்பாடு சிந்தித்துப் பார்த்துச் செயல் படவேண்டிய கோட்பாடு. சிந்தித்துப் பார்க்கிற கூட்டம் குறைந்து போனால் அது நாட்டின் சீரழிவுக்கே காரணமாகி விடுகிறது. 'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' என்றார் வள்ளுவர். என்னாது ஒருவராலும் இருக்க முடியாது. அவ்வாறு எண்ணுகிறவன் உயர்ந்ததையே எண்ணுவது எவ்வளவு மேன்மையைத் தரும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டாமா? வீட்டு ஈ ஒரு குறிப்பிட்ட உயரம் தான் பறக்கிறது. சிறிய இறகுகளைப் படைத்ததனால் குறுகிய உயரம் தான் பறக்க முடியும். ஆனால் பெரிய சிறகு

களைப் படைத்த கழுகு, ஆகாயத்தில் எவ்வளவு உயரம் பறக்கிறது. எண்ணத்தால் உயர்ந்தால் எதையும் சாதிக்க முடியும். சிறந்த எண்ணங்களைப் படைத்தவர்கள் இந்தத் தேசத்தின் சரித்திரத்தை மாற்றியவர்கள் ஆவார்கள். உலகில் பிறக்கும் பொழுது இறைவன் எல்லாருக்கும் அறிவையும் ஆற்றலையும் அளித்து முன்னேறுவதற்கு வேண்டிய ஊக்கத்தையும் கொடுத்து விடுகிறான். இதனைத் தெளிவாக உணர்ந்தவன் தான்பெற்றதைக்கொண்டு நன்கு உழைத்து முன்னேற்றப் பாதையில் கம்பீரமாகச் செல்லுவான். உழைக்க மறுப்பவன், தேங்கிய நீர் அடங்கி நாற்றமெடுத்து நோய்க்கிருமிக்கு உறைவிடமாயிருப்பது போன்று, தானும் முன்னேறாது, சமுதாயத்திற்கும் தலைச்சுமையாக இருந்து அல்லலுறுவான். எனவே ஊக்கத்துடன் உழைத்து நாமும், நம் நாடும் முன்னேற்றப் பாதையில் செல்வதற்கு இறைவன் நமக்குத்திருவருள் புரிதல் வேண்டும்.

மேனாட்டாரின் ஆன்மீக நாட்டம்

சில நாட்களுக்கு முன்னர் இளந்துறவி சுவாமி சத்யானந்த சரசுவதி தபோவனத்திற்கு வந்திருந்தார். ஸ்பெயின் நாட்டில் பார்ஸலோனா என்ற ஊரில் அவர் ஒரு சித்தயோக ஆசிரமம் தொடங்கி நடத்தி வருகின்றார். அவரைப்பற்றிய விவரங்களைக் கீழே தருகின்றோம்.

தம் பதினாறும் வயதிலிருந்தே அவர் மரக்கறி உணவை மேற்கொள்ளலானார். சிறு வயது முதல் ஆன்மீகப் புத்தகங்களைப் படிப்பதில் ஆர்வம் காட்டி வருகிறார். அவருடைய இயல்பினைப் புரிந்துகொண்டு அவருடைய பெற்றோர்கள் தெய்வ நெறியில் அவர் காட்டிய ஈடுபாட்டிற்குத் தடை செய்யாமல் இருந்தனர். அவரையொத்த வயதினர் மனம் போன போக்கிலெல்லாம் தங்கள் புலன்களைச் செலுத்தி உடல் ஞாபகத்திலேயே உழல்வது அங்கு மிகவும் சகஜமே. ஆனால் அவரோ வீட்டையும், நாட்டையும் துறந்து அருள் நாட்டம் கொண்டு இங்கிலாந்து, பிரான்ஸ், ஜர்மனி போன்ற பல நாடுகளுக்குச் சென்றுள்ளார். வசதி மிக்க குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவராயினும் தம் தேவைகளைச் சுருக்கிக் கொண்டு, பழத்தோட்டங்களில் உழைத்துச் சம்பாதித்து எளிய வாழ்வு வாழப் பயின்றுள்ளார். அவர் சென்ற நாடுகளில் எல்லாம் செல்வத்தின் செழுமையையும், உள்ளத்தின் சிறுமையையும் ஒருங்கே காண நேர்ந்தது என்றார். ஆன்மீகத்தின் அடிப்படை அறிவும், உணர்வுமில்லாத மனிதர் கூட்டம் அவருக்குச் சலிப்பை ஏற்படுத்தியது. 1975ல் ஆன்மீகத்தின் தாயகமான இந்தியா வந்தடைந்தார்.

பாரதத்தில் ஹரித்வார், ரிஷிகேஷ் போன்ற புண்ணியஸ்தலங்களுக்குச் சென்று சாதுக்களோடு தொடர்பு வைத்துள்ளார். பம்பாய்க்கு அருகே உள்ள கணேஷபுரியில் அவருக்கு ஏற்ற குருநாதரைக் காணப் பெற்றார். ஸ்ரீமத் சுவாமி முக்தானந்தர் அவர்கள் அவருக்குத் தக்க பயிற்சிகள் அளித்துச் சந்நியாச தீட்சையும் செய்து வைத்துள்ளார். கீதை, சிவ மகிம்ன ஸ்தோத்திரம் போன்ற பல அருள் நூல்களைக் கற்றுள்ளார். பிரான்ஸ் ஆகிய நாடுகளில் ஆசிரமங்களை அமைத்து அருள் நெறியையும், யோக மார்க்கத்தையும் பரப்பிவருகிறார். கிறிஸ்துவ ஆலயங்களை அந்நாட்டு மக்கள் புறக்கணிக்கின்ற நிலை இன்று ஏற்பட்டுள்ளது என்றும் இந்நிலையில் வேதாந்தம் அவர்களுக்கு ஏற்றதொரு மாற்று மருந்தாகப் பயன்படுகிறது என்றும் சத்தியானந்தர் கூறுகிறார். அவர் நான்கு நாட்கள் தபோவனத்தில் தங்கி அதன் பணிகளையும், நடைமுறைகளையும் பற்றி ஆர்வத்துடன் கேட்டறிந்தார். தபோவனத்தின் ஆங்கில வெளியீடுகளையும், கீதையின் ஆங்கில உரையையும் பயின்றுள்ளார். அவர் இவ்வாண்டு தென்னிந்திய ஸ்தல யாத்திரை மேற்கொண்டுள்ளார். அவர் போன்ற சான்றோர்கள் மேன்மேலும் பெருகிப் போக பூமியை யோகபூமியாக மாற்றவேண்டும்.

ஸத் ஸம்பாஷணை

கேள்வி: (385) கிறிஸ்துவ மதப்பிரகாரம் ஆதிமனிதர்கள் ஆதம், ஈவ் என்று கூறப்படுகின்றனர். ஹிந்து மதத்தின் படைப்புக் கொள்கை யாது?

கிறிஸ்துவமதக் கொள்கைப்படி கடவுள் சுமார் ஆறுயிரம் வருஷங்களுக்கு முன்பு இவ்வுலகைப் படைத்தார். ஆறு நாட்களில் அவர் படைப்பைப் பூர்த்தி பண்ணினுர். ஏழாம் நாள் அவர் ஓய்வெடுத்துக்கொண்டார். ஆனல் இக்கொள்கை தத்துவத்துக்குப் பொருந்தாது. படைப்புக் கடவுளே படைப்பாகிய பிரபஞ்சயாகக் காட்சி கொடுத்துக் கொண்டிருக்கிறுர். படைப்புக்குத் துவக்கமும் உண்டு; முடிவும் உண்டு. துவக்கத்தைச் சிருஷ்டி என்றும், ஒடுக்கத்தைப் பிரளயம் என்றும் கருதுவது முறை. இங்ஙனம் தோற்றமும் ஒடுக்கமும் ஆதியந்தமில்லாது சர்வகாலமும் நிகழ்ந்துகொண்டே இருக்கின்றன என்பது வேதாந்தக் கோட்பாடு.

இனி, கிறிஸ்துவமதப் பிரகாரம் பறவை, விலங்கு ஆகிய ஏனைய ஜீவ ஜந்துக்கள் மனிதனுக்காக என்று படைக்கப்பட்டிருக்கின்றனவாம். இதுவும் உண்மையன்று. இது உண்மையானுல் மனிதன் தன்னுடைய உணவுக்காகப் படைக்கப்பட்டிருக்கிறுன் என்று புலி பகரும். வேதாந்தக் கோட்பாட்டுப் பிரகாரம் பரம்பொருள் என்னும் ஒரு பேருயிர் (Cosmic Life) அனந்தங்கோடி சிற்றுயிர்களாகத் தன்னை விளக்கிக்கொண்டிருக்கிறது. இச்சிற்றுயிர்கள் படிப்படியாகப் பரிணமித்துப் பேருயிர்களாக வடிவெடுக்கின்றன. மனித நிலையை எட்டுகின்றபொழுது பரிணமம் பூர்த்தியாகிறது. இயற்கையின் நடைமுறை இதற்குச் சான்றுகும். ஆகையினுல் ஆதம், ஈவ் என்னும் ஆதிமனிதர்களைப்பற்றிய கொள்கையும் சரியன்று.

கேள்வி: (386) கோவிலுக்குப் போகும்போது ஏதாவது கொண்டுபோகவேண்டும் என்பதன் கருத்தென்ன?

கடவுள் உலகில் உள்ள அனைத்துமாய் இலங்குகின்றுர். கோவிலுக்கு மக்கள்போவது தங்களுக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பை ஞாபகத்திற்குக் கொண்டு வருதற் பொருட்டேயாம். அக்கொள்கையைச் செயலிலும் காட்டியாகவேண்டும். உண்பதற்கேற்ற நல்ல பொருள்களைக் கடவுளுக்குப் படைப்பதற்காக எடுத்துச் செல்லுதல் வழக்கத்தில் இருந்து வருகிறது. அப்பொருள்களைக் கடவுளுக்குப் படைத்தல் என்பதன் கருத்து அவருடைய சிருஷ்டியாக இலங்குகின்ற மற்ற மக்களோடு பங்கிட்டுக்கொள்ளுதல் என்பதேயாம். பரம்பொருள் தாமே உண்ணுது உறங்காது இருக்கின்றுர். ஆயினும் அனந்தங்கோடி உயிர்களாக வடிவெடுத்து உண்ணவும் உறங்கவும் செய்கின்றுர். ஆதலால் கோவிலுக்குப் போகின்றவர்கள் நல்லதும் தூயதுமாகிய உணவுப்பொருளைக் கோவிலுக்கு எடுத்துச் சென்று கடவுளுக்கு நைவேத்யம் பண்ணி அக்கடவுளின் பிரசாதமாக மற்ற உயிர்களுக்கு வழங்குதல் நல்ல வழிபாடாகிறது.

கேள்வி: (387) அபிஷேகம் செய்வதால் பால், பழம் முதலியவை வீணுகின்றன. இவைகளை ஏழைகளுக்குக் கொடுக்கலாம் அல்லவா?

சரியான முறையிலே இப்பண்டங்கள் ஆலயத்தின்கண் எழுந்தருளியிருக்கும் மூர்த்திக்கு அபிஷேகம் செய்யப்படுகின்றபொழுது இவைகள் வீண்போவதில்லை. அபிஷேகம் ஆகஆக இவைகளைப் பிடித்துப் பாதுகாக்கும் முறையும் அமைந்திருக்கிறது. அப்படிப் பாதுகாத்து எடுக்கப்பட்ட பண்டங்கள் வழிபடுகிறவர்களுக்குப் பிரசாதமாக வழங்கப்படுகின்றன. உண்பதற்குரிய பொருள்களை நேரே எடுத்து மக்களுக்கு வழங்கினுல் அவைகள் பஞ்சேந்திரியங்களால் நுகரப்படும் போகத்துக்குரியவைகள் எனக் கருதப்படுகின்றன. ஆனுல் அதே பொருள்கள் கடவுள் வழிபாட்டில் கையாளப்படுகின்ற பொழுது அவைகள் புனிதம் வாய்க்கப் பெற்றவைகளாகக் கருதப்படுகின்றன. அவைகளை ஏற்கின்ற அன்பர்களும் இறைவனுடைய அருள் அவைகள் வாயிலாகத் தங்களுக்கு வருகிறது எனக் கருதுகின்றுர்கள். புசிக்கிற பண்டத்தை நாவுக்கு இனியது எனப் பொருள்படுத்துவது ஒருவித மனப்பாங்கு. அதே பொருளை ஈசுவரப் பிரசாதமாக

ஏற்கின்ற பொழுது மனப்பான்மை மேலானதாகத் திருந்தி அமைகின்றது. இங்ஙனம் பஞ்சேந்திரியங்கள் மூலமாக நுகர்கின்ற அனைத்தையும் தெய்வத்தோடு இணைத்து வைத்து நுகர்வது சாலச் சிறந்தது. மனிதன் பக்தியிலும் மனநிலையிலும் மேலானவனாகத் திருந்தியமைவது பாராட்டத்தக்கதாம். இம்முறையைக் கையாளுகின்றவிடத்துப் பொருள் நஷ்டமும் இல்லை; மனிதன் வெறும் இந்திரிய சுகபோகத்தில் கட்டுண்டு கிடப்பதைத் தவிர்த்து அவனைக் கடவுள்பக்தனாகத் திருத்தி அமைப்பதும் இதில் அடங்கியுள்ளது.

கேள்வி: (388) கண்ணன் கீதையில் 'நானே உலகனைத்தும்' என்று கூறுகிறார். அப்படியானால் நம்மை ஏன் ஜீவாத்மா என்று சொல்ல வேண்டும்?

ஒரு சரீரத்தில் கட்டுண்டிருப்பவன் ஜீவாத்மன். பிரபஞ்சம் முழுதையும் தன் சரீரமாகக் கட்டியாளுதற்கிடையில் அதில் தானே கட்டுண்டு போகாது இருப்பவன் ஈசன். ஜீவாத்மன் ஒருவனுக்கு நிகழ்காலம் ஒன்றுதான் சுமாராக விளங்குகிறது. ஆனால் உலகனைத்துக்கும் ஈசனாக இருப்பவன் கிருஷ்ண பரமாத்மாவாகத் தன்னைத் தோற்றுவித்துக் கொண்டிருந்தபொழுது அண்டங்கள் அனைத்தினுடைய, ஜீவர்கள் அனைவருடைய முக்கால நிலையையும் அவன் அறிந்து வந்தான். கண்ணன் படைத்திருந்த இறைமை நிலையை ஜீவர்களாகிய நாம் அடையப்பெறவில்லை. ஆகையினால் நம்மைநாம் ஜீவாத்மன் என்று சொல்கின்றோம்.

கேள்வி: (389) பூர்வ ஜன்மம், மறுபிறப்பு இவைகளை உண்மை என எப்படி ஏற்றுக் கொள்வது?

பூர்வ ஜன்மத்தை ஞாபகத்துக்குக் கொண்டு வருவதற்கேற்ற சாதன முறைகள் யோக சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. அந்தச் சாதனங்களை அனுஷ்டித்துப் பார்த்தவர்களுக்குத் தங்களுக்குப் பிறவிகள் பல இருக்கின்றன என்னும் நம்பிக்கை வந்தது. ஆனால் இந்தச் சாதனத்தை நாம் எல்லாரும் அனுஷ்டிக்க வேண்டிய அவசியம் இல்லை. நமக்கு நேற்று நிகழ்ந்தவைகளில் பல இன்று மறந்து பட்டுப்போகின்றன. அதை முன்னிட்டு நேற்று அவைகள் நிகழவில்லை என்று நாம்மறுக்க முடியாது. புதிய பிறவி எடுத்தானபிறகு பழைய சரீரம், சூழ்நிலை ஆகிய யாவும் மறைந்து பட்டுப்போகின்றன. ஆகையினால் தான் அவைகள் நம் ஞாபகத்தில் எட்டுவதில்லை. அப்படி எட்டாததனால் நமக்கு நஷ்டம் ஏதுமில்லை.

இன்றிருக்கிற நாம் நேற்று இருந்தோம், நாளைக்கும் இருப்போம் என்னும் நம்பிக்கையுடன் வாழ்ந்து வருகின்றோம். இக்கோட்பாட்டைப் பூர்வ ஜன்மத்துக்கும் இனி வரப்போகிற ஜன்மத்துக்கும் கையாளலாம். அதற்குமேல் நாம் செய்யக்கிடக்கும் முக்கியமான கடமை ஒன்று இருக்கிறது. நிகழ்காலத்தைப் பயன்படுத்துவதற்கு ஏற்ப நாம் மேன்மையுறுகிறோம் அல்லது கீழ்மையில் மூழ்குகிறோம். இப்பொழுது வாய்த்துள்ள நிகழ்காலத்தை நன்கு பயன்படுத்தக் கடமைப் பட்டிருக்கின்றோம். சென்றதைப் பற்றியும் இனி வருவதற்கு இருப்பதைப்பற்றியும் எண்ணி எண்ணி ஏங்கிக் கிடப்பது பொருந்தாது. எதிர்காலத்தில் நாம் இருக்கமாட்டோம் என்று வைத்துக்கொண்டாலும் நிகழ்காலத்தை நன்கு பயன்படுத்துவதற்கேற்ப நாம் மேன்மையடைவது திண்ணம்.

கேள்வி: (390) திருப்பாவை-திருவெம்பாவை இவற்றை மார்கழி மாதத்தில்தான் சொல்ல வேண்டுமா?

திருப்பாவை, திருவெம்பாவை மட்டுமல்ல, பக்தி ஊட்டக்கூடிய நூல்களனைத்தையும் நாம் வாழ்ந்திருக்கும் காலமெல்லாம் நன்கு பயன்படுத்தவேண்டும். மார்கழி மாதத்தில் சிறப்பாகக் கடவுள் வழிபாடு நிகழ்ந்து வருகிறது. அந்தச் சிறப்புவழிபாட்டில் இவை இரண்டும் இவைபோன்ற வேறு நூல்களும் நன்கு பயன்படுத்தப்படுகின்றன. மார்கழி மாதத்தில் அதிகாலையில் எழுந்து பழகுதல் சோம்பலினின்றும் அதற்கு முகாமையாயிருக்கின்ற தமோகுணத்தினின்றும் மீளுதல் பொருட்டேயாம். ஆதலால் காலமெல்லாம் அதிகாலையில் எழுந்து பழகுவது நல்ல பழக்கம். அதே பாங்கில் முறை வைத்துக்கொண்டு திருப்பாவையையும் திருவெம்பாவையையும் காலமெல்லாம் ஓதி வருவது நன்றேயாம்.

ஞான வெட்டியான்-1

உயிர்கள் அனைத்துக்கும் உணவூட்டுபவள் அன்னை பராசக்தி

பரதவர்ஷம் முழுதிலும் பிரசித்தி பெற்றிருப்பது காசி என வழங்கிவரும் வாரணசியாம். மானுட சரீரத்தில் இருக்கும் ஹிருதயத்துக்கு நிகரானது இப்பழைய பட்டணம். ஹிருதயம் மாசு படிந்த இரத்தத்தை ஏற்று அதைத் தூயதாக்கி மீண்டும் உடலெங்கும் பரவும்படி அனுப்புகிறது. அங்ஙனம் பரத கண்டத்தில் வசித்துவரும் மக்களனைவருக்கும் புண்ணிய க்ஷேத்ரமாக இலங்குவது காசி. இந்நாட்டில் பிறந்துள்ள ஆடவர், மகளிர் ஆகிய அனைவரும் தங்களுடைய வாழ்க்கையில் ஒரு தடவையாவது காசிக்கு யாத்திரை போய் அருளுக்குப் பாத்திரமாக வேண்டும் என்னும் எண்ணத்தில் ஊறியிருக்கின்றனர். பல்லாண்டு பல்லாண்டுகளாக இந்த ஐதிகம் இந்த நாட்டுக்குச் சொந்தமானது. மானுடவர்க்கத்தின் நலனை முன்னிட்டு இந்த ஐதிகம் யாண்டும் தழைத்திருப்பதாகுக.

உலகெங்குமுள்ள பழைய பட்டணங்களுள் ஒன்று காசி. பண்டைக்காலத்தில் உலகெங்கும் பட்டணங்கள் பல தோன்றி வந்து தாம் தாம் நிறைவேற்ற வேண்டிய கடமைகளை முடித்துக் கொண்டு மறைந்துபட்டுப்போயின. அவைகளில் சிலவற்றை மனிதன் அடியோடு மறந்து விட்டான். ஆனால் காசியின் பாங்கு அத்தகையதன்று. அது மிகமிகப் பழையது எனினும் இன்றைக்கும் அதன் யௌவனத்தைக் காத்துவருகிறது. பண்டைக் காலத்தில் இருந்தது போன்றே இன்றைக்கும் அதற்குரிய அருள்பணிவிடை தீவிரமாக நடைபெற்று வருகிறது. இக்காலத்தில் அமைக்கப்பெற்றுள்ள அழகும் வசதிகளும் வாய்த்துள்ள புதிய நகரங்களோடு காசியைச் சீர்தூக்கிப் பார்த்தால் அதைப் பழையது என்றும் ஒன்றுக்கும் பயன்படாததுஎன்றும் ஒதுக்கிவருவதற்கேற்ற குறைவு அதனிடத்துத் தென்படலாம். மற்று, அருள்துறையில் இப்பட்டணம் படைத்திருந்த பண்பு அழிந்துபட்டுப் போகாது இன்றைக்கும் உறுதிபெற்றிருக்கிறது. இப்பட்டணத்துக்கு மஹாஸ்மசானம் என்பது மற்றொரு பெயர்; அதாவது இது ஒரு பெரிய சுடுகாடாம். அல்லும் பகலும் இப்பட்டணத்திலே கங்கைக் கரையோரத்தில் சவங்கள் சதா வெந்து கொண்டேயிருக்கின்றன. இப்புண்ணிய வாய்ப்பு எல்லாருக்கும் அமைவதன்று என்பது இந்துக்களுடைய கொள்கை. ஆகவே, இந்தப் புண்ணிய க்ஷேத்ரத்தில் இரண்டு அரிய பெரிய செயல்கள் காலமெல்லாம் நிறைவேறி வருகின்றன. மக்களுக்கு வாழ்க்கைத் தத்துவங்களைத் தெளிவுறப் புகட்டுவது முதல் செயல். அதன் வாயிலாக அவர்கள் இவ்வுலக வாழ்வைப் பண்புடனும் நன்கு பயன்படும்படியும் நிறைவேற்றுகின்றனர். அதன் பிறகு இந்த க்ஷேத்ரம் மரணத்தின் வாயிலாக மக்களை மேன்மை தங்கிய மறுமைக்கு அனுப்பி வைக்கிறது என்பது கோட்பாடு. காசியில் சாகின்றவர்களைக் ‘காசி முக்தி அடையப் பெற்றவர்கள்’ என மக்கள் கருதுகிறார்கள். இப்பட்டணத்தைச் சுற்றிலும் ஆங்காங்கு அழகாக அமைக்கப்பெற்றுள்ள பூங்காக்களில் சிறிய குடிசைகளும் இடம்பெற்றுள்ளன. தவம் புரிகின்றவர்களுடைய வசதிக்காகவென்று இக்குடிசைகள் செல்வம் படைத்தவர்களால் நன்கு நிர்மாணிக்கப்படுகின்றன. நிலையற்ற இப்பிரபஞ்ச வாழ்வில் பற்றுவைக்காத தவசிகள் காசிக்குச் சென்று இக்குடிசைகளில் வசித்துக் கொண்டு ஆழ்ந்து தங்களுடைய கருத்தைப் பரநாட்டத்தில் செலுத்தி வருகின்றனர். அத்தகைய தவசிகளுக்கு முறையாகப் பொருந்திய உணவை அனுப்பி வைப்பது இன்னும் சிலருடைய புண்ணியச்செயலாம். பண்டைக்காலத்திலிருந்து இந்த ஐதிகமும் தங்கு தடையின்றி நடைபெற்று வந்துகொண்டிருக்கிறது.

சாமேலிபுரி என்னும் சான்றோர் ஒருவர் பரமஹம்சபரம்பரையைச் சேர்ந்தவர். இப்புண்ணிய பூமியிலே துவங்கிய குரு-சிஷ்ய பரம்பரைகளுள் அது மிகப்பெரியதும் பழையதுமாக இருந்து வருகிறது. சில ஆண்டுகளுக்கு முன்பு இச்சான்றோர் காசியில் வந்து தவம்புரிந்துகொண்டிருந்தார். பல ஆண்டுகளாக ஒரு குடிசையில் அவர் வசித்துவந்தார். ஆனால் அக்குடிசை யாருக்குச்சொந்தம் என்ப

தைப்பற்றி அவர் அறிந்துகொள்ளவில்லை. நண்பகலில் உணவும் அவருக்கு முறையாக வந்துகொண்டிருந்தது. தமக்கு உணவு அனுப்பியது யார் என்பதும் அவருக்குத் தெரியாது. அவர் அல்லும் பகலும் ஆழ்ந்த தியானத்தில் இருந்தார். ஆயினும் நாள்தோறும் பிற்பகலில் பொதுமக்களுக்காக என்று அவர் ஒரு மணி நேரம் ஒதுக்கிவைத்தார். அவ்வேளையில் யார் வேண்டுமானாலும் அவரைப் போய்ப் பார்க்கலாம். அவர்பேசிய பேச்செல்லாம் பரம்பொருளைப் பற்றியதேயாம். ஆதலால் பரநாட்டம் உடையவர்கள்தாம் இப்பெரியவரைப் போன்ற சான்றோர்களை அணுகி வந்தார்கள்.

ஒருநாள் சாமேலிபுரி பாரமார்த்திகப் பெருநிலையினின்று கீழ்நிலைக்குச் சிறிது இறங்கி வந்தார். அப்போது அவர் மக்களோடு அளவளாவிப் பேசவும் ஒட்டி உறவாடவும் செய்து வந்தார். அதனால் பக்தர்களும் பக்திமதிகளும் பரமானந்தத்தில் திளைத்திருந்தனர். அவரவர் மனதில் உதித்த மேலாம் கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் தாராளமாக அவரிடம் அவர்கள் வெளியிட்டார்கள். அவரும் அவைகளைக் கேட்டு மிக ரசித்து வந்தார். பக்தர் ஒருவர் பகர்ந்ததாவது: "பகவானே! கடந்த சில ஆண்டுகளாகத் தங்களுக்கு அடியேன் அமுது வழங்கிவரும் பாக்யம் அடையப் பெற்றுள்ளேன்." அக்கூற்றைக் கேட்டதும் அந்தச் சான்றோர் உள்ளம் அதிவேகமாக உள்நோக்கிச் சென்றது. அப்பொழுது அவர் தெரிவித்த கருத்தாவது: "தாயே, உயிர்கள் அனைத்துக்கும் உணவூட்டி நீ காப்பாற்றி வருகின்றாய். உணவு படைப்பதற்கு உன் கையில் கருவியாயிருப்பது உலகத்தவர் பெற்றுள்ள பாக்யமாகும். ஆனால் அன்னவர்களில் பெரும்பான்மையோர் தங்கள் செயலுக்குத் தாங்களே கர்த்தா என்று அகங்கரித்துக் கீழ்மையுறுகின்றனர்." அவர் கூறிய மேலாம் கோட்பாடு அந்தப் பக்தருக்கும் நல்லதொரு பாடத்தைப் புகட்டியது.

பாரமார்த்திகப் பெருவாழ்வில் ஈடுபட்டிருப்பவர்களுடைய உள்ளம் யாண்டும் பரத்தைச் சார்ந்திருக்கிறது அவர்கள் பரத்துக்கென்றே உயிர் வாழ்ந்து வருகிறார்கள். முற்றும் அவர்களுடைய வாழ்வு கடவுளுடைய நம்பிக்கையில் அமைந்திருக்கிறது. பொருளை அவர்கள் தேடிப் போவதில்லை. அவர்களுக்கு வேண்டுவன அவர்களை நாடி வருகின்றன. எளிய தூயவாழ்வில் அவர்கள் யாண்டும் மகிழ்ச்சியுற்று இருக்கின்றனர். இத்தகைய சான்றோர்கள் தொகை உலகத்தில் அதிகரிக்கின்ற பொழுதுதான் உலகத்துக்கு க்ஷேமம் உண்டாகிறது.

விவேகானந்தர் கடிதத்தில் கூறியருளிய கருத்து-1

சுவாமிகள் பண்டிதர் ஒருவரோடு கடிதப் போக்குவரத்து வைத்திருந்தார். அப்பண்டிதர் சுவாமிகளைப் பெரிதும் பாராட்டி அவருக்குக் கடிதம் அனுப்பியிருந்தார். அதற்குச் சுவாமிகள் கொடுத்த விடையாவது: "பாராட்டுதற்குரிய பண்டிதரே, தாங்கள் எழுதிய கடிதம் கிடைக்கப்பெற்றுள்ளேன். அதில் என்னை வானளாவப் பாராட்டுகின்றீர்கள். அப்படிச் செய்வது பொருந்தாது. போற்றிப் பாராட்டுதற்குரியவர் பரமன் ஒருவரேயாம். நரஸ்துதியில் அல்லது மனிதனைப் போற்றிப் பாராட்டுதலில் யாரும் வரம்பு கடந்து போகலாகாது. அப்படிச் செய்வதால் போற்றுபவர், போற்றப் பெறுபவர் ஆகிய இருவர் தங்களை அறியாது கீழ்மையுறுகின்றனர்.

"நம்மவர்கள் நெடுங்காலமாக வெளியுலகோடு எந்தவிதமான தொடர்பும் வைத்துக் கொள்ளவில்லை. அதன் விளைவாக நம் தேசத்தின் நோக்கமே குறுகிப்போயிற்று. மற்றவர்களிடம் உள்ள சிறப்பைப் பார்த்துப் பாராட்டுவது ஒன்றே மேன்மையுறுதற்கு உற்ற உபாயமாகும். இங்கிருக்கும் அமெரிக்கர்கள் மனிதர் யாரையும் கீழ்மைப்படுத்துவதில்லை. மனிதனை மனிதன் கண்ணியப்படுத்துவதே இத்தேசத்தவரின் பண்பாகும். அதன் விளைவாக ஆற்றலும் ஆக்கமும் இங்கு விரிவடைந்து வருகிறது. இதைப்பார்த்து நம்மவர்களும் இந்தப் பாங்கில் நடந்துகொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றனர்."

குட்டித் திருவாசகம்

(வித்துவான் ஆதி. பாலசுந்தரன் M. A.)

அதிவீரராம பாண்டியர் தம்முடைய முதல் பத்துப் பாடல்களிலே, மாதொரு பாகனுகிய சிவபெருமான் தமக்கு நேரே எழுந்தருளிக் காட்சி கொடுத்த அற்புதத்தை வியந்து பாடினுர். சிவச் சார்பினுலே தமக்குக் கிடைத்த புண்ணியத்தை நினைத்து நினைத்து உள்ளம் உருகினுர். திருஞானசம்பந்தப் பெருமானுக்குச் சீர்காழித் திருக்கோயில் பொய்கைக் கரையில் நின்று வணங்கும்படியாகத் திருக் கோபுரத்தில் சிவபெருமான் அம்மையப்பராகக் காட்சி தந்தருளினுர்.

திருக்கயிலைக் காட்சி காணவேண்டும் என்னும் மன உறைப்புடன் சென்ற திருநாவுக்கரசு சுவாமிகளுக்குத் திருவையாறு தலத்திலே இறைவன் அம்மையும் அப்பனுமாகக் காட்சி கொடுத்தருளினுர். அதுபோன்று, அதிவீரராமருக்கும் எம்பெருமான் காட்சி தந்தருளினுர். தூயஆன்மாவாகிய அதிவீரராமருக்குச் சிவ தரிசனப் பேறு கிடைக்கும் புண்ணியம் வந்துவாய்த்தது.

அச்சிவ தரிசனத்தாலும், சிவ புண்ணியத்தாலும் முதல்வனுகிய பரம்பொருளை உணரும் பேறு கிடைத்தது. முற்பிறப்பின் வலிய வினைகள் எல்லாம் அவரை விட்டு அகன்றன. தராசின் இரண்டு தட்டுகளும் ஏற்றத்தாழ்வின்றிச் சமமாக நிற்றலைப்போல, நல்வினை தீவினை ஆகிய இரண்டு வினைகளையும் ஒத்துக் காணக் கூடிய அனுபவம் பெற்றுர் அவர்.

சத்திநிபாதத்தால் அவருக்கு முன்னை வினைகள் அகன்றன. சத்திநிபாதம் நிகழ்ந்த மாத்திரத்திலேயே ஆன்மாவானது, மனைவி மக்கள் செல்வம் முதலிய உலகப்பற்றுகளினிடத்தில் அச்சம்கொண்டு, உலக வாழ்க்கையிலிருந்து பற்றுதலில் இருந்து வெளியேறி உண்மைக் குரவனை நாடிச் செல்லுகிறது.

உண்மைக் குரவன் நாட்டமும் அதிவீர ராமருக்கு ஏற்பட்டது. அதே சமயம் கண்ணுதல் கடவுளும் அவர்பால் கழிவிரக்கம்கொண்டு காட்சிதந்தார். எம்பெருமான் சிவபெருமான் தமக்குக் காட்சிகொடுத்தருளிய அதிசயத்தை முதல் பத்துப் பாடல்களிலே பாடினுர்.

அடுத்த பத்துப் பாடல்களில் திருவருள் காட்சியால் தாம் அனுபவித்த ஆனந்தத்தைக் குறிப்பிடுகிறுர்.

நாவலர்கள் திருவடிப் புகழ்ச்சியையே விரும்புவர்:

“நாயகன் முகுந்தன் சததளப் பொகுட்டில்
நான்முகன் என்னவீற் றிருக்கும்
தூயவன், கருவைக் களாநீழல் அமர்ந்தோன்
துணையடிப் புகழினை வழுத்தி
மாயிரு ஞாலம் எடுத் தேத்த
வரம்பெறு மதுரநா வலர்கள்
சேயிரு விசும்பில் கற்பக நீழல்
செல்வமும் வேண்டுவ திலையே.”

இறைவனுகிய ருத்ரனும், திருமாலும், தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரம்மனும் நிகர் ஆகமாட்டார்கள் என்று சொல்லும்படியான தூயவன் சிவபெருமான். அவன் விசுத்த [மேலான சுத்தம்] தேகம் உடையவன். அப்பரமன் திருக்களா மரத்து நிழலின்கண் எழுந்தருளியிருப்பவன். அப்பெருமானுடைய இரண்டு திருவடிகளின் புகழ்ச்சியை வியந்து பாடும் கவி வல்லோர், தேவலோகத்தில், கற்பக விருட்சத்தின் கீழ் வசிக்கும் இந்திர செல்வத்தையும் விரும்பமாட்டார்கள்.

இறைவனை நாடிப் பணிகின்றவர்கள் தேவலோக இன்பத்தை விரும்பமாட்டார்கள்.

உயிர் என்னும் ஆன்மாவுக்குப் பாதுகாப்பாக விளங்குபவன் இறைவன். உயிர்களைக் கடைத்தேற்ற வேண்டும் என்னும் கருணை உள்ளம் உடையவன். தடஸ்த லட்சணத்தில் தாயாகவும், சொரூப லட்சணத்தில் தந்தையாகவும் இறைவன் திகழ்கின்றுன். தாயாகித் தந்தையாகித் தாங்குகின்ற தெய்வம் அவன். தன்னை வணங்குகின்றவர்கள் யாராக இருந்தாலும் பேரின்பம் வழங்குவான். உயிர்களுடைய பிறவிப்பிணி நீங்குமாறு அழகிய திருக்களாமர நிழலில் அவன் எழுந்தருளி உள்ளான். களாமரம் தல விருட்சம். நம் முன்னோர்கள் இயற்கைப் பொருள்கள் அனைத்திலும் இறைவன் உறைவதாகக் கருதினுர்கள். ஸ்தலங்கள் தோறும் விருட்சங்களை அமைத்துக் கடவுளோடும், கடவுள் வழிபாட்டோடும்

சம்பந்தப் படுத்தினர்கள். வினைப்பயன் முடிவுறும் காலம் நெருங்கும்போது இறைவன் திருவருள் காட்சி கிடைக்கும். சூரபதுமனுக்கு வினைப்பயன் முடிவடையும் காலம் வந்தது. முருகப் பெருமான் காட்சி தந்தார். வாலிக்கு வினைப்பயன் முடிவடையும் தருணத்தில் இராமபிரான் திருமாலாகக் காட்சி தந்தருளினர். திருக்குருந்த மரத்தடியில் மணிவாசகப் பெருமானுக்குச் சிவபிரான் காட்சி கொடுத்தருளினர்.

இறைவனை வணங்குதல் என்பது இம்மானிடப் பிறவியில்தான் முடியும். "மனித்தப் பிறவியும் வேண்டுவதே இம்மாநிலத்தே" என்பது அனுபவ வாக்கு. மானிடப் பிறவி நமக்குக் கிடைக்குமாறு செய்பவனும் இறைவனே. மாயை என்னும் ஒன்றோடு சேர்த்து அம்மாயையின் வினைவால் உடல், கருவி கரணங்கள், உலகம், உகை இன்பத்தை அனுபவிக்கும் அனுபவ உணர்வு முதலியவற்றைக் கொடுத்தருளுகிறன் அவன். நல்வினைப்பயன், தீவினைப்பயன் ஆகிய இருவகைப் பயனையும் கூட்டுவிப்பவன் இறைவன். அவனை உணர்வதற்குரிய உணர்வை ஊட்டுபவன் இறைவன். எனவே, தேவலோக இன்பத்தைவிட, இறைவன் திருவடிப் புகழ்ச்சியையே கற்றோர் விரும்புகின்றனர்.

கற்றவர்கள் பிறவி எடுப்பதை விரும்புவதில்லை. பிறவியை வேரறுக்கவே விரும்புகின்றனர்.

உயிர்களிடத்தில் இயல்பாகவே மலமாயை அமைந்துள்ளது. அம்மலமாயையை நீக்குவதற்குப் பல பிறப்புக்களை எடுக்குமாறு செய்கிறன் இறைவன். உயிர்கள் பல பிறவிகளை எடுக்கும்போது அவை பக்குவம் அடைகின்றன. அவ்வாறு பக்குவம் அடையும்போது இறைவன் குருவாக வந்தருளுவான்.

எம்முறையில் உயிர்களுக்கு இறைவன் அருள் செய்வான்? ஒன்ருக நின்று அருள் செய்வானு? வேருக நின்று அருள் செய்வானு? இறைவன் உயிர்களிடத்து அருள் செய்யுங்கால், ஒன்ருக நின்றும் அருள் செய்வான்; வேருக நின்றும் அருள் செய்வான். உடனுக நின்றும் அருள் செய்வான். உண்மையான அன்புடைய அடியவர்களிடத்தில் இறைவன் அறிவினுள் அருளாக நிறைந்து விளங்குகின்றன்.

அதிவீரராம பாண்டியர் இப்பாடலில் என்ன சொல்லுகிறர்? கற்ற கவி வல்லவர்கள் இந்திரலோக இன்பத்தை விரும்ப மாட்டார்கள். இறைவன் திருவருளையே நாடி, விரும்பி இருப்பார்கள் என்கிறர். உண்மைதானே! உயிரிடத்துக் கழிவிரக்கம் கொண்டு, எங்கோ அந்தகாரப் பெருவெளியில் உழன்று கொண்டிருக்கும் அதற்கு, அவ்வுயிர்க்கு உடம்பு கொடுத்து, கருவி கரணங்களைக் கொடுத்து அருள்பாலித்து, அவ்வுயிரைக் கடைத்தேற்றுகிறன் அன்றே! எனவே, கற்றவர்கள் இறைவனைத் தானே நாடுவார்கள்.

கற்றவர்களிடத்திலே அறிவு உண்டு. என்ன அறிவு அது? தெளிந்த அறிவு. நன்மை எது? தீமை எது? என்பதைப் பகுத்துப் பார்க்கும் அறிவு அது. திருவள்ளுவர் அவ் அறிவை, "மாசறு காட்சி" என்கிறர். குற்றம் இல்லாத, குற்றத்திலிருந்து நீங்கிய அறிவு. சிறந்த தெளிவான அறிவின் லட்சியம் யாது? நிலையில்லாத அழியக்கூடிய பொருள்களில் பற்று வைப்பதை விடுத்து, அழியாத நிலைத்த பொருள்களிடத்தில் பற்று வைப்பதே ஆகும். "பிறப்பென்னும் பேதைமை நீங்க, சிறப்பென்னும் செம்பொருள் காண்பது அறிவு" என்று வள்ளுவர் அறிவுக்கு இலக்கணம் இயம்புகின்றர்.

சிறப்பு என்னும் செம்பொருள் எது? எல்லாக் குற்றங்களிலிருந்தும் நீங்கித் திகழ்கின்ற பொருளே செம்பொருள், பரம்பொருள். சிவமே செம்பொருள். பிறப்பு என்னும் அறியாமை உடைய நோய் நீங்குவதற்குச் செம்பொருளை நாடிச் செல்வதே தூய அறிவு ஆகும்.

அத்தகைய தூய அறிவினை உடையவர்கள் கற்று வல்ல கவிவாணர்கள். எனவே அவர்கள் பரம்பொருளை, பரம்பொருள் இன்பத்தை நாடினர்கள். அதிவீரராமர் காலத்தில் வாழ்ந்த புலவர்கள் தங்கள் வாழ்க்கை நலனைக் கருதி, பொருள் பெறுவதையே லட்சியமாகக் கொண்டு மானிடர்களைப் போற்றிப் பாடினர்கள். இந்நிலை அதிவீரராமருக்குப் பிடிக்கவில்லை. இவர்களை மனத்துள் கொண்டு, கற்று வல்ல கவிவாணர்கள் பரம்பொருளைப் பாடுவார்கள் என்கிறர்.

அதிவீரராமரும் கற்றுவல்ல கவிவாணர். கவிஞர்களோடு தொடர்பு வைத்திருப்பவர். எனவே, அக்கவிஞர்களின் செயலாக இதைக் கூறுகிருர். இது அவருடைய செயலும் ஆகும். உன் திருவடியில் வைக்கும் அன்பே வேண்டுகிறேன்:

"வேண்டுவது ஒன்று; தமியன், எப்பிறப்பும்
வெந்தழல் நரகிடை விழினும்
காண்டகு சிறப்பின் அரம்பையர் சூழக்
கற்பக நீழல் வைகிடினும்
தூண்டரு சுடரே களாநிழல் அமர்ந்த
சோதியே கருவை நாயகனே
ஆண்டகாய் நினது திருவடிக் கமலத்து
அன்பெனும் அழிவுஇலாப் பொருளே."

தூண்டாத தீபம் போன்று நின்று, அஞ்ஞான இருளை ஓட்டும் விளக்கே! திருக்களா மரத்தின் கீழே எழுந்தருளிய ஞான ஒளியே! திருக்கருவை என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள இறைவனே! ஆண்மையில் சிறந்தவனே! எவ்விதப் பற்றுக்கோடும் இல்லாத அடியேன் நின்னிடத்து வேண்டுவது ஒன்று உள்ளது. அது யாதெனில், எந்தப் பிறவி எடுத்தாலும், கொடிய தீயமைந்த நரகத்தில் விழுந்தாலும், தெய்வப் பெண்கள் சூழ்ந்த கற்பக நீழலில் இருக்கப்பெற்ருலும் சரி; உன் திருவடியில் வைக்கும் அன்பு எனும் அழிவு இல்லாத பொருளையே வேண்டுகின்றேன்.

இறவாத இன்ப அன்பை இறைவனிடத்து வேண்டுகிருர் அதிவீரராமர். "கொடிய பாவம் செய்து, அதன் காரணமாக மீள முடியாத வெந்துயர் நரகத்தில் விழுந்து அழுந்தினுலும் சரி; புண்ணிய வினைகள் இயற்றி அதன் காரணமாகத் தேவலோக இன்ப வாழ்வு கிடைத்தாலும் சரி இறைவா! உன் திருவடியில் பதிக்கின்ற பேரின்பத்தையன்றி வேறு ஒன்றும் எனக்கு வேண்டியதில்லை" என்கிருர்.

"தூண்டு அருசுடரே!" தூண்டுவதற்கு வேண்டாத, தூண்ட அவசியம் இல்லாத தீபமே என இறைவனை அழைக்கிருர் அதிவீரராமர்.

பஞ்ச பூதங்களுள் நடுவாக விளங்குவது நெருப்பு. பஞ்சபூதங்கள் நிலம், நீர், தீ, வாயு, ஆகாயம் என்பவை. இவற்றுள் நிலம் நீர் இவற்றைக் கண்ணுல் காணலாமெனினும் இவை தம்மை விளக்கிக்காட்டி நிற்பன அல்ல. அதாவது ஒளியின் உதவி இன்றி இவற்றைப் பார்க்க இயலுமா? இயலாது. மண் என்னும் நிலமும் அப்படித்தான். இவையெல்லாம் உருவ வடிவங்கள்.

ஆகாயம் கண்ணுல் காண முடியாத ஒன்று; ஆனல் இருப்பதாக உணரக்கூடியது. இது அருவ உருவம்.

ஆனல் தீ இருக்கிறதே அதைக் கண்ணுல் காணவும் முடியும்; உணரவும் முடியும். நெருப்பு தன்னை விளக்கிக் காட்டி நிற்கிறது அன்ரே! அதே நேரத்தில் உருவம் அற்றதாக, இன்னதுதான் வடிவம் எனச்சொல்ல முடியாதவாறு, தான் அமைகின்றவாறு வடிவத்தை மேற்கொள்கிறது. இவ்வகையில் நெருப்பு ஆகிய சுடர் அரு உருவமாகவும் அமைகிறது.

இறைவன் உருவத் திருமேனி உடையவனுகவும், அருவத் திருமேனி உடையவனுகவும், அருஉருவத்திருமேனி உடையவனுகவும் காட்சி அளிக்கிருன்.

அருஉருவத் திருமேனிக்கு நெருப்பு மிகவும் பொருத்தமாக அமைகிறது. இருளை விலக்கிப் பொருளையும் தன்னையும் விளக்கி நிற்பது தீ. இறைவன் அஞ்ஞான இருளை ஒழிக்கிருன். தன்னை அடியவர்க்குக் காட்டி நிற்கிருன்.

எப்பொருளையும் தூய்மையாக்கிப் புனிதப் படுத்துவது நெருப்பு. இறைவன் ஆன்மாக்களைத் தூய்மையாக்கிப் புனிதம் அடையச் செய்கிருன். சான்ரேர், அடியார்கள் அனைவரும் இறைவனை ஜோதி சொருபமாகப் பாடிப் பரவியுள்ளனர்.

அதிவீரராம பாண்டியர் அவர்கள் வழி நின்று, எம்பெருமான் சிவனை, "தூண்டரு சுடரே" எனப்பாடி மகிழ்கிருர்.

ஒளி வடிவம் ஆன திருவண்ணுமலைத் தலத்தை நினைவு படுத்துவது போல, "தூண்டரு சுடரே" எனக் கூறி, நினைத்தாலே முக்தி கிடைக்கும் அற்புதத்தை எண்ணிப் பார்க்கிருர்.

"எரிவாய் நரகம் புகினும் எள்ளேன் திருவருளாலே இருக்கப் பெறினே"—சிவனே! உனது திருவருள் சக்தியாலே யான் வாழப் பெற்ருல், நரகம் புகுவதைக் கூட இகழ்ச்சியாக நினைக்க மாட்டேன் என்கிருர் மாணிக்கவாசகர்.

இறைமணப் பொங்கல் வாழி!

(புலவர் க. தில்லைக்கோவிந்தன்)

தில்லைவான் பதியுள் ஞானத் திருநடம் புரியும் கூத்தன்
தொல்லைசேர் உயிர்கள் உய்யத் தோயுமைந் தொழிலன் ஆகி
எல்லையாம் வீடு நல்கும் ஈறிலா அருளை நாடிக்
கொல்லைமான் ஏந்தி வாழ்வே குறியெனும் பொங்கல் வாழி!

தாயவள் மகவைச் சுட்டித் தந்தையை உணர்த்து மாபோல்
நாயகன் சிவமே என்னும் நயப்புற உயிர்கட் கெல்லாம்
மாயவல் வினையை நீக்கி மலர்ப்பதம் காட்டும் ஞாலத்
தாயவள் சக்தி என்னும் தைப்பெரும் பொங்கல் வாழி!

நான்மறை மகுடஞ் சூடும் நாதமாம் ஓங்கா ரத்துள்
வான்நிறை அகர உகர மகரமாம் எழுத்து நோக்கின்
கூன்பிறை அணிந்த வள்ளல் குலவுதன் சக்தி காண
ஊன்பொறை தவிர்த்தா னந்தம் ஊட்டுநற் பொங்கல் வாழி!

திருவைந் தெழுத்தின் சிகரமே சிவகுரு என்னத் தேர்ந்தோர்
இருவினை ஒப்புற மலபரி பாகம் இசைந்து நிற்பத்
திருவடிப் பேறருள் குருவடி வாகித் திண்ணிருள் மலத்தின்
கருவெந் திடவரும் பெம்மான் கண்ணுதற் பொங்கல் வாழி!

ஆற்றலன் பறிவுத் தெய்வ அன்னையார் குருதேவ் மைந்தன்
நாற்றிசைப் பொதுமை ஓங்கும் நன்னெறிச் சமயங் கண்டார்;
போற்றிசைத் தென்றும் அன்னார் புண்ணியப் பணிமேற் கொள்ளின்
ஏற்றமார் சிவோகம் பொங்கும் இறைமணப் பொங்கல் வாழி!

செய்திகள்

நிகழ்பவை:

23—1—84 திட்கட்கிழமையன்று பொங்கல் விடுமுறைக்குப் பின் ஸ்ரீ விவேகானந்த வித்யா வனக் குருகுலப்பள்ளி திறக்கப்படும்.

ஜனவரி மாதம் 24 ஆம் தேதி செவ்வாய்க் கிழமையன்று ஸ்ரீ விவேகானந்த ஜயந்தி ஆகும்.

அன்று ஸ்ரீ விவேகானந்த வித்யாவனக் குரு குல மாணவர்கள் இருபத்து நான்கு மணி நேரம் அகண்ட நாம பஜனையும், நண்பகல் ஒரு மணி நேரம் ஐக்கிய வணக்கமும் செய்வார் கள்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
இயற்றிய நூல்கள்

திருவாசகம்	பிரசார விலை ரூ.	23-00
ஸ்ரீமத் பகவத்கீதை 14-ம் பதிப்பு	,, ...	18-00
மஹாபாரதம்	,, ...	8-00
இராமாயணம்	,, ...	5-00
ஸ்ரீ தாயுமானசுவாமி பாடல்கள்	,, ...	6-00
ஸ்ரீராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரி	,, ...	5-50
தினசரி தியானம்	,, ...	4-50
ராஜயோக விளக்கம்	...	12-00
கர்மயோக விளக்கம்	...	10-00
பக்தியோக விளக்கம்	...	9-00
ஞானயோக விளக்கம்	...	8-00
பரமஹம்சரின் பெருமை	...	6-00
ஸ்ரீ விவேகானந்தர் ஜீவிதம்	...	6-00
கடவுளின் வடிவங்கள்	...	6-00
சந்தேகம் தெளிதல் பாகம்—1	...	5-50
சந்தேகம் தெளிதல் பாகம்—2	...	5-50
விவேகானந்த விவரணம்	...	4-00
சகோதரி நிவேதிதை	...	3-75
ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதம்	...	3-50
ஸ்ரீ சாரதாதேவியார் சரிதம்	...	3-00
அனுஷ்டான வேதாந்தம்	...	3-00
எதிர்கால இந்தியா	...	3-00
திருக்கயிலாயகிரி யாத்திரை	...	3-00
பஜனைப்பாடல்கள்	...	3-00
தேவரகசியம் (முதலிய கதைகள்)	...	2-50
தாயுமானவர் இயற்றிய		
கருணைகரக் கடவுள் விரிவுரை	...	3-50
பரிபூரணானந்தம் ஷை	...	3-00
சின்மயானந்த குரு ஷை	...	3-00
ஆனந்தமானபரம் ஷை	...	3-00
சுகவாரி ஷை	...	3-00
மௌனகுரு வணக்கம் ஷை	...	3-00
எங்கும்நிறைகின்றபொருள் ஷை	...	2-50
மலைவளர் காதலி ஷை	...	1-50
பரசிவ வணக்கம் ஷை	...	1-00
கண்ணன் என்னும் கடவுள்	...	2-50
அறம் வளர்த்த நம்பி (நாடகம்)	...	2-50
ஹரிச்சந்திரன் ஷை	...	2-00
தவப்புதல்வர்கள்	...	2-00
பாதுகாபட்டாபிஷேகம் ஷை	...	1-75
விரதவீரர் பீஷ்மர் ஷை	...	2-50
விபீஷணன் சரணாகதி ஷை	...	1-50
பரமஹம்சர் பாமாலை	...	1-50
காயத்ரீ	...	1-50
நன்மக்களைப் பெறுதல்	...	1-50
மாணாக்கன்	...	1-25
செத்தவர்கள் நம்மோடு பேசுகிறார்களா?	...	1-25
சைவன் யார்?	..,	1-25
இறைவணக்கம்	...	1-00
குழந்தைகளின் களிக்கூடம்	...	1-00
இராவண தத்துவம்	...	1-00

வாலி மோட்சம் (நாடகம்)	...	1-00
ஏகலைவ்யனின் குருபக்தி (நாடகம்)	...	1-00
தானவீரன் கர்ணன் (நாடகம்)	...	1-00
மார்க்கண்டேயன் (நாடகம்)	...	1-00
பிரஹ்லாதன் (நாடகம்)	...	1-00
தபோபலன் (நாடகம்)	...	1-00
பார்வதி,லக்ஷ்மி,சரஸ்வதி கர்வபங்கம்	...	1-00
இந்துமதமும் கிறிஸ்துவமதமும்	...	1-00
நோய்க்கு இடம் கொடேல்	...	1-00
அருள் விருந்து (பௌண்ட் செட்)	...	10-00
*ஆத்ம சக்தி	...	1-00
*சக்தி தத்துவம்	...	0 90
*சூரியநாராயணன்	...	0-75
தெய்வீக மகிமைகள்	...	0-75
*ஆலய வழிபாடு	...	1-25
*சிவதத்துவம்	...	0-70
*மனிதனது நிஜசொரூபம்	...	0-70
தாயுமானவர் ஆலயத்தில் தத்துவ அமைப்பு	...	0-60
நன்னெறிகளும் அருள்வாக்குகளும்	...	0-60
*கணபதி	...	0-60
*முருகக்கடவுள்	...	0-50
விஷ்ணு தத்துவம்	...	0-50
கர்மகாண்டம் எது? ஞானகாண்டம் எது?		0-50
வர்ணாச்ரம தர்மம்	...	0-30
அருள் விருந்து 1 to 25 ஒவ்வொன்றும்	...	0-30
விவேகானந்தரின் வீர கர்ஜனை	...	0-30
கந்தர் அநுபூதி	...	0 25
The Bhagavad Gita (11th Imp.)	...	24-00
Tirukkural (with plastic cover)	...	8-00
The Indian National Education	...	10-00
Ramakrishna lives Vedanda	...	8-00
Mahaveer Sri Hanuman	...	7-75
The Bhagavad Gita (Small Size)	...	6-00
Man Making Message	...	7-00
Ramayana (with plastic cover)	...	7-00
Mahabharata ,,	...	6-00
Daily Divine Digest (DELUXE)	...	6-00
Daily Divine Digest (Ordinary)	...	4-00
Sri Krishna-The Manifest Divinity ,,	...	6-00
Facets of Brahman or The Hindu Gods	...	5-00
Sri Vishnu Sahasranama Stotram	...	4-00
Siva Sahasranama Stotram	...	3-50
Bheeshma The Superman	...	3-50
*Introducing the Gita	...	2-00
Holy Bible—In the Light of Vedanta	...	1-50
Reminiscences of Master Mahashaya	...	1-50
The Garland of Paraaparam	...	1-50
*Key to Higher Life	...	1-25
*The student	...	1-25
The Teacher	...	1-00
The School	...	1-00
The Nursery School	..	1-00

ஸ்ரீ தாயுமான சுவாமி தபோவனம்

லக்ஷ்மிபுரம், வெளிப்பட்டனம், ராமனுதபுரம்-623 535.

குருபூஜையும் அந்தர்யோகமும்

1984 ஜனவரி 26, 27 தேதிகளில்

தை மாதம் விசாக நக்ஷத்திரத்தன்று ஸ்ரீ தாயுமான சுவாமிகளின் மஹா சமாதி நிகழ்ந்தது. ஆகையால் ஆண்டுதோறும் குருபூஜை தை மாதம் விசாக நக்ஷத்திரத் தன்று நிகழ்ந்து வருகிறது. 1984 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26 ஆம் தேதி வியாழக் கிழமை இவ்வைபவம் நிகழும். அன்பர்களும், தாய்மார்களும் இதில் கலந்துகொள் ளும்படி வேண்டிக்கொள்ளப்படுகிறார்கள். நிகழ்ச்சிமுறை வருமாறு:

26—1—84 காலை

மணிமுதல்	மணிவரை	
4-30		திருப்பள்ளி எழுச்சி
6-00	7-00	சிவ நாம ஜபம்
8-00	9-00	ஸ்படிகலிங்கத்தின் வாயிலாகத் தாயுமான சுவாமிக்கு அபிஷேகம் அதே வேளையில் பஜனையும் நடைபெறும்
9-00	9-30	தாயுமானவர் பாடல் சமர்ப்பணம்
9-30	11-45	சிவ சஹஸ்ரநாம அர்ச்சனை, தனித்தனியாகப் பூ சாத்தி வணங்குதல்
11-45	12-00	நிவேதனம், தீபாராதனை
12-15		மகேஸ்வர பூஜை, அன்னப் பிரசாதம் வழங்குதல்
		மாலை
4-00	5-00	பஜனை
5-00	5-30	தபோவனக் களிக்கூட குழந்தைகளின் கலாநிகழ்ச்சி
5-30	7-30	ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் தலைமையில் தக்க பேச் சாளர்களைக் கொண்டு அறவுரை
7-30	8-30	கரூர் விவேகானந்த உயர்நிலைப்பள்ளி மாணுக்கர்களால் தவப்புதல்வர்கள் நாடகம்.

அந்தர்யோகம்

1984 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 5 மணி முதல் அன்று இரவு 7-30 மணிவரை அந்தர்யோகம் நிகழும். இதில் கலந்துகொள்ள விரும்புகிறவர்கள் உணவுச் செலவிற்கு ரூபாய் எட்டு ஸ்ரீ தாயுமான சுவாமி தபோவனத் தில் நேரில் செலுத்தி பதிந்துகொள்ள வேண்டும். உள்ளூர் அன்பர்களும் தாய்மார் களும் பதிவின்றி நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளலாம்.

இங்ஙனம்

சித்பவானந்த

Edited by SWAMI NITHYANANDA,

Printed & Published by Swami Sankarananda at Tapovanam Printing School, Tirupparaitturai, Tiruchi Dt.